24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 40
விலை - 40ரூபா

சுடர் 34 | கதிர் 151 | சித்திரை 15ஆம் நாள் | ஞாயிற்றுக்கிழமை | 28 ஏப்ரல் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050


## குழந்தை உள்பட 6 சிறுவர்களுடன் 16பேர் சாய்ந்தமருது சம்பவத்தில் சாவு

### தற்கொலைதாரிகள் என்கிறது பொலிஸ்

கொழும்பு, ஏப். 28
அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருதில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற தற்கொலைக் குண்டு வெடிப்பு மற்றும் துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் 16 பேர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித் துள்ளனர். உயிரிழந்தவர்களில் 6 சிறுவர்கள், 3 பெண்கள் உள்ளடங்கு கின்றனர்.
துப்பாக்கிச் சூட்டில் சிக்கி பெண்

38



## வடமராட்சி கிழக்கில் வெடிபொருள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 28
வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில்தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்துக்குரிய வெடி பொருள்கள் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
வீட்டுத் திட்டத்துக்கு அரச காணியை ஜேசிபி

37

# ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகளின் பெரும் கோட்டையாக கிழக்கு!

## கூண்டோடு அழித்தொழிப்போம் என்று ரணில் சபதம்



கொழும்பு, ஏப்ரல் 28
இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் பெரும் கோட்டையாக கிழக்கு மாகாணம் செயற்படுகின்றமை தற்போது உறுதியாகியுள் ளது. அங்குள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளைக் கூண்டோடு அழித் தொழிப்போம். அதேவேளை, நாட்டின் ஏனைய இடங்களிலும் மறைந் துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளையும் இல்லாதொழிப்போம். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

37

## அமெரிக்கர்களை வெளியேறுமாறு கோரிக்கை

### இராஜாங்கத் திணைக்களம்

கொழும்பு, ஏப். 28
பயங்கரவாத அச்சுறுத்தல் காரணமாக அமெரிக்கர்களை இலங்கையிலிருந்து வெளியேறு மாறு அமெரிக்க இரா

37

## இரண்டு இஸ்லாமிய அமைப்புக்களுக்குத் தடை

கொழும்பு ஏப். 28
தேசிய தௌஹீத் ஜமாத் மற்றும் ஜமியத்துல் மில்லாது இப்ராஹிம் ஆகிய இஸ்லாமிய அமைப்புக் களை இலங்கைக்குள் தடை செய்ய அரசதலைவர் நடவடிக்கை எடுத்துள்ளார்.
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரச தலைவர் என்ற ரீதியில், 2019 (1) இலக்க அவசர நிலைசட்டத்தின் கீழுள்ள அதிகாரங்களுக்கு

37

### பாதுகாப்புக்கு மத்தியிலும்

## யாழ். நகரில் கைவரிசையை காட்டிய வாள் வெட்டுக்குழு

யாழ்ப்பாணம், ஏப். 28
யாழ்ப்பாண நகரில் நேற்று இரவு 7.30 மணியளவில் வாள்களுடன் கடைகளுக்குள் புகுந்தவர்கள் பணத் தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். தற்போது

37

## இந்தியா மீண்டும் தாக்குதல் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 28
இலங்கையில் மற்றுமொரு தாக்குதல் குறித்த எச்சரிக்கையை இந்தியப் புலனாய்வு பிரிவு

37

## பொலிஸாரால் தேடப்படும் பெண் கிளி. தேவாலயத்துக்கு வந்தார்

### ஈஸ்ரர் அன்று அவரைக் கண்டேன் என்று பங்குதந்தை தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப். 28
உயிர்த்த ஞாயிறு தினமான கடந்த 21ஆம் திகதி காலை 6 மணிக்கும் முன்பாக ஓர் பெண்

37

## யாழ்ப்பாணத்தின் பாதுகாப்புக்கு 6 ஆயிரம் பொலிஸார் குவிப்பு

### பொதுமக்கள் அச்சமடைய தேவையில்லை என்கிறார் பிரதிப் பொலிஸ்மா அதிபர்

யாழ்ப்பாணம், ஏப். 28
யாழ்ப்பாண மாவட்டத்தின் பாதுகாப்புக்காக 6 ஆயிரம் பொலிஸார் வரையில் களமிறக்கப்பட்

37

## காட்டிக்கொடுத்தவனுகளே இந்தா காசை சப்புங்கடா

### தாக்குதலுக்கு முன்னர் பணக்கட்டுக்களை வீசியெறிந்த சாய்ந்தமருது ஆயுததாரிகள்

கொழும்பு, ஏப். 28
'அடேய் காட்டிக் கொடுத்தவனுகளா, இந்தா இந்த காசை எடுத்து சப்புங்கடா, உங்களுக்காகத்

37

## சஹ்ரான் குழுவினரே வவுணதீவில் 2 பொலிஸாரை சுட்டுக்கொன்றனர்

### ஐ.எஸ்.ஐ.எஸ்ஸின் முதல் தாக்குதல்: விசாரணையில் திடுக்கிடும் தகவல்

கொழும்பு, ஏப். 28
ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கத் தின் வழிநடத்தலில் இயங்கும் தேசிய தௌஹீத் ஜமா அத் அமைப்பு கடந்த வருடம் நவம்பர் மாதம் 30ஆம்

37

## சாய்ந்தமருதில் சாவடைய முன்னர் எடுக்கப்பட்ட காணொலி வெளியீடு

கொழும்பு, ஏப். 28
சாய்ந்தமருதில் தற்கொலை செய்து உயிரிழந் ததாகப் பொலிஸாரால் கூறப்படும் நபர்கள், உயிரிழப்பதற்கு முன்னர் எடுத்த காணொலி இணையத்தளங்களில் நேற்று வெளியிடப்பட் டுள்ளது.
அந்தக் காணொலியில் பேசும் நபர்,

37

## நிந்தவூரிலும் தற்கொலை அங்கிகள் நேற்று மீட்பு!

### கிழக்கில் தொடர்கின்றது பதற்றம்



37


நிலையான வைப்புக்களுக்கு கவர்ச்சிகரமான வருடாந்த வட்டி
13.13% வ.வ
வ.தே.வ. 13.06%
13 மாதங்களுக்கு
55 வயதுக்கு மேற்பட்ட சகல சிரேஷ்ட பிரஜைகளுக்கும் கவர்ச்சிகரமான வட்டி
011 5 411 411
அழையுங்கள் : 011 5 411 411
SDBவங்கி
Fitch Rating BB+ (stable), Reg. No. PD62PQ

# 24 மணிநேரத்துள் 20பேர் கைதாகினர்

கொழும்பு, ஏப். 28

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலமையைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினர் தீவிர சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் 20 பேரை சந்தேகத்தில் கைது செய்துள்ளனர்.

பொலன்னறுவை மற்றும் மிரிஹான பகுதிகளில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கொம்பனி வீதிப் பகுதியில் வைத்து மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். காத்தான்குடி, அளுத்கம, பூவரசன் குளம் மற்றும் பண்டாரவளை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது தலா ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பண்டாரவளை பகுதியில் கைது செய்யப்பட்டவரிடமிருந்து ஒரே இலக்கத் தகடுகளை கொண்ட உந்துருளிகள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளன.

தெகிவளையில் சந்தேகத்துக்கிடமான உந்துருளியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மாவனெல்லையில் மூவருமாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடம் குண்டுத் தாக்குதல் தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(ஒ.5)

# தாக்குதலுக்கு ஒத்திகைபார்த்த ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர்

## வெளியானது தகவல்

கொழும்பு, ஏப். 28

காத்தான்குடி, பாலமுனையில் உள்ள காணியில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் உந்துருளியை வெடிக்க வைத்து ஒத்திகை பார்த்தமை தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

வெடிப்பில் சிதறிய உந்துருளியின் பாகங்களும் காணியில் காணப்பட்டன.

கடந்த 16ஆம் திகதி அந்தப் பகுதியில் ஒத்திகை பார்க்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து அந்தக் காணியின் உரிமையாளர் கடந்த 18ஆம் திகதி பொலிஸில் இவ்வாறு வெடிப்பு சம்பவமொன்று தனது காணியில் இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த உந்துருளி வேறு மாவட்டத்திலிருந்து அந்தப் பகுதிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ஒ.5)

# கொச்சிக்கடை தேவாலயத்தில் மறுசீரமைப்புப் பணி ஆரம்பம்

கொழும்பு, ஏப். 28

நாட்டில் கடந்த 21ஆம் திகதி நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் பெரிதும் பாதிக்கப்பட்ட தேவாலயங்களில் ஒன்றான கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோணியார் தேவாலயத்தின் மறுசீரமைப்புப் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

பொலிஸார் மற்றும் முப்படைகளின் முழுமையான பாதுகாப்புக்கு மத்தியில் மறுசீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தாக்குதல் நடத்தப்பட்ட நாள் முதல் இதுவரையான காலப் பகுதி வரை குறித்த பகுதி அதி உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டு, அந்த இடத்துக்குள் செல்ல அனைவருக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மறுசீரமைப்புப் பணிகளின் ஈடுபட்டுள்ள ஊழியர்களும் முழுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, உள்ளே அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். எதிர்வரும் சில தினங்களில் மறுசீரமைப்புப் பணிகள் நிறைவடையும் என பாதுகாப்புப் பிரிவு தெரிவிக்கின்றது.

அதன்பின்னர், அந்தப் பகுதிக்குள் பொதுமக்கள் அனுமதிக்கப்படுவார்கள் எனவும் பாதுகாப்பு பிரிவினர் அறிவித்துள்ளனர். (ஒ.5)

# ஐ.தே.கவின் மாநகரசபை உறுப்பினர் கைது

கொழும்பு, ஏப். 28

கொழும்பு கொம்பனித்தெரு பள்ளிவாசலில் நேற்று முன்தினம் மீட்கப்பட்ட வாள்கள் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாநகரசபை உறுப்பினர் நூர்தீன் மொஹமட் தார்யுதீன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

(ஒ.5.71)

# வாள்கள், கத்திகளுடன் பிரதி மேயர் கைது

## மகிந்த அணியைச் சேர்ந்தவர்

கொழும்பு, ஏப். 28

நாட்டில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை அடுத்து நீர்கொழும்பு பெரியமுல்லை பிரதேசத்தில் நேற்று சனிக்கிழமை காலை முதல் படையினர் மற்றும் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பைத் தொடர்ந்து நீர்கொழும்பு பிரதி.மேயர் முஹம்மத் அன்ஸார் செய்னுல் பரீஸ் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரது வீட்டிலிருந்து வாள்கள் இரண்டும், நீண்ட கத்தியும், கூரிய ஆயுதமும் கைப்பற்றப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கு ஆதரவு வழங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ.5.71)

# பொலிஸ் ஊரடங்கு

கொழும்பு, ஏப். 28

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக, தொடர்ந்து இரவு நேரங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பொலிஸ் ஊரடங்குச் சட்டம், நேற்றிரவும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

நேற்றிரவு 10 மணி தொடக்கம் இன்று அதிகாலை 4 மணி வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, சம்மாந்துறை, சவளக்கடை மற்றும் சாய்ந்தமருது ஆகிய பகுதிகளில் மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் பொலிஸ் ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

(ஒ.5)

# மஸ்கெலியா பள்ளிவாசலில் கத்திகள் மீட்பு

கொழும்பு, ஏப். 28

மஸ்கெலியாவில் உள்ள பள்ளிவாசலில் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் 49 கத்திகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களஞ்சியசாலைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதே, அவை கைப்பற்றப்பட்டுள்ளன. மரம் வெட்டும் வாள்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

(ஒ.5)

# பொலிஸாரால் தேடப்பட்ட வாகனங்கள் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஏப். 28

பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நான்கு வாகனங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தெஹிவளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய, தெஹிவளை சரணங்கர வீதியில் அமைந்துள்ள வீடொன்று நேற்று முன்தினம் மாலை சோதனைக்குட்படுத்தப்பட்டது. சந்தேகத்துக்கு இடமான உந்துருளி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. ஸ்கூட்டர் ரக உந்துருளியானது பொலிஸாரால் ஏற்கனவே தேடப்பட்டுவந்த வாகனமாகும்.

சங்கரிலா ஹோட்டலில் தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்டு உயிரிழந்தவரின் பெயரில் இந்த உந்துருளி பதிவு செய்யப்பட்டுள்ளது. உந்துருளியின் தற்போதைய உரிமையாளரும் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 25 ஆம் திகதி வத்தளை நாயக்கந்த பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து சந்தேகத்துக்கு இடமான லொறி பொலிஸாரால் மீட்கப்பட்டது. அதுவும் பொலிஸாரால் தேடப்பட்டு வந்ததாகும்.

இந்த வாகனமும் சங்கரிலா ஹோட்டலில் தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்டு உயிரிழந்தவரின் பெயரில் பதியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த 24 ஆம் திகதி வறக்காப்பொல, அங்குருவெல்ல பகுதியிலுள்ள வீடொன்றை சோதனைக்குட்படுத்திய சந்தர்ப்பத்தில் அங்கிருந்து பொலிஸாரால் தேடப்பட்டு வந்த வாகனம் ஒன்றும் உந்துருளி ஒன்றும் கைப்பற்றப்பட்டிருந்தன.

பொலிஸாரால் தேடப்பட்டு வந்த வாகனங்களில் நான்கு வாகனங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்னமும் 4 உந்துருளிகள் தேடப்பட்டு வருகின்றன.

(ஒ.5)

# வவுனியாவில் 16 முஸ்லிம்கள் சந்தேகத்தில் கைது

வவுனியா, ஏப். 28

வவுனியா நகர பள்ளிவாசலை சூழவுள்ள பகுதிகளில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது 11பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். ஹைஏஸ் வாகனம் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இலுப்பையடிச் சந்தி, சூசைப்பிள்ளையார்குளம் சந்தி, கந்தசாமி கோவில் வீதியுடன் இணையும் பசார் வீதிகள் தடைசெய்யப்பட்டு வாகனங்கள், பொதுமக்கள் உள்செல்ல தடை விதிக்கப்பட்டதுடன், சுற்றிவளைக்கப்பட்டு பொதுமக்கள், மற்றும் வாகனங்கள் கடுமையான சோதனை நடவடிக்கைகளின் பின்னரே வெளிசெல்ல அனுமதிக்கப்பட்டிருந்தன.

காலை 9 மணிமுதல் மதியம் 1.30 மணிவரை சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்தப் பகுதிக்குள் உள்ளடங்கும் பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் சோதனைக்குள்ளாக்கப்பட்டதுடன் அங்கு பணிபுரிபவர்களின் பெயர் விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

(ஒ.5.110)

# மக்கள் வழங்கிய தகவலால் பெரும்இடர் தவிர்க்கப்பட்டது

## கிழக்குக் கட்டளைத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 28

தகுந்த நேரத்தில் பொதுமக்கள் தகவல்கள் வழங்காமல் இருந்திருந்தால், சாய்ந்தமருதில் தற்கொலைக் குண்டுதாரிகளால் மீண்டும் ஒரு அசம்பாவிதம் நேர்ந்திருக்கும். பிரதேசவாசிகள் வழங்கிய தகவல்களால் இத்தகைய நிலமை தவிர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறு கிழக்கு மாகாணக் கட்டளைத் தளபதி அருண ஜெயசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினர் இணைந்து பெரிய சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தோம். தற்கொலைக் குண்டுதாரிகள் மற்றும் வெடி குண்டுகளைத் தயாரித்த இடங்கள் என்பன தொடர்பிலான தகவல்கள் கிடைக்கப் பெற்றன.

சாய்ந்தமருது பகுதியில் சந்தேகத்துக்கிடமான நபர்கள் தங்கியிருந்த வீடொன்றை முற்றுகையிட்டபோது அந்த வீட்டிலிருந்த முஸ்லிம் தீவிரவாதக் குழுவால் பாதுகாப்பு படையினரின் மீது துப்பாக்கிச்சூட்டு பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

சந்தேக நபர்கள் தங்கியிருந்த வீட்டை முற்றுகையிட்ட வேளை வெடிப்புச் சம்பவமொன்றும் இடம்பெற்றது. அந்தப் பகுதியை சோதனைக்கு உட்படுத்திய போது துப்பாக்கிச்சூடு மற்றும் தற்கொலை குண்டுத்தாக்குதல் மேற்கொண்டு உயிரிழந்த 15 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. அதில் 6 சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர்.

உயிரிழந்தவர்களில் துப்பாக்கிச்சூட்டு பிரயோகத்தை மேற்கொண்டோர் மற்றும் தற்கொலை குண்டுதாரியாக செயற்பட்டு குண்டை வெடிக்க வைத்து உயிரிழந்தோர் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார்.

(ஒ.5.61)

# பள்ளிவாசலில் கைப்பேசிகளை தீயிட்டவர்கள் 3பேர் கைது

அம்பாறை, ஏப். 28



பொத்துவிலில் உள்ள பள்ளிவாசலின் பின்புறம் கைபேசி மூன்றை தீயிட்டுக் கொளுத்திய மூவர் பொத்துவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பள்ளிவாசல் நிர்வாகிகள் மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக கூறும் பொலிஸார் அரைகுறையாக எரிந்த நிலையில் இருந்த கைப்பேசிகளை மீட்டுள்ளனர். இவை ஏன் எரிக்கப்பட்டன என்பது குறித்து விசாரணைகள் நடக்கின்றன. (ஒ.5)



உங்கள் மகனின்
பார்வையில்
நீங்கள் ஒரு ஹீரோ

உங்கள் தேகாரோக்கியத்தை
போலவே உங்கள் நிதிசார்
பலமும் அவர்களுக்கு அவசியம்.

AIA இன்ஷூவரன்ஸ்

ஓய்வூதியம், ஆரோக்கியம் மற்றும்
ஆயுள் காப்புறுதி
அழையுங்கள் 0112 310310

CELEBRATING 100 YEARS
AIA HEALTHIER, LONGER, BETTER LIVES




## பசு கன்றுடன் விற்பனைக்கு

நல்ல இன கறவை J.C (கன்னி) பசுக்கன்றுடன் விற்பனைக்குண்டு. (CS/24964) (11,17)

**077 948 2799**

S.சிவா, 70, குருசோவீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## வாடகைக்கு

நல்லூர் குறுக்கு வீதியில் 6 பெட்ரூம் உள்ள வீடு 3 அட்டாச் பாத்ரூம். 2 கொமன் பாத்ரூம். 3 கோல் உள்ள வீடு Gest House Lodge ஆகவோ, வீடாகவோ பாவிப்பதற்கு வாடகைக்குக் கொடுக்கப்படும். (CS/24993) (11,17)

**077 267 2888**

## பணியாள்கள் தேவை

விற்பனை பிரதிநிதிகள் ஆண், பெண் இருபாலாரும் தேவை. அடிப்படைச் சம்பளம் 15000, கொமிஷன் வழங்கப்படும். AD வாகன அனுமதிப்பத்திரம் உடைய அனுபவமுள்ள சாரதி தேவை. (CS 00603)(14,17)

உடன் தொடர்பு கொள்ளவும்: **077 348 4837**

**சுஜித் என்டப்பிறைஸ்**

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் சுப்பர் மார்கற் ஒன்றுக்குப் பின்வரும் பணியாளர்கள் தேவை.

- **விற்பனையாளர் - ஆண், பெண்**

**077 447 9815** (TX/10047) (11,17)

## காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டை கிராம அலுவலர் பிரிவில் நில.பர ஒன்று (1). குளி எட்டு தசம் ஆறு ஆறு (8.66) வீட்டுடன் கிணறும் கொண்ட ஆதனம் விற்பனைக்குண்டு. (CS/24991)(11,17)

**077 072 9898, 021 224 2713**

## பணியாளர் தேவை

பருத்தித்துறையில் உள்ள தங்குமிட விடுதிக்கு அனைத்து வேலைகளும் செய்யக்கூடிய பணியாளர் தேவை.

**077 163 2330**




YAMAHA
Revs Your Heart

மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்கி
ரூபாய் 3.5 மில்லியனுக்கும் மேலான பெறுமதியுள்ள BRAND NEW
WAGONR PREMIUM ஐப்
HYBRID
பரிசாக வெல்லுங்கள்

Fascino
விலை ரூபா 252,900/- மாதாந்த வட்டி ரூபா 6,227 /-

RAY ZR DISC VERSION
விலை ரூபா 269,900/- மாதாந்த வட்டி ரூபா 6,845 /-



அத்துடன் பெறுமதியுள்ள வீட்டு
எலக்ட்ரானிக் பொருட்களையும்
வெல்லுங்கள்

விரையுங்கள்!

உடன் பதிவுக்கு 0117 609 609



## GLOBAL TAMIL MATRIMONY

ONE PLATFORM . ONE COMMUNITY

**திருமண பந்தத்தில் இணையவிருக்கும்**
**மணமக்களுக்காக உதித்திருக்கும் உன்னதமான**

# இணையத்தள திருமணசேவை

இச்சேவையானது எளிமையான முறையிலும் இலகுவாக பாவிக்கக்கூடிய வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.இத்திருமணசேவையானது உங்களுக்கு பொருத்தமான வாழ்க்கைத்துணையை **கண்டுபிடிக்கும்வரை இலவசமானது.**

**உங்கள் தகவல்களை பதிவுசெய்து பயன்பெறுவீராக**

www.globaltamilmatrimony.com

Global Tamil Matrimony Ltd **நிறுவனம்**
United Kingdom (UK) **இல்**

**பதிவுசெய்யப்பட்டுள்ளதோடு அந்நாட்டு சட்டதிட்டங்களுக்கு அமைவாக செயற்பட்டுவருகின்றது.** (m.12144) (13.17)



**உதயன்**

விளம்பர தொடர்புகளுக்கு
**advt@uthayan.com,**
**021493 1111**



**E.S Printers**

357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com



## SpiritMAX Engineering (Pvt) Ltd

Turning your vision into values

**அனைத்து விதமான கட்டட நிர்மாண வேலைகள் மற்றும் கட்டட ஆலோசனைகள்**

(All Kinds of Civil Engineering Consultancy and Construction Services)



- Architectural Design
- Geo Technical Investigations
- Structural Design
- MEP Design
- Drafting
- Interior Design
- Cost Estimation
- Supervision
- Construction & Renovation

No. 03,2nd Lane,Palaly Road, Jaffna.
Tel : 021 221 4142, 077 3784474, 077 3989791
e.mail : info@spiritmax.lk



**மாணவர்களுக்கான புதிய கற்கை நெறிகளுக்கு உடனடியாக விண்ணப்பிக்கவும். May 2019 முதல் வாரம் ஆரம்பம்.**

### Computer Certificate Courses *( 3 – 4 months Part time)*

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- AutoCAD 2D & 3D Modeling
- Java Programming

### Certificate in Craft Course (6 மாதங்கள் முழு நேரம் -தமிழ் மொழி மூலம்)

- குளிரூட்டுதல் பயிற்சி நெறி -Refrigeration & Air-Conditioning Mechanic

மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது.
**(TVEC )** பதிவு இலக்கம் : **P25/0014, Facilities : Hostel & Sports**

For More Information : **DIRECTOR**

**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**

**VADDUKODDAI, JAFFNA , SRI LANKA.**

**Tel :0213213139/0212250975 E-mail: ejcit@sltnet.lk**

# சாய்ந்தமருதில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் வெளியாகியுள்ள ஒளிப்படங்கள்












நாட்டின் பல்வேறு இடங்களிலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈஸ்ரர் நாள் அன்று இடம்பெற்ற தொடர் தற்கொலைத் தாக்குதல்களில் அப்பாவிக் குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் உள்ளிட்ட 263பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். இவர்களின் ஆத்மசாந்திக்கான அஞ்சலி வழிபாடு இடம்பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் ஏற்பாட்டில் அவரது வட்டுக்கோட்டை அலுவலகத்தில் கடந்த 25ஆம் திகதி அஞ்சலி வழிபாடு நடைபெற்றது. இதில் பெருமளவான பொதுமக்கள் பங்கேற்றனர். (ஒ,5)

## புலிகளுடன் தமிழர்கள் இணைய சிங்கள அரசியல்வாதிகளே காரணம்

### அமைச்சர் ரிசாத் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 28

சிங்கள இனவாத அரசியல் தலைவர்களின் செயற்பாடுகளாலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாகினர். அந்த அமைப்பின் பின்னால் தமிழ் மக்கள் திரள்வதற்கும் சிங்கள அரசியல்வாதிகளின் செயற்பாடே காரணம். இவ்வாறு அமைச்சர் ரிசாத் பதியூதீன் தெரிவித்துள்ளார்.

பி.பி.சி. செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்கொலைத் தாக்குதல் தொடர்பில் விசாரணை களை நடத்தும் பாதுகாப்பு பிரிவினர் இதுவரை எந்தவொரு அரசியல்வாதியையும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புப்படுத்தவில்லை. அரசியல்வாதிகளே இவ்வாறான குற்றச்சாட்டுக் களை முஸ்லிம் அரசியல்வாதிகள் மீது சுமத்திவருகின்றனர். எதிர்கால அரசியல் லாபத்தைப் பெற்றுக்கொள்ளவே அவர்கள் இவ்வாறு மேற்கொள்கின்றனர்.

தமது சுயலாப அரசியலுக்காக இந்தப் பயங்கரவாத தாக்குதலை வேறொரு திசையை நோக்கி கொண்டு சென்றுள்ளனர். சிங்கள மக்களின் வாக்குகளை பெறுவதற்காக கடந்த கால சிங்கள அரசியல்வாதிகள், தமிழ் மொழியை தடை செய்தனர். தமிழ் மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்கு மறுப்புத் தெரிவித்தனர். தமிழர்களின் உரிமைகளைப் பறித்தனர்.

இவ்வாறான செயற்பாடுகளை சிங்கள அரசியல்வாதிகள் முன்னெடுத்ததாலேயே சிறிய குழுவாக ஆரம்பித்த தமிழீழ விடுதலைப் புலிகள், பின்னர் முழுத் தமிழ்ச் சமூகத்தையும் இணைத்து வளர்ந்தது. தமிழ் சமூகம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைத்ததுள துரோகத்தை சிங்கள அரசியல்வாதிகளே மேற்கொண்டனர்.

தற்கொலைத் தாக்குதலானது இஸ்லாத்துக்கு எதிரான செயற்பாடு. இதனை வன்மையாக கண்டிப்பதாகத் தெரிவித்தார். (ஒ,5)

## மட்டக்களப்பு தற்கொலைதாரி அடையாளம் காணப்பட்டார்

கொழும்பு, ஏப். 28

மட்டக்களப்பு சியோன் கிறிஸ்தவ தேவாலயத்தில் கடந்த 21ஆம் திகதி தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்திய சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடியைச் சேர்ந்த 34 வயதுடைய முகம்மது நஸார் முகம்மது ஆஸாத் என்பவரே, இந்தத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளார் என்றும் காத்தான்குடி பொலிஸார் கூறினர்.

காத்தான்குடியைச் சேர்ந்த தற்கொலைக் குண்டுதாரி, கல்முனை முதலாம் பிரிவில் திருமணம் செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரிக்கப்படும் தற்கொலைக் குண்டுதாரியின் தயாருடன், குண்டுதாரியின் சகோதரர் மற்றும் மாமா ஆகியோரை, நேற்றுக் காலை காத்தான்குடி பெருங்குற்றப் பிரிவுப் பொறுப்பதிகாரியான உதவிப் பொலிஸ் பரிசோதகர் முகம்மட் மற்றும் சார்ஜன் முஸ்தபா உள்ளிட்ட குழுவினர் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் பிணவறையில் வைக்கப்பட்டுள்ள, தற்கொலைக் குண்டுதாரியின் தலையை அடையாளம் காட்டுவதற்காக அழைத்துச் சென்றனர்.

இதன்போது, சட்ட மருத்துவ அதிகாரி ஜயசூரிய முன்னிலையில், தற்கொலைக் குண்டுதாரியின் தலையை, அவரின் தாயார், சகோதரர் மற்றும் மாமா ஆகியோர் சந்தேகத்துக்கு இடமின்றி முகம்மது நஸார் முகம்மது ஆஸாத் என அடையாளம் காட்டினர். (ஒ,5)

## தற்கொலைத் தாக்குதலுடன் பாகிஸ்தானுக்கும் தொடர்பா?

### இந்திய ஊடகம் சந்தேகம் கிளப்புகிறது

கொழும்பு, ஏப். 28

கடந்த ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்தவ தேவாலயங்களையும், நட்சத்திர விடுதிகளையும் இலக்குவைத்து நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரியாகக் கருதப்படும் சஹ்ரான் ஹாசிம் 2018 ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு பயணம் மேற்கொண்டிருந்ததாக இந்திய ஊடகமான 'பிஸ்னஸ் டுடே' தெரிவித்துள்ளது.

இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்.ஐ.எஸ்.) இயக்கம் இலங்கையில் கால்பதிப்பதற்கு பல வருடங்களாகவே முயற்சித்து வந்திருக்கும் நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தங்கள் கட்டுப்பாட்டில் இருந்து இலங்கை முஸ்லிம் மக்களை பலவந்தமாக வெளியேற்றியதும், தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரில் பாக்கிஸ்தானின் உதவியுடன் இலங்கை வெற்றி பெற்றதும் இஸ்லாமிய அரசு இயக்கம் இலங்கையில் கால்பதிப்பதை இலகுபடுத்தியிருக்கின்றது என்று அந்தச்செய்தியில்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் இஸ்லாமிய அரசு இயக்கத்தின் பிரசன்னம் இந்தியாவுக்குப் பெரிய அச்சுறுத்தலாக அமைந்திருக்கிறது. கடந்த 2013 ஆம் ஆண்டு இலங்கை முஸ்லிம்களுடன், இந்திய தமிழ் முஸ்லிம்களும் உளவு பார்த்தார்கள் என்ற குற்றச்சாட்டில் தேசிய புலனாய்வு முகவர் அமைப்பினால் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட இரு நாட்டைச் சேர்ந்த முஸ்லிம்களும் கொழும்பில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்துடன் தமக்குத் தொடர்பிருப்பதை விசாரணைகளின் போது ஒத்துக்கொண்டதாக குறிப்பிட்டுள்ளது இந்திய ஊடகம். (ஒ,5)

# பருத்தித்துறை, நெல்லியடி எட்டு மணிநேரம் முற்றுகையிடப்பட்டுச் சோதனை

## சந்தேகத்தில் ஐவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.28

பருத்தித்துறை ,நெல்லியடிப் பிரதேசங்கள் நேற்று பொலிஸார் மற்றும் அதிரடிப் படையினரின் முற்றுகைக்குள் கொண்டுவரப்பட்டு 8 மணிநேரம் தேடுதல் வேட்டை இடம்பெற்றது.

அந்தத் தேடுதலில் 5 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு, மட்டக்களப்பு மாவட்டங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பங்களை அடுத்து கடந்த ஏழு நாள்களாகவே நாட்டில் அசாதாரண நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுகளில் கிழக்கு, மற்றும் தெற்கு மாகாணங்களில் தீவிர தேடுதல் வேட்டைகள் இடம்பெற்றுவருகின்றன.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். வெடி பொருள்கள், ஆயுதங்கள் என பொலிஸாரால் மீட்கப்பட்டு வருகின்றன.

வடக்கிலும், பொலிஸார் தமது பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர். வடக்கில் பல பகுதிகளை அடையாளம் கண்டு, சந்தேகத்துக்கிடமானவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். அவ்வாறே நேற்று பருத்தித்துறை, நெல்லியடிப் பிரதேசம் பொலிஸார், அதிரடிப்படையினரின் முற்றுகைக்குள் கொண்டுவரப்பட்டது. அந்தப் பிரதே சத்தில் இருந்து வாகனங்கள் எவையும் வெளிச் செல்லவோ, வெளியில் இருந்து உள் வரவோ அனுமதிக்கப்படவில்லை, காலை 6 மணிக்கு ஆரம்பித்த சுற்றிவளைப்பு பிற்பகல் 2 மணிவரை இடம்பெற்றது. சந்தேகத்துக்கிடமான வீடுகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது. இதன்போதே அந்தப் பகுதியில் ஐவர் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.





கைது செய்யப்பட்டவர்கள் காத்தான்குடி, புத்தளம் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும், ஒருவர் பருத்தித்துறையில் திருமணம் முடித் துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.(ஐ-21,26,37,173)

### பாதுகாப்பு தொடர்பில் அதிபர்களுக்கு கூட்டம்

கொடிகாமம், ஏப். 28

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாடசாலைகளின் பாதுகாப்பு தொடர்பில் பாடசாலையின் அதிபர்களுக்கான கூட்டம் நேற்று இடம்பெற்றது. கொடிகாமம் பொலிஸ் நிலைய மண்டபத்தில் முற்பகல் 9 மணியளவில் பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மீசாலை, கொடிகாமம், கச்சாய், உசன், விடத்தற்பளை, எழுதுமட்டுவாழ், கெற்பேலி, போக்கட்டி, அல்லாரை, வரணி, மந்துவில், மிருசுவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 28 பாடசாலை அதிபர்கள் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் மாணவர்களின் பாதுகாப்புத் தொடர்பில் பெற்றோர்களை அழைத்துக் கலந்துரையாடலை நடத்துமாறு அதிபர்களுக்கு பொலிஸாரால் அறிவுறுத்தப்பட்டது. (ஐ-159)

### அலங்கார உற்சவம்

அளவெட்டி,ஏப்.28

யாழ்ப்பாணம் உரும்பிராய் வடக்கு வங்கியடி அருள்மிகு அண்ணமார் ஆலய அலங்காரத் திருவிழா நாளை திங்கட் கிழமை ஆரம்பமாகி 10 நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை சங்காபிசேகத்துடன் அலங்கார உற்சவம் நிறைவு பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ-63)

### அபிவிருத்தி குழு கூட்டம் பிற்போடப்பட்டது

வவுனியா,ஏப்.28

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் அபிவிருத்திக் குழு கூட்டம் திகதியிடப்படாமல் பிற்போடப்பட்டுள்ளதாக பாடசாலையின் அதிபர் த. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

பாடசாலையின் அபிவிருத்திக் குழு கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமை காரணமாக கூட்டத்தை நடத்துவதை தவிர்க்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இன்று கூட்டம் இடம்பெறாது என்பதுடன் மீண்டும் கூட்டம் நடத்துவது தொடர்பான அறிவித்தல் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். (க)



நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக நாவற்குழிப் பாலத்தில் கடமையாற்றும் பொலிஸார் மற்றும் படையினருக்கு நாவற்குழி இளைஞர் கழகத்தினர் மனித நேய அடிப்படையில் தற்காலிக கொட்டகை அமைத்து கொடுத்துள்ளனர். (ஐ- 159)

## 2 கிராமங்கள் சுற்றிவளைப்பு முல்லைத்தீவில் இருவர் கைது

முல்லைத்தீவு.ஏப்.28

முல்லைத்தீவு மாவட்டத்தின் இரண்டு கிராமங்கள் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதன்போது இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் நகர் பகுதி மற்றும் மக்கள் கூடும் இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை தொடக்கம் முள்ளிவளை ஹிச்சிராபுரம்,மற்றும் உண்ணாப்புலவு வரையான பகுதிகளில் படையினர் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டு சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் போது வீட்டில் உள்ள உரிமையாளர்களை அடையாளப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டபோது, புல்மோட்டையைச் சேர்ந்த நபர் ஒருவர் ஹிச்சிராபுரத்தில் தங்கி இருந்த வேளை, அவரை படையினர் கைது செய்துள்ளதுடன், அதே கிராமத்தில் மற்றும் ஒருவரையும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து முள்ளியவளை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்கள்.

கைதுசெய்யப்பட்ட நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது. (க-ரி3)

## குருநாகல் நகரத்துக்குள் புர்கா அணிவதற்கு தடை

குருநாகல்,ஏப்.28

நாட்டின் தேசிய பாதுகாப்பை கருத்திற் கொண்டு குருநாகல் மாநகர எல்லைக்குள் வரும் முஸ்லிம் பெண்களுக்கு புர்கா தடையென குருநாகல் மாநகர சபை முதல்வர் துசார சன்ஜீவனால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் சபையில் எந்தவிதமான எதிர்ப்பும் இன்றி ஏகமானதாக நிறைவேறியுள்ளது.

குருநாகல் மாநகர சபைக் கூட்டம் இடம்பெற்றபோது குருநாகல் மாநகர சபை முதலவர் துசார சன்ஜீவவினால் கொண்டு வரப்பட்ட இந்தத் தீர்மானம் 21 மாநகர சபை உறுப்பினர்களின் ஆதரவுடன் நேற்று ஏகமானதாக நிறைவேறியது.

இதில் ஆளும் தரப்பிலான சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி உறுப்பினர்கள், எதிர்த்தரப்பிலான ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள், மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் அனைவரும் இந்தத் தீர்மானத்துக்கு ஏகமானதாக ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்தவ மக்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தமான தாக்குதலை கண்டித்தும் பலியான அனைத்து மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை கிறிஸ்தவ சமயத் தலைவர் கார்டினல் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் மூலமாகத் தெரிவித்துக் கொள்வதென இந்த சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபை தமது ஊடக அறிக்கையின் போது நாட்டின் தேசிய பாதுகாப்புக் கருதி முஸ்லிம் பெண்கள் முகத்திரையை களைந்து பாதுகாப்புத் தரப்புக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளொன்றையும் விடுத்துள்ளது.

குருநாகல் மாநகர எல்லைக்குச் செல்லும் முஸ்லிம் பெண்களுக்கு புர்கா தடை விதிக்கப்பட்டுள்ளது என்பது மிகவும் கவனத்தில் கொள்ள வேண்டியது குறிப்பிடத்தக்கது. (க)



# 10 ஆயிரம் வீடுகளில் 4,750 வீடுகள் கட்டி முடியும் நிலையில்

யாழ்ப்பாணம்,ஏப்.28

வடக்கு - கிழக்கு மாவட்டங்களில் முதற்கட்டமாக 10 ஆயிரம் வீடுகளில் 4ஆயிரத்து 750 வீடுகள் விரைவில் முடிவுறுத்தப்படும் எனத் தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், மறுவாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

10 ஆயிரம் கல்வீடுகளை வடக்கு கிழக்கு மாகாணங்களில் போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டு முதல் காலாண்டின் ஒதுக்கீட்டில் 4ஆயிரத்து 750 வீடுகள் அமைப்பதற்கான நிதி மாவட்ட செயலகங்களுக்கு ஒதுக்கப்பட்டு, பயனாளிகளினால் அமைக்கப்பட்டு வருகின்றன.

எனத் தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், மறுவாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் செயலர் வே. சிவஞானசோதி தெரிவித்துள்ளார். (க)

## எது எடுத்தாலும் 10 ரூபா சிற்றுண்டிகளுக்கு வரவேற்பு

சாவகச்சேரி, ஏப்.28

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட சிற்றுண்டி நிலையத்தில் எந்தச் சிற்றுண்டி எடுத்தாலும் பத்து ரூபா விலை வரையறுக்கப்பட்டுள்ளதால் அங்கு பெருமளவு சிற்றுண்டிகள் விற்பனை செய்யப்பட்டு வருவதைக் காணமுடிகிறது.

உழுந்து வடை, கடலை வடை ,மோதகம், வாய்ப்பன், றோல், சுசியம், பணிஸ், கொம்பு பணிஸ், போன்றவற்றுடன் தேநீரும் பத்து ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

பாடசாலைகள் விடுமுறை முடிவடைந்து மீண்டும் ஆரம்பமாகும் நிலையில் எதிர்வரும் நாள்களில் மேலும் சிற்றுண்டி வகைகளின் விற்பனை அதிகரிக்குமெனத் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சிற்றுண்டி நிலையத்துக்கு கொடிகாமத்திலிருந்து சிற்றுண்டி வகைகள் வழங்கப்பட்டு வருகின்றதென தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரப் பகுதியில் சுயதொழில்வாய்ப்பின்றி பலர் உள்ளதை அவதானிக்க முடிகிறது. சிற்றுண்டிகள் உற்பத்தி செய்து வழங்கக்கூடிய சுயதொழில் முயற்சியாளர்கள் சங்க நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு தேவையான சிற்றுண்டி வகைகளை தயாரித்து வழங்க முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

சங்கத்துடன் தொடர்பு கொண்டு அனுமதி பெறுபவர்கள் மக்களுக்கு சுகாதாரமான உணவுப் பொருள்கள் கிடைக்க உறுதி செய்வதற்காக சாவகச்சேரி நகரப் பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர் அல்லது சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் ஆகியோருடன் தொடர்பு கொண்டு தேவையான அறிவுறுத்தல்களைப் பெற்று சிற்றுண்டி வகைகளை வழங்கமுடியுமென சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர். (ஐ-9)



## புனர்வாழ்வும், புதுவாழ்வும் நிறுவனத்தால் காஞ்சூரமோட்டை கிராமத்துக்கு அன்பளிப்பு

வவுனியா, ஏப். 28

வவுனியா வடக்கின் மீள்குடியேற்ற கிராமமாகிய காஞ்சூரமோட்டை மக்களின் நலன்கருதி ஐக்கியராச்சியத்தை தளமாகக் கொண்டியங்கும் 'மறுவாழ்வும் புதுவாழ்வும்' நிறுவனத்தால் அண்மையில் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் சோலர் மின்விளக்கு என்பன வழங்கப்பட்டன.

மேற்படி கிராமத்தில் வதியும் சகல குடும்பங்களுக்குமான மலசலகூடம் மற்றும் கிணறுகள் என்பவற்றைக் கட்டி வழங்க மேற்படி அமைப்புசார் பிரதிநிதிகள் உறுதிவழங்கியுள்ளதுடன் ஏழு குடும்பங்களுக்கு விவசாய முயற்சிக்காக தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களும் வழங்கப்படவுள்ளதுடன் துரித கதியில் மக்கள் குளிப்பதற்காக இரண்டு தண்ணீர்த் தொட்டிகள் கட்டிவழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி நிகழ்வில் வவுனியா வடக்குப் பிரதேச செயலர் க.பரந்தாமன், கிராம அலுவலர் ரஜீவன், மறுவாழ்வும் புதிய வாழ்வும் அமைப்பின் தலைவர் சர்வேஸ்வரன், அந்த அமைப்பின் செயலர் ஹென்றி ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-422)

## கொல்லங்கிராய் வீதியை சீரமைக்குமாறு கோரிக்கை

தென்மராட்சி தெற்குப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்து 9 வருடங்கள் நிறைவடைந்த போதிலும் முக்கிய வீதிகள் பல இன்னும் சீரமைக்கப்படவில்லை என்று அந்தந்தப் பகுதி மக்கள் கவலைதெரிவிக்கின்றனர்.

அவற்றைச் சீரமைத்து வழங்குமாறு 9 வருடங்களாக கோரிக்கை விடுக்கின்ற போதும் அரச அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் போன்றோரால் ஏற்றுக் கொள்ளப்படாத நிலை காணப்படுகிறது என மக்கள் தெரிவித்தனர்.

கைதடி, நாவற்குழி, மறவன்புலவு போன்ற பகுதிகளில் வசிக்கும் மாணவர்கள், கடற்றொழிலாளர்கள், அரச பணியாளர்கள், விவசாயிகள், பொதுமக்கள் போன்றோர் பயன்படுத்தும் ஏ 32 நாவற்குழி கேரதீவு வீதியிலிருந்து ஏ 9 வீதியுடன் இணைக்கும் கொல்லங்கிராய் வீதியைச் சீரமைத்து வழங்குமாறு பல வருடங்களாகக் கோரி வருகின்ற போதிலும் அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வரும் துரித கிராமிய அபிவிருத்தித் திட்ட வேலைகளில்கூட இந்த வீதிகள் சீரமைப்புக்கு நிதி ஒதுக்கப்படவில்லையெனவும் தெரிவித்தனர்.

ஏ32வீதியிலிருந்துவீதியைக் குறுக்கறுத்துச் செல்லும் தொடருந்துப் பாதை வரையான பகுதி சாவகச்சேரி பிரதேச சபைக்கும் தொடருந்து பாதையிலிருந்து ஏ 9 வரையான வீதி சாவகச்சேரி நகரசபைக்கும் சொந்தமான பகுதிகளில் உள்ளன. சாவகச்சேரி நகரசபையினர் அந்தப் பகுதியில் உள்ள மயானம் வரையான வீதியைச் சீரமைத்துள்ளபோதிலும் அதிலிருந்து தண்டவாளம் வரையும் நீண்டகாலமாகச் சீரமைக்கப்படவில்லை. விதிகளின் இருபுறமும் நெல் வயல்கள் காணப்படுகின்றன. நெற்பயிர்ச்செய்கை ஆரம்பம் தொடக்கம் அறுவடை வரையான காலப்பகுதியில் பெருமளவு வாகனங்கள் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றன. கனரக வாகனங்களின் போக்குவரத்தால் பல இடங்களில் குன்றும் குழியும் காணப்படுகின்றன. ஈருருளிகள் உந்துருளிகளில் செல்வோர் வருடம் முழுதும் சிரமங்களை அனுபவிக்கின்றனர். மழை காலங்களில் இந்த குன்றுகளில் மழைவெள்ளம் நீண்டநாள்கள் தேங்கி நிற்பதால் மாணவர்கள் உட்பட அனைவரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனைக்கருத்தில்கொண்டு வீதிகளைச் சீரமைத்து வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி உறுப்பினர்கள் மற்றும் பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம் போன்றவற்றில் கடந்த 9 வருடங்களாக முறையிட்டும் பயன் கிடைக்கவில்லையென்று அங்குள்ளவர்கள் கவலை தெரிவித்தனர். (து-9)

### அகில இலங்கை சமூக விஞ்ஞானப் போட்டி:

## தென்மராட்சிவலயத்தில் 19 மாணவர்கள் வெற்றி

தென்மராட்சி, ஏப். 28

பாடசாலை மாணவர்களுக்கிடையில் அகில இலங்கை மற்றும் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட சமூக விஞ்ஞானப் போட்டிகளில் தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த இரு மாணவர்கள் தேசிய நிலையிலும் 19 மாணவர்கள் அகில இலங்கை ரீதியிலும் வெற்றிபெற்றுள்ளனர் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அறிவித்துள்ளார்.

தேசிய நிலைப் போட்டியில் தரம் 6 வகுப்பில் நாவற்குழி மகா வித்தியாலய மாணவி ஜே.கெற்சிகா முதலிடத்தையும் தரம் 10 வகுப்பில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய மாணவன் கு.ஜனகன் இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

**அகில இலங்கை நிலைப் போட்டிகளில்:**

200 மாணவர்களுக்குக் கீழ் உள்ள பாடசாலைகளில் தரம் 6 வகுப்பில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தைச் சேர்ந்த கு.சரண்யா மூன்றாமிடத்தையும் ஜொ.மாதுளன் ஒன்பதாம் இடத்தையும் தரம் 7 பிரிவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தைச் சேர்ந்த ச.சேனுஜா முதலிடத்தையும் மந்துவில் சிறிபாரதி வித்தியாலய மாணவன் எஸ்.சுலக்சன் மூன்றாமிடத்தையும் தரம் 8 வகுப்பில் மட்டுவில் கமலாசனி வித்தியாலய மாணவன் ஏ.கஜவேந்தன் எட்டாமிடத்தையும் தரம் 10 வகுப்பில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய மாணவன் கு.ஜனகன் இரண்டாமிடத்தையும் யோ.யஜித் மூன்றாமிடத்தையும் தரம் 11 வகுப்பில் மந்துவில் சிறிபாரதி வித்தியாலய மாணவி பீ.சுகிர்தா ஐந்தாமிடத்தையும் 200 மாணவர்களுக்கு மேல் 500 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் தரம் 6 வகுப்பில் நாவற்குழி மகா வித்தியாலய மாணவி ஜே.கெற்சிகா முதலிடத்தையும் தரம் 10 வகுப்பில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவி எஸ்.தேனுஜா நான்காமிடத்தையும் தரம் 12/13 வகுப்பில் நாவற்குழி மகா வித்தியாலய மாணவி ரி.யுனிஸ்டா எட்டாமிடத்தையும்

501க்கு மேல் உள்ள மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் தரம் 6 வகுப்பில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவன் ஏ.அக்சயன் ஒன்பதாம் இடத்தையும் தரம் 7 வகுப்பில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவன் எஸ்.மாதுளன் ஆறாம் இடத்தையும் தரம் 8 வகுப்பில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவன் எஸ்.டிலக்ஸன் ஆறாமிடத்தையும் தரம் 9 வகுப்பில் வரணி மத்திய கல்லூரி மாணவி எஸ்.வசிகா மூன்றாமிடத்தையும் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவன் எம்.டினோஜன் நான்காமிடத்தையும் தரம் 11 வகுப்பில் வரணி மத்திய கல்லூரி மாணவன் ஆர்.நிதர்சன் முதலிடத்தையும் தரம் 12 / 13 வகுப்பில் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாணவி கே.துஷியந்தினி இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளனர் எனவும் அறிவித்துள்ளார். (து-9)



தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மயிலிட்டி துறைமுக அபிவிருத்திப் பணிகளின் ஒரு பகுதி நிறைவு பெற்ற நிலையில் வேலைகளின் ஒப்பந்தகாரரால் அண்மையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலரிடம் கையளிக்கப்பட்டது என பிரதேச செயலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகள்

கொடிகாமம், ஏப். 28

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வரணி சமூதாய அடிப்படை வங்கியின் சமுர்த்திக் குடும்பங்களுக்கான புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகள் வரணி மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மை யில் நடைபெற்றன.





பிரதேச சமுர்த்தி முகாமையாளர் சி.சிவமதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினர் சி.பிரபாகரன், தென்மராட்சி சமுர்த்திச் சங்க முகாமையாளர் இ.உதயகுமார், கருத்திட்ட முகாமையாளர் க.ஜெயந்தன், வங்கிக் கட்டுப்பாட்டுச் சபை தலைவர் வி.நகுலேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டனர். பெரியோர்களுக்கு கிடுகு பின்னுதல், தோரணங் கட்டுதல், சங்கீதக் கதிரை, சமநிலை ஓட்டம், ஊசிநூல் கோர்த்தல், சாக்கோட்டம், மெதுவான ஈருருளி ஓட்டம், வேகநடை, கயிறிழுத்தல் போன்ற விளையாட்டுக்கள் இடம்பெற்றன.

சிறுவர்களுக்கு போத்தலில் தண்ணீர் நிரப்புதல், பணிஸ் சாப்பிடுதல், தடை தாண்டல், மா ஊதி இனிப்பு எடுத்தல், பழம் பொறுக்குதல், தடை தாண்டல், யானைக்கு கண் வைத்தல் போன்ற விளையாட்டுக்கள் நடத்தப்பட்டன.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஐ-159)

# 11 ஆம் வட்டாரத்தில் 33 வேலைத்திட்டங்கள்

கொடிகாமம், ஏப்.28

சாவகச்சேரி பிரதேச சபையின் 13 ஆம் வட்டாரத்தில் மக்களால் 33 வேலைத் திட்டங்கள் முன்னுரிமைப்படுத்தப் பட்டன.

மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள்வது தொடர்பான சாவகச்சேரி பிரதேச சபையின் 13 ஆம் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு அண்மையில் எழுதுமட்டுவாழ் பொதுச் சந்தை மண்டபத்தில் நடைபெற்றது.

கருத்தமர்வுக்கு வட்டாரத்தில் உள்ள எழுதுமட்டுவாழ்தெற்கு, கரம்பகம், எழுதுமட்டுவாழ் வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டனர்.

காத்தான் செட்டி வீதி, கரம்பகம் பாட்சாலை வீதி ,கிளாலி கரம்பகம் இணைப்பு வீதி,கொல்பிட்டி கரம்பகம் இணைப்பு வீதி , நாகர் கோவில் வீதி, வேதக்கால் வீதி, கொவ்வைக்கட்டு வீதி, எழுதுமட்டுவாழ் பாடசாலை வீதி, காயன்கடவை கிராவில் வீதி, பனிக்கையடி வீதி, கிளாலி கரம்பகம் இணைப்பு வீதி, கரம்பகம் மலசலகூடம், ஏ9 பனிக்கையடி இணைப்பு வீதி, படித்த மகளிர் திட்டம் முதன்மை வீதி, எழுதுமட்டுவாழ் வடக்கு மயானம் சீரமைப்பு, மலசலகூடம் வீட்டுத் திட்டம், எழுதுமட்டுவாழ் வடக்கு வீதி, பழைய தபாற் கந்தோர்வீதி, குடிதண்ணீர்க் கிணறு ,முகமாலை பாடசாலை இணைப்பு வீதி,

பாலம் சீரமைப்பு, ஒல்லாந்தர் வீதி, மருதங்குளம் வீதி, கருந்தளிர் வீதி,

நூலகம் அமைத்தல், ஸ்ரீ கணேசா பாடசாலை வீதி, குரங்குகளைக் கட்டுப்படுத்தல், கரம்பகம் முன்பள்ளி மலசலகூடம், வீரபத்திரர் சனசமூக நிலைய மலசலகூட வசதி, கரம்பகம் விளையாட்டு மைதானம், விநாயகர் சனசமூக நிலைய மேற்கு வீதி, கெற்பிட்டிவிடத்தற்பளை வீதி, எழுதுமட்டுவாழ் சந்தை பொது மலசலகூட வசதி ஆகிய 33 வேலைத் திட்டங்கள் முன்னுரிமைப் படுத்தப் படுத்தப்பட்டன. இவற்றில் மிக அவசியம் எனக் கருதும் அபிவிருத்தித் திட்டங்களை ஸ்ரிக்கர் ஒட்டி முன்னுரிமைப்படுத்துமாறு தவிசாளர் கேட்டுக் கொண்டார்.

57 ஸ்ரிக்கர்கள் தொடக்கம் 10 ஸ்ரிக்கர் வரை மக்களால் முன்னுரிமைப்படுத்தி ஒட்டப் பட்டன. அவை பெற்ற வாக்குகள் அடிப்படையில் வாசித்துக் காட்டப்பட்டு மக்களின் விருப்புக்கமைய முன்னுரிமை அடிப்படையில் தெரிவினைமேற்கொண்டுஅனுப்பி வைக்கப்படுமென தவிசாளர் தெரிவித்தார். (ஜ-159)



## மாணவர்களுக்கு இலவசயோகா பயிற்சி

கொடிகாமம், ஏப்.28

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் தரம் 9 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான அடிப்படை யோகாப் பயிற்சிகள் செரண்டிப் சிறுவர் இல்லத்தால் இலவசமாக வழங்கப்பட்டன.

பாடசாலையில் கல்லூரி அதிபர் திருமதி விமலாதேவி விமலநாதன் தலைமையில் ஒரு வாரப் பயிற்சியாக அண்மையில் நடைபெற்றது.

செரண்டிப் சிறுவர் இல்ல யோகா பயிற்சிவிப்பாளர் பு.பிரணவன் இந்தப் பயிற்சியை வழங்கினார்.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் இலவச யோகாப் பயிற்சிகளை செரண்டிப் சிறுவர் இல்லம் வழங்கவுள்ளது. எனவே யோகா பயிற்சியைப் பெற விரும்பும் பாடசாலைகள் செரன்டிப் சிறுவர் இல்லத்தின் 0775571950 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-159)

## உதவி வழங்கல்

யாழ்ப்பாணம்,ஏப்.28

குப்பிளான் தெற்கில் இடிமின்னல் தாக்கியதில் உயிரிழந்த இருபெண்கள் உட்படமூவரின் குடும்பங்களுக்கு சமுர்த்தி சமூகபாதுகாப்பு நிதியத்தில் இருந்து சுன்னாகம் சமுர்த்தி வங்கி ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா ரூபா 15 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளது.

பிரதேசசெயலர் சி. ஜெயகாந்தின் முயற்சியால் கடந்த 17 ஆம் திகதி காலை யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், மேலதிக மாவட்டச் செயலர் (காணி) எஸ்.முரளிதரன். பிரதேசசெயலர் சி.ஜெயகாந்த் மற்றும் சுன்னாகம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் தி.சசிகுமார், ஏழாலை தெற்கு பிரிவுக்கான சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் க.சிவரூபன், ஏழாலை தெற்கு கிராம அலுவலர்ஏ. அஜந்தன், பொருளாதார அபிவிருத்தி அலுவலர் தி.செந்தூரன், அயல்பகுதி கிராம அலுவலர்கள். உட்பட பலரும் கலந்து கொண்டு இந்த உதவியை வழங்கி வைத்தனர். (க)



## மக்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம். ஏப்.28

மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள்வது தொடர்பான மக்கள் சந்திப்பு நல்லூர் பிரதேச சபையின் இரண்டாம் வட்டார்த்தில் அண்மையில் இடம்பெற்றது.

கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்தில் வட்டார உறுப்பினர் கு.மதுசுதன் மற்றும் தவிசாளர் ஆகியோரது இணைதலைமையில் இடம்பெற்றது.

இதில் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மக்களால் முன்மொழியப்பட்டு வாக்களிக்கப்பட்டது. (ஜ)

## 12 குடும்பங்களுக்கு மின்சார வசதி

கொடிகாமம், ஏப். 28

பொருளாதார நிலையில் பின்தங்கிய 12 குடும்பங்களுக்கு மின்சார வசதி கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டன.

துரித கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தென்மராட்சி பிரதேசத்தில் மின்சார வசதி அற்ற குடும்பங்களுக்கு மின் இணைப்பினை வழங்க தலா 25 ஆயிரம் ரூபா வீதம் நிதி வழ்ங்கியிருந்தார்.

25 குடும்பங்களுக்கு மின்இணைப்பு வழங்கவென ஒதுக்கப்பட்ட நிதியில் முதற்கட்டமாக வரணிப் பகுதியைச் சேர்ந்த 12 குடும்பங்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-159)

## மம்மில் கணபதி பக்தி கானங்கள் இறுவட்டு வெளியீடு

மாங்குளம் அம்பகாம் மம்மில் பிள்ளையார்ஆலயத்தில் நடைபெற்ற பொங்கல் உற்சவத்தில் மம்மில் கணபதி பக்தி கானங்களின் இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி சித்திரை பௌர்ணமி தினத்தில் நடைபெற்றது.

கலை நிகழ்வுகளாக முல்லைஸ்வரம் இசைக்கலைஞர்களின் பக்தி கானங்கள், கச்சேரி என்பன இடம்பெற்றன. (க-222)



## மதிப்பளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.28

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ப்ரா திட்டத்தின் கீழ் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட கட்டுரை மற்றும் ஓவியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு உரும்பிராய் கிராமிய உழைப்பாளர் சங்க தலமையகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் தலைமை உரையினை தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளர் நா.இன்பம் நிகழ்த்தினார்.

தொடர்ந்து கட்டுரை போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பணப் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை யாழ்ப்பாண மாவட்ட பூந்தளிர் மகளிர் அமைப்பின் தலைவி இ.தர்மராயினி, தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க வடக்கு மாகாண கள அலுவலகர் த.தாட்சாயினி, தேசிய மீனவர் ஒத்திழைப்பு இயக்க கள அலுவலகர் ரீ.சித்திரா ஆகியோர் வழங்கி வைத்தனர். (ஜ-160)

## கல்விச் சுற்றுலா

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்ப்பாணம் புத்தூர் சோமேஸ்கந்தா வித்தியாலய மாணவர்கள் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு பலாலி வானூர்தி நிலையத்தை அண்மையில் பார்வையிட்டனர்.

பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் உட்பட 60 பேர் வருகைதந்ததாக யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைகளின் தலைமையகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஜ)



## 32 கருத்திட்டங்களுக்கு 30 மில்லியன் ஒதுக்கீடு

வலி.மேற்கு.ஏப். 28

ரிப் - கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தில் இனம் காணப்பட்ட 32 கருத்திட்டங்களுக்கு 30 மில்லியன் ரூபா கிடைக்கப் பெற்றுள்ளது.

இவ்வாறு நிதி ஒதுக்கப்பட்ட 32 கருத்திட்டங்களின் விவரங்கள் தொடர்பில் தேசியக் கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் வடக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலர் வி.சிவஞானசோதி மாவட்டச் செயலர் நா.வேதநாயகனுக்கு அறிவித்துள்ளார்.

இதில் வலி.தென்மேற்குப் பிரதேச செயலகத்துக்குட்பட்டதாக 3 கருத்திட்டங்களும், பருத்தித்துறை ஊர்காவற்றுறை முறையே ஒவ்வொரு கருத்திட்டங்களும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு 5 கருத்திட்டங்களும், கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்கு 4 கருத்திட்டங்களும், வலி.மேற்குப் பிரிவுக்கு 4 கருத்திட்டங்களும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்கு 14 கருத்திட்டங்களுக்குமாக மொத்தம் 32 கருத்திட்டங்கள் அபிவிருத்தி செய்யப் படவுள்ளன. (ஜ-50)

## சிறிவிநாயகர் ஆலயத்துக்கு ஆகம விதிப்படி மண்டபம்

மன்னார்.ஏப்.28

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களின் துரித அபிவிருத்தி செயற்றிட்ட நிதியில் துரித அபிவிருத்தி வேலைத் திட்டத்தில் மடுக்கரையில் அமைந்துள்ள சிறிவிநாயகர் ஆலயத்துக்கு ஆகம விதிப்படி மூலஸ்தான மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் கடந்த 25ஆம் திகதி இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் திருக்கேதீச்சர திருப்பணிச்சபை உறுப்பினர் ம.நடேசானந்தன், நானாட்டான் பிரதேச சபையின் உபதவிசாளர் புவனம், உறுப்பினர்கள் ஜொனி, ஜென்சி ,மாகாண சபை முன்னாள் உறுப்பினர் றிப்கான் பதியுதீன், ஆலய நிர்வாகத்தினர் அறநெறி ஆசிரியர், மாணவர்கள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மடுக்கரை சிறிவிநாயகர் ஆலயத்தின் மூலஸ்தானத்துக்கான அடிக்கல்லை நட்டு வைத்தனர்.

குறித்த நிதி வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவ கலாநிதி சிவமோகன் ஐந்து லட்சம், அமைச்சர் றிஷாட் பதியுதீன் ஐந்து லட்சம், செல்வம் அடைக்கலநாதன் மூன்று லட்சம் என இதற்கான நிதியை ஒதுக்கியிருந்தனர். இந்த கட்டுமானத்துக்கு மொத்தம் 48 இலட்சம் ரூபா செலவாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-213)

## இளைஞனின் சடலம் மீட்பு

கொடிகாமம், ஏப். 28

தவறான முடிவெடுத்து இளைஞன் ஒருவர் தூக்கில்தொங்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் மீசாலை மேற்கில் அண்மையில் இடம் பெற்றது.

சிறி இந்திரஜித் வயது 23 என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார். உறவினருடன் வசித்து வந்த குறித்த இளைஞன் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் இந்த முடிவை எடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக சடலம் வைக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-159)

## குடிதண்ணீர் திட்டத்தை விரிவாக்க கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.28

நவாலிவடக்குகுழாய்மூலமான தண்ணீர் திட்டம் விரிவு படுத்தப்பட வேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது. தற்போது புலவர் வீதியூ டாக நவாலி தெற்கு கொத்துக்கட்டி சி.பி.எம்வீதி வரை செல்லும் குடிதண்ணீர்த்திட்டம்நவாலிவடக்கு சாட்டியூடாக முதன்மை வீதிக்கு விரிவுபடுத்த திட்டம் முன்வைக்கப் பட வேண்டும் என மானிப்பாய் பிரதேசசபை உறுப்பினர் வன்னியசேகரம் கோரிக்கை விடுத்துள்ளார். (க-50)

# வீட்டுத் திட்டக் கட்டடங்களுக்கு அனுமதி பெறாவிடின் நிதித் தடை

## மன்னார் பிரதேச சபை தீர்மானம்

மன்னார்,ஏப்.28

**வீட்டுத்திட்டப் பயனாளிகள் கட்டடங்களுக்கான அனுமதியைப் பெற்றிருக்காவிடின் இரண்டாம் கட்ட நிதியை இடைநிறுத்த உரிய திணைக்களங்களுக்கு அறிவிக்க வேண்டும் என மன்னார் பிரதேசசபையில் தீர்மானிக்கப்பட்டது.**

மன்னார் பிரதேச சபைப் பகுதிக்குள் நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுத் திட்டங்களின்போது பிரதேச சபையின் சட்டத்திட்டங்களுக்கு அமைவாக பயனாளிகள் செயல்படாமையாலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மன்னார் பிரதேச சபையின் 13ஆவது பிரதேச சபையின் மாதாந்தஅமர்வு கடந்த வாரம் இடம்பெற்றது. இதன் போது மன்னார்பிரதேச சபை எல்லைப் பகுதிக்குள் அமைக்கப்படும் வீடுகள் சம்பந்தமாக ஆராயப்பட்டது.

இதன்போது மன்னார் மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மன்னார் நகரப் பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்படும் வீடமைப்புத் திட்டங்களின்போது மன்னார் பிரதேச சபையின் சட்டத்திட்டங்களுக்கு ஏதுவாக இந்தத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதில்லையென தெரிவிக்கப்பட்டது.

அதாவது மன்னார் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பயனாளிகளுக்கு வீடமைப்பு அதிகார சபையாலும், பிரதேச செயலகத்தாலும் வீடமைப்பு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆனால் இந்தப் பயனாளிகள் வீடுகள் மற்றும் கட்டடங்களை அமைக்கும் போது பிரதேச சபையின் சட்டத்திட்டங்களை மதிக்காது தான் தோன்றித்தனமான முறையில் செயல்பட்டு வருவதாக சபையில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்கு சபையின் தவிசாளர் கருத்து தெரிவிக்கையில் பயனாளிகள் இவ்வாறான வழிக்குச் செல்வதற்கு எமது ஓரிரு உறுப்பினர்களும் அவர்களுக்கு குறுக்கு வழிகளை காண்பித்து வருவது எமக்கு தெரிய வருகின்றது எனத் தெரிவித்தார்.

ஆகவே வீடமைப்பு அதிகார சபையோ பிரதேசசெயலகப்பிரிவோ வீடமைப்புத் திட்டத்தை எமது பகுதிக்குள் முன்னெடுக்கும்போது பயனாளிகள் பாதிப்பு அடையாதிருக்க சபையின் சட்டத்திட்டங்களை கையாள வேண்டும்.

இல்லையேல் வீட்டுத் திட்டத்தின் இவர்களுக்கான இரண்டாம் கட்டநிதி விடுவிப்பை இடை நிறுத்தி வைக்கும்படி சம்பந்தப்பட்ட வீட்டுத் திட்டஅபிவிருத்தி அதிகார சபைக்கும், மன்னார் பிரதேச செயலகத்துக்கும் எழுத்து மூலம் தெரிவிப்பது என இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-60)



## விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு

வவுனியா,ஏப்.28

இளைஞர்களின் விளையாட்டை ஊக்குவிக்கும் முகமாக முன்னாள் பிரதி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தானால் விளையாட்டு கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி பாலமோட்டை கிராமத்தில் வைத்து கிழவிகுளம் விளையாட்டு கழகம், பாலமோட்டை விளையாட்டு கழகத்துக்கும், புளியங்குளம் கிராமத்தில் வைத்து லைக்கா விளையாட்டு கழகத்துக்கும் , புரட்சி விளையாட்டு கழகத்துக்குமான விளையாட்டு உபகரணங்களை அந்தந்த விளையாட்டு கழகங்களின் விளையாட்டு வீரர்களிடம் கையளிக்கப்பட்டன. (க-222)



## கல்வி உதவித் திட்டம் ஆரம்பம்

முல்லைத்தீவு,ஏப்.28

உயிரிழை முள்ளந்தண்டு வடம் பாதிப்புற்றோர் அமைப்பின் பயனாளிகளின் கல்விகற்கும் பிள்ளைகளுக்கான " கல்வி உதவித் திட்டம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சென்றவாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தக் கல்வி உதவித் திட்டத்தின் ஊடாக மாங்குளம் உயிரிழை அமைப்பின் பயனாளிகளின் பிள்ளைகளுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்குதல், மாலை நேரக் கல்விக்கான காசோலைகள் வழங்குதல், சிறப்புக் கல்விக் கருத்தரங்குகள் மாணவர்களுக்கான சிறப்பு மருத்துவ உதவித் திட்டங்கள் என்பன இந்தத் திட்டத்தின் ஊடாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. (க-222)

## விருது வழங்கி மதிப்பளிப்பு

வவுனியா.ஏப்.28

'மகாத்மா காந்தி சமாதான மகாநாட்டில்' இலங்கையைச்சேர்ந்த 20 பேருக்கான "மகாத்மா காந்தி "விருது" கடந்த 20ஆம் திகதி வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.

கொழும்பு 7 இல் அமைந்துள்ள டென்சில் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மண்டபத்தில் இந்த விருது வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

சமூக சேவை மற்றும் மனித நேய சமாதான பணிகளுக்காக இந்த விருது வழங்கி வைக்கப்பட்டது.

சமாதான நீதிவான்கள் பேரவைத் தலைவர் தேசபந்து பஹாத் மஜீத் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இந்தியாவின் ' குட் நியூஸ் ' பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி ஜேக்கப் சைமன் விருதுகளை வழங்கிவைத்தார் .

அதில் வவுனியா "புன்னகை" அமைப்பின் இணைப்பாளர் சமாதானநீதிவான் தேசகீர்த்தி த.சந்திரமோகனுக்கும் மனித நேய சமாதான பணிகளுக்காக இந்த விருது வழங்கி வைக்கப்பட்டது. (க)



## இராணுவ முகாம் கழிவு நீரால் மக்களுக்கு சுகாதார நெருக்கடி

கிளிநொச்சி,ஏப்.28

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகில் இருக்கின்ற 57ஆவது படைப்பிரிவினுடைய கழிவுநீர், கணேசபுரம் பிரதான நீர்ப்பாசனத் , திணைக்களத்தினுடைய வாய்க்காலில் கலக்கின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

விவசாயத்துக்கு மட்டுமன்றி அன்றாடத் தேவைகளுக்காக இந்த நீர் பயன்படுத்தப்படுகின்றது.

இதனால் கந்தசுவாமி ஆலயத்தினுடைய புனிதமும் பாதிப்புக்குள்ளாகிறது.

இந்த விடயம் தொடர்பாக கணேசபுரம் கமக்கார அமைப்பு கவனம் செலுத்த வேண்டுமெனவும் இந்தப் பகுதியில் வசிக்கின்ற மக்களின் அன்றாட தேவைகளுக்காக வாய்க்காலில் வரும் தண்ணீரை பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனால் தொற்றுநோய் பரவுவதற்கான வாய்ப்புகள்இருப்பதாவும் தெரிவிக்கப்படுகிறது. (க-222)



## உதவி வழங்கல்

உதயம் கலாசார சங்கத்தின் 100 ஆவது சேவை அண்மையில் கிளிநொச்சி யூனியன் குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் வழங்கப்பட்டது.

கிராமத்தில் உள்ள வறுமையான மக்களுக்கு உதவியாக அத்தியாவசிய பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த உதவியை கனடாவில் இருக்கும் ஷான்,தயாபரன் வழங்கினார். (க-21)



# அரசியலின் போக்கை தீர்மானிக்கும் சக்தியாக விளங்கும் இளைஞர்கள்

## நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவிப்பு

முல்லைத்தீவு,ஏப்.28

பன்னாட்டு அரசியலின் போக்கை தீர்மானிக்கும் சக்திகளாக இளைஞர்களே விளங்குகின்றனர். உடல் உள வலிமைக்கு அடிகோலும் அதே நேரம் ஆரோக்கியம்மிக்க சிந்தனைமிக்க சமூகத்தையும் உருவாக்குகின்றனர். என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மறுவாழ்வு மீள்குடியேற்றம் வடக்கு அபிவிருத்தி முன்னாள் பிரதி அமைச்சருமான காதர் மஸ்தான் குறிப்பிட்டார்.



20 ஆம் திகதி வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட செக்கடிப்புலவு கிராமத்தில் இடம்பெற்ற தெரிவு செய்யப்பட்ட விளை யாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டுஉபகரணங்கள்வழங்கும் நிகழ்வில்உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார். (க)




சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

28.04.2019


# கறுப்பு நாளானது உயிர்த்த ஞாயிறு


போ.பொன்னிநாதன்


ஞாயிற்றுக் கிழமை காலை வழமைபோலவே விடிந்தது. இயேசு உயிர்த்த நாளாகக் கருதப்படும் அந்த நாள் இறுதியில் மனித உயிர்கள் பலவற்றைச் சாவடித்த சோகத்தைத் தனதாக்கியது. அன்று காலையில் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினரின் தற்கொலைதாரிகள் மனிதர்களைக் கொல்வதற்குத் தயாராகினர். அவர்கள் மனிதர்களோடு மனிதர்களாகச் சிரித்து மகிழ்ந்தபடி மனிதர்களுக்குள் நுழைந்து தம்மைச் சாகடித்தனர். மூன்று தேவாலயங்கள். மூன்று ஹோட்டல்கள். இன்னும் இரண்டு இடங்கள் எனப் பரவலாக அந்தக் காலை வேளையில் அடுத்தடுத்து அவர்கள் நடத்திய குண்டுத் தாக்குதல்களில் பலரும் கொல்லப்பட நாடு சோக மயமாகியது. அதன் பின்னர் தற்கொலை தாரிகளைப் பற்றிய தேடல்கள் ஆரம்பமாகின. கல்வியறிவில் சிறந்த குறித்த தற்கொலைதாரிகள் பொருளாதாரத்தில் உயர்ந்தவர்கள் என்பதும் தெரியவந்தது.

மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தில் இருந்த இவர்கள் இந்தக் குரூரத் தாக்குதல்களை நடத்துவதற்கு முன்வந்தமை கவனத்துக்குள்ளானது.






காட்டுக்குள் பயிற்சிமுகாம்



சஹ்ரான் ஹாசிம்



வெல்லம்பிட்டித் தொழிற்சாலை

### தற்கொலைதாரிகளுக்கு மதிப்பும் சிறப்பும்

இந்தத் தாக்குதலில் ஈடுபட்டுச் சாவடைந்த 7பேருக்கு உயர் மதிப்பளித்து அறிக்கை வெளியிட்டது ஐ.எஸ்.ஐ.எஸ். அதன்படி, அபு ஒஸ்டா, அபு அல் முக்தார், அபு அல் பரா, அபு அப்துல்லாஹ் (இந்த நால்வரும் ஹோட்டல்களில் தாக்குதல்களை நடத்தியவர்கள் என்று குறிப்பிடுகிறது) அபு காலீல் (நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டித் தேவாலயத்தில் தாக்குதல் நடத்தியவர்) அபு ஹம்சா (கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் தாக்குதல் நடத்தியவர்) அபு மொகமட் (உமர் மட்டக்களப்பு சியோன் தேவாலயத் தாக்குதலை நடத்தியவர்) என்று 'அபு' என்கிற சிறப்புப் பெயருடன் (நிஜப் பெயர்களில் இருந்து இந்தப் பெயர்கள் வேறுபடுவதால் அவர்களுக்கான இயக்கப் பெயர்களாக இருக்க முடியும்) தற்கொலைதாரிகள் குறித்த தகவலை வெளியிட்டது அந்த அமைப்பு. இவர்கள் இரும்புத் துகள்கள், இரும்புக் குண்டுகள்(போள்ஸ்) என்பனவற்றை அதிகளவில் உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட 25கிலோவுக்கும் அதிக எடையுடைய வெடிகுண்டுப் பொதிகளைத் தமது உடலுடன் பொருத்தியவாறு மக்கள் அதிகமுள்ள இடங்களுக்குள் புகுந்து வெடித்துச் சிதறினர். ஐ.எஸ்.ஐ.எஸ். என்கிற பன்னாடு தழுவிய அமைப்பு இந்தத் தாக்குதலுக்கு உரிமை கோரியிருந்தாலும், உள்நாட்டில் அதற்கு உதவியளித்ததாகத் தேசிய தௌஹீத் ஜமாத் என்ற அமைப்பு உச்சரிக்கப்பட்டது. இந்தத் தாக்குதல்களுக்குத் தலைமை தாங்கியவராக சஹ்ரான் ஹாசிம் என்பவர் குறிப்பிடப்பட்டார்.



சிறுவயதில்
அப்துல் லத்தீவ் ஜமீல் மொஹமட்

© Nick Edwards

### திட்டமிடல்கள்

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தயவில் ஐ.எஸ்.ஐ.எஸ் ஊடுருவியதாகத் தெரியவந்தாலும், இந்தத் தாக்குதல்களின் தலைமையாளர் என்று கருதப்படும் சஹ்ரான் ஹாசிம் அந்த அமைப்பிலிருந்து நீக்கப்பட்டவர் என்றும் கூறப்படுகிறது. எப்படியிருப்பினும் இந்தத் தாக்குதல்களுக்கு அவரே தலைமை தாங்கினார் என்கிற பேச்சுக்களே அதிகளவில் உள்ளன. இதன்படி சஹ்ரான் ஹாசிமாலும் ஜ.எஸ்.ஜ.எஸ்ஸின் பன்னாட்டு வலையமைப்பாலும் கையாளப்பட்டவர்களே தாக்குதல்தாரிகள் என்று தெரிகிறது. போர் முடிந்த கடந்த ஆண்டுகளில் இவர்களின் வலையமைப்பு உள்நாட்டில் விரிவடைந்தது. கல்வி, மேற்படிப்பு என்பன நிமித்தம் வெளிநாடுகளுக்குச் சென்றவர்களும், வர்த்தகத்தின் நிமித்தம் வெளிநாட்டுத் தொடர்புகளைப் பேணியவர்களும் அங்கு பரவியுள்ள இஸ்லாமிய அடிப்படை வாதம், வாதிகளால் கையாளப்பட்டிருக்கிறார்கள். பின்னர் உள்நாட்டுக்குள் அவர்கள் ஒரு குழுவாகியிருக்கிறார்கள். ஆயுதங்கள் தயாரிப்பதற்குத் தொழிற்சாலைகளை நிறுவியிருக்கிறார்கள். பயிற்சிகளை மேற்கொண்டுள்ளார்கள், பல பகுதிகளில் ஆயுதங்களை மறைத்து வைத்துள்ளார்கள், நாடு பூராகவும் தமக்கான வலையமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள். சஹ்ரான் காசிம் என்பவர் இவர்களின் தலைமைக்கு, இவர்களைக் கையாள்வதற்கு ஏற்ற நபராக இருந்துள்ளார். இவ்வாறான ஊகங்களே தற்போது வரை நிலவுகின்றன.

இந்தக் குழுவினர் உள்நாட்டில் பல இடங்களில் பயிற்சிமுகாம்களை நிறுவிப் பயிற்சி எடுத்துத் தம்மைப் பலப்படுத்தினார்கள்.

### சஹ்ரான் ஹாசிம் எனும் தலைமை

தாக்குதல்களின் மையப்புள்ளியாகச் செயற்பட்டவர் என்ற சந்தேக வட்டத்துக்குள் இருத்தப்பட்டிருக்கும் சஹ்ரான் ஹாசிம் (வயது 42) என்பவர் குறித்த தாக்குதல் களில் ஒன்றில் இறந்துவிட்டார் என்றும், இறக்கவில்லை என்றும் அவர் குறித்த கேள்விகளே அதிகமுள்ளன. இந்தக் குண்டுவெடிப்புகளில் சூத்திரதாரியாகச் செயற்பட்ட இவர் காத்தான்குடியைச் சேர்ந்த ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். காத்தான்குடி 4ஆம் வட்டாரத்திலுள்ள ஜமயித்துல்லாஹ் மதராஸாவில் (மதக் கல்விக்கூடம்) கல்வி கற்றவர். அங்கு இஸ்லாம் மார்க்கக் கற்கை நெறியின் இறுதிக்காலத்தில் முரண்பாடு களைத் தோற்றுவித்த காரணத்தால் மதரஸாவில் இருந்து வெளியேற்றப்பட்டார் என்று அறியப்படுகிறது. அங்கிருந்து வெளியேற்றப்பட்டபின் அவர் இளைஞர்களுக்குக் கற்பித்தலையும் போதனையையும் செய்துள்ளார். அரபு மொழியில் அவர் பெற்றிருந்த பாண்டித்தியமும், கற்பித்தல் முறையும் குறிப் பிட்டளவு இளைஞர்களை இலகுவாகக் கவர்ந்துள்ளது. அவரின் அதிதீவிர அடிப்படைவாத போதனைகளை ஏற்றுக்கொண்டவர்களை இணைத்துத் தேசிய தௌஹீத் ஜமாத் என்ற அமைப்பு நிறுவப்பட்டது. தௌஹீத் என்றால் அல்லாவே ஓர் இறை என்பதாகும், ஜமாத் என்றால் அரபியில் குழு என்று அர்த்தம். இந்த அமைப்பில் ஏற்பட்ட முரண்பாடு களால் சஹ்ரான் இதிலிருந்து விலக்கப் பட்டதாகவும் செய்திகளுண்டு. இந்த அமைப்பின் முகநூல் பக்கத்தில் பெரும்பாலான விடயங்கள் தமிழிலே தான் உள்ளன. இதில் சஹ்ரானின் காணொலிகள், பதிவுகளும் உள்ளன. இந்த அமைப்பின் கீச்சகக் கணக்கு மார்ச் 2018 ஆம் ஆண்டிலிருந்து செயற்படவில்லை.

காத்தான்குடியைச் சேர்ந்த, எகிப்தின் அல் அஸார் பல்கலைக்கழத்துடன் தொடர்புடைய, கலாநிதி அஷ்ரப் என்பவருடன் பகிரங்க விவாதத்தில் ஈடுபட்டதன் பின்னர் சஹ்ரான் ஹாசிம் மேலும் பிரபலமடைந்தார். காத்தான்குடி அலியார் சந்தியிலுள்ள அப்துர் ரவூப் பள்ளிவாசலில் பெருந்தொகையான மக்கள் முன்னிலையில் பிற்பகல் 3மணியில் இருந்து அதிகாலை 1 மணிவரை நடந்த இந்த விவாதத்தில் சஹ்ரான் வெற்றிபெற்றதாகக் கூறப்படுகிறது. இதன் பின்னர் அவரின் பேச்சு வன்மை பலரையும் ஈர்த்துள்ளது. ஆனால், அவரின் இஸ்லாம் அடிப்படைவாத உச்சம் பலரைப் பாதிக்கவும் செய்தது. காத்தான்குடிப் பொலிஸார் அவரைத்தேட ஆரம்பித்ததும் அவர் தலைமறைவானார். அவர் நாட்டைவிட்டு வெளியேறியிருக்கவேண்டும். சில காலங்கள் கழித்து வலைத்தளங்களில் சிரியாவிலும் மற்றைய நாடுகளிலும் நடக்கும் ஐ.எஸ். ஐ.எஸ் இன் நடவடிக்கைகள் பற்றித் தமிழில் உடனுக்குடன் எழுதினார். தனது பேச்சுக்களைச் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டார். இவ்வாறுதான் சஹ்ரான் ஹாசிம் என்பவர் பற்றித் தேடிய முடிவில் கிடைத்த தகவல்களின் திரட்டு இருக்கிறது.

### இன்ஷாப் இப்ராஹிம் இல்ஹம் இப்ராஹிம்

குறித்த தாக்குதலுக்கெனத் தயார்ப்படுத்தப்பட்டவர்கள் பொருளாதார ரீதியில் செழிப்படைந்தவர்கள் என்பதை வர்த்தகர் இப்ராஹிமின் இரண்டு புதல்வர்களான இன்ஷாப் இப்ராஹிமும், இல்ஹம் இப்ராஹிமும் இந்தத் தாக்குதல்களில் தம்மை ஈடுபடுத்தியதன் மூலம் உணர்த்தினர். வறுமையுடையோரோ, பின்தங்கிய நிலையிலுள்ளவர்களோ இல்லாமல் வாழ்வை அனுபவிப்பதற்குப் பணத்துக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லாத இந்த இருவரும் குறித்த தாக்குதல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். 2016ஆம் ஆண்டில் சிறந்த ஏற்றுமதியாளருக்கான விருதைப் பெற்றவரான 65வயதையுடைய இவர்களின் தந்தை இப்ராஹிம் சிறந்த வர்த்தகராகவும் அவருடைய தொழில் நிறுவனங்களைக் கையாளும் குறித்த இருவரும் தந்தையின் வர்த்தக நடவடிக்கைகள் சார்ந்து வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டவர்கள் என்றும் தெரியவருகிறது. அஹ்கான் அலாமிதின் என்பவரை வாழ்க்கைத் துணைவி யாக்கிக் கண்டியில் வசித்து வந்த இன்ஷாப் இப்ராஹிமின் தயவிலேயே வெல்லம்பிட்டியில் ஆயுத உற்பத்தி நடந்ததாகச் சந்தேகிக்கப்படும் தொழிற்சாலை ஒன்று இயங்கி வந்திருப்பது கண்டறியப்பட்டது. இவர் சினமன் ஹோட்டலிலும் இவருடைய தம்பி சங்கிரில்லா ஹோட்டலிலும் தாக்குதல் நடத்தினார்கள். குறித்த இருவரும் பொருளாதார நிலையில் சிறந்திருந்தவர்கள். வர்த்தகம், வியாபாரம் என்ற தமது வாழ்க்கைப் படிநிலைகளில் இருந்து விலகித் தற்கொலைத் தாக்குதலில் தம்மை ஈடுபடுத்தியுள்ளமை அதிர்ச்சியளிப்பதே!



### அப்துல் லத்தீவ் ஜமீல் மொஹமட்

36வயதையுடைய அப்துல் லத்தீவ் ஜமீல் மொஹமட் தெஹிவளையிலுள்ள சிறிய ஹோட்டல் ஒன்றில் குண்டைப் பரிசோதித்தபோது இறந்தவர் என்று அறியப்படுகிறார்.

தாஜ் சமுத்ரா விடுதியிலும், தெஹிவளையிலுள்ள தேவாலயமும் என இவர் குறிவைத்த இலக்குகளில் குண்டு வெடிக்காது போனமையாலே தெஹிவளையிலுள்ள ட்றபிஹல் இன் என்கிற விடுதியில் இவர் அதைப் பரிசோதித்திருக்கிறார்.

(00ஆம் பக்கம் பார்க்க)



## கறுப்பு நாளானது.....

வான் வெளிப் பொறியியல் பட்டம் பெற்ற இவர், பிரித்தா னியாவின் கிங்ஸ்ரன் பல்கலைக்கழகத்திலும், ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் ஸ்வின்பேர்க் பல்கலைக்கழகத்திலும் தனது மேற்படிப்பைத் தொடர்ந்திருக்கிறார். அங்கெல்லாம் அந்தந்த நாட்டுப்புலனாய்வாளர்களால் விசாரிக்கப்பட்டுமுள்ளார். பன்னாட்டளவில் பரவியுள்ள குறித்த அமைப்பின் பால் ஈர்க்கப்பட்ட இவர் முடிவாக உள்நாட்டுக்குள் கால் பதித்துத் தாக்குதல் நடத்தியுள்ளார்.

நீர்கொழும்புச்செபஸ்தியான் ஆலயத்துக்குள் தாக்குதலை நடத்துவதற்கு நுழைந்த தாக்குதல்தாரி தனது வழியல் எதிர்ப்பட்ட சிறுமியின் கன்னத்தைக் கிள்ளிச் செல்கிறார். அடுத்த நிமிடமே, இறக்க இருக்கும் தறுவாயில், இப்படிப் பல பிஞ்சுகளை யும், எதுவுமறியாத மனிதர்களையும் கொல்லத்துணிந்துள்ள நிலையில் அவர் அந்தப் பிஞ்சின் கன்னத்தைக் கிள்ளிச் செல்கிறார். இவர்கள் தவிர கணவன் - மனைவி - , அவர்தம் குழந்தைகள் எனத் தம்மைத் தற்கொலைத் தாக்குதல்களுக்கு அர்ப்பணித்தவர்கள் என இந்தத் தற்கொலைத் தாக்குதலுடன் தொடர்புபட்டவர்களின் பின்புலங்கள் அதிர்ச்சியை ஏற்படுத்துபனவாகவே இருக்கின்றன.

### சஹ்ரான் ஹாசிம் குறித்த தேடல்

மொழித் தேர்ச்சி, கல்வியறிவு, கடுமையான மதப்பற்று எனத் தற்கொலைதாரிகளை ஆற்றுப்படுத்துகின்ற தரத்திலிருக்கின்ற சஹ்ரான் ஹாசிம் என்பவரின் இறப்புக் குறித்துச் சந்தேகங்கள் தொடர்கின்றன. எந்தவொரு மனிதரையும் இலகுவாக மூளைச் சலவை செய்து, அவரை இஸ்லாம் சார்ந்த கடும் போக்குவாதியாக ஆக்குவதில் கைதேர்ந்தவர் என்று கருதப்படும் இவரது சாவு குறித்த சந்தேகங்கள் எழுவது தவிர்க்க முடியாததாகி யிருக்கிறது. செல்வந்தர்கள், படித்தவர்கள் எனப் பல்வேறு கோணங்களில் உள்ளவர்களுக்கும்; தற்கொலைத் தாக்குதல் நடத்தவேண்டிய தேவை, சிந்தனை என்ன என்ற கேள்விக்கான பதில் முடிவில் இஸ்லாமிய மதவாதத்தில் போய் முடிவடைவதாகவே தெரிகிறது. உள்நாட்டவர், வெளிநாட்டவர், ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், சிறுமியர்கள், சிங்களவர், தமிழர், முஸ்லிம் (தற்கொலைதாரிகளும் தாக்குதலில் இறந்த ஓரிருவரும்), கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள், இந்துக்கள் என எந்த வரையறையும் இல்லாது குறித்த குழுவினர் நடத்திய தாக்குதல் பாரபட்சமில்லாமல் பாதிப்பை ஏற்படுத்தியது. இலங்கையில் இயேசு உயிர்த்த நாள் சோகத்தால் நிரம்பியது.



# வேட்டு வைக்கும் ஒலி மாசு!

ஸுடோஸ்வாமி



அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்ற பழமொழி அமிர்தத்துக்கு மட்;டுமல்ல அனைத்துக்கும் பொருந்துகின்ற ஒன்றாக இருக்கிறது. எவை எல்லாம் அளவுக்குஅதிகமாகநுகரப்படுகின்றனவோ அவைஆபத்தைவிளைவிப்பவையாக அமைந்துவிடுகின்றன.காதால்கேட்டுப் பெற்றுக்கொள்ளப்படும்; ஒலி அளவுக்குக் கூட இந்த அபாயம் இருக்கிறது. காதால்அறியப்படும்ஒலி அறிவின் முக்கியத்தை உணர்ந்தே திருக்குறள் தோன்றியகாலத்திலேயே'செல்வத்துட் செல்வம்செவிச்செல்வம்'எனச்சொல்லி வைக்கப்பட்டது. பெருகி வரும் இயந்திரங்களால் ஏற்படுத்தப்படும் இரைச்சல் மாத்திரமின்றி சமிக்ஞைக்காகப் பயன்படுத்தப்படும் ஒலிகளும் சூழலுக்கும் மனிதருக்கும் எரிச்சலைத் தரத்தக்க வகையில் மாறி வருகின்றன.

### அதிகரித்த ஒலியால் வரும் பாதிப்புகள்

சூழலில் உண்டாக்கப்படுகின்ற இரைச்சலுக்கு அதிகம் முகங்கொடுப்பவர்கள் எதிர்கொள்ளும் ஆரோக்கியச் சீர்கேடுகள் தொடர்பில் உலக சுகாதார நிறுவனம் அறிவித்திருக்கிறது. அதிக இரைச்சல் மற்றும் நீண்ட நேர இரைச்சலுக்குக் காது கொடுப்பவர்களுக்கு இதய நோய்கள், தூக்கக்கு ழப்பம், அறிவுசார் விடயங்களில் வலுக்குறைவான.சிறார்கள் உருவாகுதல், அடிக்கடி சினமடைதல் மன அழுத்தத்துடன் தொடர்புடைய உளச்சுகாதாரத்துக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் மற்றும் காதில் இரைச்சல் போன்ற நிலைகள் ஏற்படலாம் என்று எச்சரிக்கிறது. இத்தகைய நிலைகளின் காரணமாகக்குறைபாடானநிலைமை, நோயாளியாக வாழ்வைக் கழிக்க வேண்டிய நிலைமை போன்றவை ஏற்படுவதுடன் உரியவயதுக்குமுன்னதாகவே சாவு சம்பவிக்கக்கூடிய சாத்தியங்களும் அதிகமாகின்றன. ஒலி மற்றும் இரைச்சலால் சூழல் மாசுபடுவது உலகளாவியபிரச்சினையாக உருவெடுத்து வருகையில் இலங்கையிலும் அது
உணரப்பட்டிருக்கிறதுஇலங்கையைப் பொறுத்தவரையில்வாகனப்போக்குவரத்தே ஒலி மாசடைதலுக்கு முதலாக அமைவது தொடர்பில் கண்டறியப்பட்டு அதை ஒழுங்குபடுத்தும் வகையில் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன. வாகனங்கள் தொடர்பான ஒழுங்குபடுத்தலை நடைமுறைக்கிடுவதற்காகக் குறுகிய கால மற்றும் நீண்டகாலச் செயற்றிட்டங்களும் அறிமுகம் செய்யப்பட்டிருக் கின்றன.

### வலியை வருவிக்கும் வாகன சைரன்கள்

கடந்த 5ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற கூட்டத்தில் வாகன சைரன்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டு அது தொடர்பானநடவடிக்கைகளைமுன்னெடுக்குமாறுகாவல்துறையினர்பணிக்கப்பட்டிருக்கின்றனர். இதன் பிரகாரம் ஒலி மாசடைதலைஏற்படுத்தக்கூடியவாகன சைரன்களைப் பாவனையிலிருந்து நீக்குவதற்குஉத்தரவிடப்பட்டிருக்கிறது. நோயாளர் காவு வண்டி மற்றும் தீயணைப்புப் பிரிவினரின் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்களுக்கு இந்த நடைமுறை கண்டிப்பாகக் கவனிக்கப்படவிருக்கிறது. 2011ஆம் ஆண்டுடிசம்பர் மாதம் வெளியிடப்பட்ட 1737/37 இலக்க வர்த்தமானியில், சைரன்களினால்வெளியிடப்படக்கூடிய ஒலியளவு நியமம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வாகனங்களில் இணைக்கப்பட்டிருக்கும் சைரன்கள், வாகனத்திலிருந்து 2 மீற்றர் தொலைவில் உணரப்படக்கூடிய ஒலியளவானது 105 டெசிபெல் அளவைத் தாண்டலாகாது.

அதே ஒலி, வாகனத்திலிருந்து 7 மீற்றர் தொலைவில் 93 டெசிபெல் அளவை விஞ்சலாகாது. மத்தியசுற்றாடல்அதிகாரசபை தெரிவித்திருக்கும் கருத்தின்படி வாகனஓட்டுனர்கள்மேற்படிசத்தநியம அளவுகளைத்தாண்டிஒலியெழுப்புவதனால்மனஅழுத்தம்,உயர்குருதிஅழுக்கம்மற்றும்கேட்டல்குறைபாடுகளுக்கு வழியேற்படுத்தியிருப்பதுடன் இதன் காரணமாக வீதி விபத்துக்களும் சம்பவிப்பதாகக் குறிப்பி டப்படுகிறது.

### வெளியேயும் சத்தம் உள்ளேயும் சத்தம்!

அமைதியான பயணங்களை மேற்கொண்ட காலம் போய் இப்போது இரைச்சலை சகித்துக்கொண்டு பயணம் செய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலைவரம்பயணிகளுக்குஏற்பட்டிருக்கிறது. இந்த இரைச்சல் வாகனங்களில் உறுமலால் வரும் இரைச்சலை முதன்மைப்படுத்தவில்லை. மாறாக, வாகனங்களில்உள்ளேபயணிக்கும்பயணிகளை இசையால் மகிழ்விக்கவென இணைக்கப்பட்ட சாதனங்களின் அலறலே இந்த உள்ளக இரைச்சலுக்கான மூலம். இந்த அவல நிலை தனியார் பேருந்துகள் மற்றும் முச்சக்கரவண்டிகளில் காணப்பட்ட நிலையில் தற்போது அரசபேருந்துகளிலும்தொற்றிவேரூன்றியிருக்கிறது.

பல சந்தர்ப்பங்களில் பயண முழுத் தூரத்தையும் ஒலித்திணிப்பைச் சகித்துக்கொண்டும் வேறெங்கும் புலனைச் செல்லவிடாமல் அவஸ்தைப் பட்டுக் கொண்டும் முழுப்பயண காலத்தை முடிக்க வேண்டிய துன்பியல் நிலை ஏற்படுத்தித்தரப்படுகிறது.

பேருந்துகளில்ஒலி மற்றும்ஒளி பரப்பாகும் காட்சிகள் மற்றும் பாடல்களின் உள்ளடக்கங்கள், பெண்களைப் பாலியல் தொல்லைக்கு உட்படுத்துவதைத் தூண்டுவ தாகவும் கண்டறியப்பட்டிருக்கிறது.

வாகனங்களின் வெளிப்புறத்திலிருந்து எழுப்பப்படும் ஒலியைக் கட்டுப்படுத்துவது மாத்திரமின்றி உட்புறத்திலும் ஒலிக்கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப் படவேண்டும் எனக் கோரப்படுகிறது.

மனிதனின்ஆரோக்கியத்துக்குமாத்திரமின்றி சூழலின் சமநிலைக்கும் ஊறு விளைவிக்கும் ஒலி மாசு தொடர்பில் கண்டறியப்பட்டுச் சில கட்டுப்பாட்டுமுறைகளையேனும் நடைமுறைக்கிட முனைந்துள்ளமையாராட்டுக்குரியதே. ஒலிமாசைஉண்டுபண்ணும்ஏனைய முதல்களையும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மூலம் கட்டுப்படுத்தாதவிடத்து செவிச்செல்வம் பாதிக்கப்பட்ட தலைமுறை ஒன்று தோன்றி வளர்வது தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிவிடும்.

# ஐ.எஸ்.ஐ.எஸ் தோற்றமும் இலங்கையும்!

ஆர்.பிரகாஸ்



உலக நாடுகளை பிதியில் உறையவைத்த ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தற்போது இலங்கையை நோக்கியும் விரிவுபட்டுள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு என்பது என்ன?. அதன் நோக்கம் என்ன? அதன் போர் வடிவம், வியூகங்கள் எவை? என்பதைப்பற்றி அறிவதற்கு தொடர்ந்து பயணிப்போம்.

**தோற்றம்**

2013ஆம் ஆண்டு ஈராக்கில் உள்ள சன்னி முஸ்லிம்களால் உருவாக்கப்பட்டதுதான் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் சிரியாவே அதிகளவு பாதிக்கப்பட்டாலும் அதன் தாயகபூமி ஈராக் என்பதற்கு இரண்டாவது பேச்சில்லை. ஈராக்கின் தலைநகராக பக்தாத் இருந்தபோதிலும் அதன் பழமையான நகரான மோசூலைத்தான் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தனது தோற்றுவாயாகத் தேர்ந்தெடுத்தது. மோசூலின் அடையாளமான பேள வடிவான மசூதியில் வைத்துத்தான் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் ஆரம்பத்தையும், அதன் எதிர்கால செயற்பாடுகளையும் அறிவித்தார் அதன் தலைவரான அபூபக்கர் அல் பக்தாதி. இந்த அறிவிப்பு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின்பால் பல முஸ்லிம் இளைஞர்களைக் கவர்ந்தது. இதையடுத்து அடுத்த சில வாரங்களிலேயே மோசூல் ஐ.எஸ். அமைப்பின் பிடியில் வீழ்ந்தது. மோசூலின் மிகப்பழமையான சாய்ந்த கோபுர மசூதியில் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் கொடி பறந்தது.



2013ஆம் ஆண்டு ஈராக்கில் உள்ள சன்னி முஸ்லிம்களால் உருவாக்கப்பட்டதுதான் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் சிரியாவே அதிகளவு பாதிக்கப்பட்டாலும் அதன் தாயகபூமி ஈராக் என்பதற்கு இரண்டாவது பேச்சில்லை. ஈராக்கின் தலைநகராக பக்தாத் இருந்தபோதிலும் அதன் பழமையான நகரான மோசூலைத்தான் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தனது தோற்றுவாயாகத் தேர்ந்தெடுத்தது. மோசூலின் அடையாளமான பேள வடிவான மசூதியில் வைத்துத்தான் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் ஆரம்பத்தையும், அதன் எதிர்கால செயற்பாடுகளையும் அறிவித்தார் அதன் தலைவரான அபூபக்கர் அல் பக்தாதி.





**வளர்ச்சி**

ஒரு மரத்தின் அடியில் சிறுகச்சிறுக ஆரம்பித்து படிப்படியாக முழு மரத்தையுமே ஆக்கிரமிக்கும் கறையான் புற்றைப்போன்று ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பும் படிப்படியாக தன்னை விரிவு படுத்தியது. மோசூல் நகரத்தை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புத் தேர்ந்தெடுப்பதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று இஸ்லாமுக்கு இலக்கணமாக அமைகின்றது அந்த நகரம். இரண்டாவது, மோசூலின் அமைவிடம் மிகமிக முக்கியமானது. ஈராக், சிரியாவின் நடுப்பகுதியில் அமைந்துள்ளது மோசூல். இதனால்தான் அந்த அமைப்பு சமநேரத்தில் சிரியா, ஈராக் நோக்கி விரைந்து செல்ல, தனது எல்லைகளை விரிவுபடுத்தக்கூடியதாக இருந்தது. கிர்குக், எர்பில், ரமார், ரல் அபார், சமாரா ஆகிய ஈராக்கிய நகரங்களும், ரக்கா, பல்மைரா, அலெப்போ, இட்லிப் உள்ளிட்ட சிரிய நகரங்களும்.ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் வீழ்ந்தன. உலகம் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் மிகப்பெரும் அச்சுறுத்தலை எதிர்கொள்ளப் போகின்றது என்ற விடயம் தெரியவந்தபோது உண்மையில் காலம் கடந்திருந்தது. ஐ.எஸ். கற்பனைக்கும் அப்பால்பட்ட சக்தியைப் பெற்றிருந்தது.

**ஐ.எஸ்ஸின் பலம்**

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பலம் என்னவென்று எண்ணினால் பதிலாக வருகின்றது நீண்ட பட்டியல். தற்கொலைத் தாக்குதல்தாரிகள், ஈராக், சிரியாவின் எண்ணெய்க் கிணறுகள், வலுவான பொருளாதாரக் கட்டமைப்பு என்பனதான் அந்த அமைப்பின் பலம் என்று எண்ணுபவர்கள் உள்ளனர். அவை உண்மை. மறுப்பதற்கில்லை. ஆனால் இவற்றை விடவும் இரண்டு விடயங்களில் அந்த அமைப்பு பலம்பெற்றிருந்தது. ஒன்று, வெளிநாடுகளில் இருந்து அதிலும் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் இருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்குள் இணைந்தவர்கள் அந்த அமைப்பின் பெரும் பலமாக இருந்தனர். உலகிலுள்ள பெரும் ஆயுதப்போட்டியும் அதற்கான சந்தையும் அந்த அமைப்பின் இரண்டாவது பெரியபலம். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு ஆயுதங்கள் எங்கிருந்து கிடைத்தன. நவீன ரகத் துப்பாக்கிகளையும், ஏவுகணைகளையும்கூட அந்த அமைப்பு கொண்டிருந்தது என்று பன்னாட்டு ஊடகங்கள் ஒளிப்படங்களுடன் நிரூபித்தன. அத்தகைய உயர் தொழில்நுட்பத்துடன்கூடிய ஆயுதங்கள் ஐ.எஸ். அமைப்புக்கு எங்கிருந்து கிடைத்தன. சில வல்லரசுகள் அந்த அமைப்பிடம் இருந்து பெரும்தொகைப் பணத்தை அல்லது கச்சாவைப் பெற்றுக்கொண்டு ஆயுதங்களைக் கொடுத்திருக்கலாம் என்றும் எதிர்வுகூறப்படுகின்றது. அதாவது பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டும் கதை இது.

ஐ.எஸ்.ஐ.எஸ், அமைப்பு தனது இருப்பை சிரிய, ஈராக்கிய பாலைநிலங்களில் கொண்டிருக்கவில்லை. மாறாக பொதுமக்கள் அதிகம் வாழும் இடங்களிலும், நகரங்களிலும் தான் கொண்டிருந்தது. சுருங்கச் சொன்னால் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகக் கொண்டு செயற்பட்டது அந்த அமைப்பு. இதுவும் அந்த அமைப்பின் அழிவு தாமதமாகிச் செல்கின்றமைக்கு முக்கிய காரணம்.

**மத்திய கிழக்கில் பின்னடைவு**

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பலம் வாய்ந்ததொன்றாக உலக அளவில் செயற்பட்டபோதிலும் அது தற்போது தோற்கடிக்கப்பட்டுள்ளது. தனது பலத்தை பாதிக்கும் குறைவாக இழந்துள்ளது என்பது உண்மை. அந்த அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் முழுவதுமாக விடுவிக்கப்பட்டுள்ளது. அதாவது ஐ.எஸ்.ஐ.ஸ். அமைப்பின் தலைவர் அபுபக்கர் அல் பக்தாதியின் சொந்த மண்ணில் இருந்து அந்த அமைப்பு துடைத்தெறி யப்பட்டுள்ளது. சிரியாவிலும் ஐ.எஸ். தோற்கடிக்கப்பட்டு வருகின்றது. சிரியப் பாலைநிலங்களிலேயே ஐ.எஸ். தற்போது எஞ்சியுள்ளது. ஈராக், சிரியாவுடன் நிலவழித் தொடர்பைக் கொண்டுள்ள ஜோர்தான், துருக்கி, சவூதி, ஈரான், குவைத் ஆகிய நாடுகள் தமது எல்லைகளை மிகவும் பலப்படுத்தியுள்ளன. ஆக, இன்னும் சில வருடங்களில் மத்திய கிழக்கில் இருந்து ஐ.எஸ். அமைப்பு வேருடன் அகற்றப்படலாம்.

**இலங்கை இலக்கானமை ஏன்?**

மத்திய கிழக்கில் எதிர்காலம் இல்லை என்னதொரு நிலை ஐ.எஸ். அமைப்புக்கு ஏற்பட்டுள்ளது. தனது இருப்புக்காக ஐரோப்பியாவை நோக்கிச் செல்லும் அளவுக்கு ஐ.எஸ். பலமாக இல்லை. அல்லது அதை அனுமதிக்கும் அளவுக்கு ஐரோப்பியர் பலவீனமாக இல்லை. இதுவே ஆசிய வட்டகையை நோக்கி ஐ.எஸ். அமைப்பை உந்தித் தள்ளியிருக்கலாம். ஆசிய வட்டகை என்னும்போது இந்தியா, சீனா தமது பாதுகாப்பை உயர் தரத்தில் கொண்டுள்ளன. ஆப்கானிஸ்தான், பாகிஸ்தானில் அமெரிக்கத் தலையீடு தாராளமாகவே உள்ளது. எனவே அந்த அமைப்புக்கான ஏக தெரிவு இலங்கையே.

அரசியல் ரீதியாக இலங்கை பலவீனப்பட்டு இருக்கின்றமையும், உள்நாட்டுப் போர் பொறுப்புக்கூறல் விவகாரத்தில் இலங்கையுடன் பன்னாட்டுச் சமூகம் முரண்டு பிடிக்கின்றமையும், கேந்திர முக்கியத்துவம் மிக்கதான இடமாக இலங்கை உள்ளமையும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் கவனம் ஈர்க்கப்படக் காரணமாகியிருக்கலாம்.




**பாரதூரமானது**

இலங்கை ஒரு தீவுநாடு. இதனால் இந்த நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது மிகமிக இலகுவானது. இதனால் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை இங்கிருந்து கிள்ளி எறிந்துவிடலாம். சிரியா, ஈராக்கை விடவும் அது இலகுவானது. அதேநேரம் இங்கு ஐ.எஸ். ஆழ வேரூன்றிவிட்டால் 'இலங்கை ஒரு தீவு' என்ற பலமே பலவீனமாகவும் ஆகிவிடும். வேறு எந்த நாட்டுக்கும் நாம் தப்பிச்செல்ல முடியாது. சிரிய மக்களுக்கு துருக்கி அடைக்கலம் கொடுத்தது. ஈராக்கிய மக்களுக்கு சவூதியும், ஜோர்தானும் அடைக்கலம் கொடுத்தன. எமக்கு?

ஜோ. சிக்மன்

# 'ஐ.எஸ்.ஐ.எஸ்' உலகப் பரவல்





இலங்கையில் தேவாலயங்கள், மற்றும் விடுதிகளில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். என்கிற தீவிரவாத அமைப்பு உரிமைகோரியது. குறித்த தாக்குதல்களின் பின்னர் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் நடந்த சோதனைகள், சுற்றிவளைப்புகளில் இதனுடன் தொடர்புடைய சந்தேகத்தில் பலர் கைது செய்யப்பட்டனர். கைதுகள் மட்டுமல்லாது 'வோக்கி டோக்கி' போன்ற தொலைத் தொடர்பு சாதனங்கள், வாகனங்கள் கைப்பற்றப்பட்டன.

வெடிப்பதற்கு ஆயத்த நிலையில் வைக்கப்பட்டிருந்த குண்டுகள், வெடித்தூண்டிகள், குண்டு தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டன. சம்மாந்துறையில் ஆயுதக் குழுவுடன் மோதல் நடந்தது. தேடல் வேட்டை தொடர்கிறது. நாடு தொடர் பதற்றத்தில் உள்ளது. இங்கு ஐ.எஸ்.ஐ.எஸ் கால் பதித்திருப்பது மட்டுமல்லாது அதன் ஆதிக்கம் ஆழ வேரூன்றியிருப்பதையும் உணரமுடிகிறது. உலக நாடுகளில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான நடவடிக்கைகள் அதிகரித்திருக்க அந்த அமைப்பு இலங்கைக்குள் ஊடுருவியிருக்கிறது.

அந்த அமைப்பின் தாயகம் என்று கருதப்படுகின்ற ஈராக்கிலிருந்தும், அதன் இறுதிப் பிடியிலிருந்த சிரியாவின் பாகூஸ் நகரிலிருந்தும் அகற்றியழிக்கப்பட்ட நிலையில் அது இலங்கையில் கால் பதித்திருக்கிறது. இருப்பிடத்தையும், தாயகத்தையும் விட்டு விரட்டியடிக்கப்பட்ட குறித்த அமைப்பு இவ்வாறே உலக நாடுகள் பலவற்றிலும் பரவியிருக்கலாம் என்பதும், பாதுகாப்பில் பலவீனமான நாடுகளை அது அதிகம் இலக்கு வைத்திருக்கும் என்பதும் இந்த 'ஊடு பரவல்' உணர்த்துகிறது. தனக்கென ஓர் இருப்பிடமற்று இவ்வாறு பரவிப் படர்ந்துள்ள இந்த அமைப்பு மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய ஆபத்து மற்றும் அபத்தங்கள் பற்றியும் சிந்திக்கவேண்டியிருக்கிறது.

**தாக்குதலும் மகிழ்ச்சியடைதலும்**

இலங்கையில் நடத்திய தாக்குதலுக்கு உடன் உரிமை கோராத குறித்த அமைப்பும் அதன் ஆதரவாளர்களும் உடனடியாகவே இந்தத் தாக்குதல் காரணமான தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அவர்கள் தமது குறுஞ்செய்திச் செயலி ஒன்றில் இந்தத் தாக்குதல் தொடர்பாக ஊடங்களில் வெளியான ஒளிப்படங்கள், காணொலிகளைப் பகிர்ந்து மகிழ்ந்தார்கள்.

சிரியா மற்றும் ஈராக்கில் தமக்கு எதிராக எடுக்கப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பழிக்கு பழி வாங்கும் விதமாக இந்த தாக்குதல் அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டார்கள். தற்கொலைக் குண்டுதாரிகளில் ஒருவர் எனக் கூறப்படும் ஜஹ்ரான் ஹாஷிமின் முகப்புத்தகப் பக்கம் இந்த ஆதரவாளர்களால் பகிரப்பட்டது. ஐ.எஸ்.ஐ.எஸ். தலைவர் அபு பக்கர் அல் பக்தாதிக்கு விசுவாசம் காட்ட உறுதிமொழியேற்க ஷஹ்ரான் ஹாஷிம் அழைப்பு விடுத்ததாகக் கோரினர் ஜிகாதிகள் குழுவின் ஆதரவாளர்கள்.

மேலும் "கடவுள் அவரை ஏற்றுக்கொள்வார்" என்றும் செய்தி பகர்ந்தனர். "தேவாலயங்களில் குருதி சிந்தும் நாள்கள் ஆரம்பித்துவிட்டன. ஆகையால் ஓ நாத்திகர்களே சந்தோஷமாக இருங்கள்" என்றும், "கிறிஸ்தவர்களுக்கு ஈஸ்டர் திருநாள் வாழ்த்துகள், இயேசுவின் துரோகிகளே... இது உங்களுக்கான வெகுமதி" என்றும் அவர்களால் செய்தி பகிரப்பட்டது. பிரபல அல்கொய்தா ஆதரவாளர் வராதட் அல் மஜித்தும் இந்தத் தாக்குதலைப் போற்றும் விதமாகத் தொடர் செய்திகளை வெளியிட்டார். அல்கொய்தாவின் சில ஆதரவாளர்களும் இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவங்களைப் பாராட்டினர். பின்னரே இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றனர்.

**ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் மதவெறி**

தவறான முடிவெடுத்து உயிரை மாய்ப்பதை அல்லாவாகிய தமது இறைவன் ஏற்றுக் கொள்ளமாட்டார் என்றுரைக்கின்றது இஸ்லாமிய மார்க்கம். இந்த மார்க்கத்தின் அதி பற்றாளர்கள் என்று தம்மைச் சுட்டிக்காட்டும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் தமது உயிரையும் மாய்த்து மற்றைய மனிதர்களையும் கொன்று குவிக்கிறார்கள். இத்தகைய தற்கொலைதாரியை அல்லா ஏற்றுக்கொள்வார் என்று குறிப்பிடுகின்றனர். இதைவிடப் பல அற்பத்தனங்களும், மூடத்தனங்களாலுமே குறித்த அமைப்புக் கட்டமைக்கப்பட்டுள்ளது.

இஸ்லாம் மதத்தில் ஏலவே உள்ள இறுக்கங்களால் வளர்க்கப்பட்டுவரும் சமுதாயம் இந்த வகை ஆயுத அமைப்பைத் தஞ்சமடையம்போது மூளைச் சலவை செய்யப்படுவது இலகுவாகிவிடுவது பற்றியும் விவாதிக்கப்படுகிறது. இது தவிர்ந்த ஏனைய சில காரியங்களால் அந்த அமைப்பின்பால் இளைஞர்கள் ஈர்க்கப்படுகிறார்கள் என்றும் அறியப்படுகிறது. பாலியல் அடிமைகளாகப் பெண்களை விற்றல், பயன்படுத்தல் எனப் பலவிதமான கொடூரங்கள் மூலமாக இன்பம் அனுபவிக்க வழிசமைப்பது உள்ளிட்ட பல குரூரங்கள் ஏலவே ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் மேல் முன்வைக்கப்பட்டிருப்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது.

**இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ்**

2016ஆம் ஆண்டு இலங்கை நுண்ணறிவுப் பிரிவு நாட்டுக்குள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இல்லை என ஒரு விசாரணையின் முடிவில் அறிக்கையிட்டது. இருப்பினும் ஐ.எஸ்.ஐ.எஸ்ஸுக்குத் தமிழ் பேசும் ஆதரவாளர்கள் இருப்பதும், ஜிகாதிகள் பரப்புரையைப் பரப்புவதும் தெரியவந்தது. பின்னர் இஸ்லாமிய அரசு தமிழ் எனப் பெயரிடப்பட்ட ஒரு வலைத்தளத்தில் இணையும்படி ஐ.எஸ்.ஐ.எஸ். ஆதரவாளர்களால் பலருக்கும் ஓர் இணைப்பு பகிரப்பட்டது. 'தி ஸ்ட்ரேஞ்சர்ஸ் சணல்' என்றொரு தமிழ் பக்கமும் ஜிகாதிகள் ஆதரவாளர்களால் விளம்பரப்படுத்தப்பட்டது. 'அல் குர்பா மீடியா' என்ற பெயரில் முகநூலில் ஜஹ்ரான் ஹாஷிம் தனது காணொலிகளைப் பகிர்ந்திருந்தார்.

ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத முகவர்கள் கொழும்பு, வில்பத்து, காத்தான்குடி ஆகிய பிரதேசங்களுக்குள் ஊடுருவியிருப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளது என 2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் தெரிவித்தார் பொதுபல சேனாவின் நிர்வாகப் பணிப்பாளர் கலாநிதி டிலந்த விதானகே. சிரியாவில் சாவடைந்த இலங்கையின் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிக்கு இந்த இயக்கம் நஷ்டஈடு வழங்கியுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்திருப்பதாகவும், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், மாலைதீவு, இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத முகவர்கள் இலங்கைக்குள் ஊடுருவியிருப்பதாகவும் இவர்கள் கொழும்பு, வில்பத்து, காத்தான்குடி போன்ற பிரதேசங்களில் தங்கியிருப்பதாகவும் இவர்களுக்கு அடையாள அட்டை பெற்றுக் கொடுத்துள்ளதாகவும் அறியவருகிறதெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

**இந்தியாவிலிருந்து இலங்கைக்குள்**

இந்தியாவின் கேரளாவைச் சேர்ந்த 17 பேர் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத இயக்கத்தில் சேர்ந்துள்ளதாகவும் இவர்கள் இலங்கை மற்றும் சவூதி அரேபியாவில் உள்ள புனிதத் தலங்களுக்குச் செல்வதாகக் கூறிவிட்டு சென்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது என்று இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு 2016 ஜூலை மாதம் தெரிவித்தது.

இதேநேரம் இந்தியாவின் கேரளாவைச் சேர்ந்த 17 பேர் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத இயக்கத்தில் சேர்ந்துள்ளதாக இந்தியாவின் பிரபல ஊடகம் ஒன்றும் அப்போது தெரிவித்தது. கேரள மாநிலத்தின் காசர்கோடு மற்றும் பாலக்காட்டைச் சேர்ந்த 16 பேர் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் காணாமல்போயினர். இவர்க்ளில் 4 பெண்களும் 2 குழந்தைகளும் உள்ளடங்குகின்றனர்.

இவர்கள் இலங்கை மற்றும் சவுதி அரேபியாவில் உள்ள புனிதத் தலங்களுக்குச் செல்வதாகக் கூறிவிட்டுச் சென்றனர். பின்னர் ஒரு மாதமாகியும் இவர்களைப் பற்றிய எந்தத் தகவலும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது. சிறிது காலத்தில் காணாமல்போன ஒருவரின் (ஹபீசுதீன் என்று அவருடைய பெயர் அறியப்படுகிறது) மனைவியின் கையடக்கத் தொலைபேசிக்கு ஒரு குறுந்தகவல் வந்ததாகவும், அதில் நாங்கள் இஸ்லாமிய நாட்டுக்கு வந்து விட்டோம். இங்கு நிரபராதிகளை அமெரிக்கா கொன்று குவிக்கிறது. எனவே அவர்களைப் பழிவாங்குவதற்காக ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்காக நாங்கள் எங்களை அர்ப்பணித்து விட்டோம்.

இனிமேல் எங்களைத் தேட வேண்டாம் எனத் தகவல் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அது குறித்துக் குறித்த குடும்ப நபர்கள் கேரள முதல்வர் பினராய் விஜயனிடம் முறைப்பாடு செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து உடனடியாக விசாரணை நடத்துவதற்குக் கேரளாப் பொலிஸாருக்கு முதல்வர் உத்தரவிட்டதாகவும் செய்திகள் வெளியாகின. அப்போது இது தொடர்பில் இலங்கையின் பாதுகாப்பு ஊடகப்பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீரவும் கருத்து வெளியிட்டார். இந்தச் செய்தி ஊடகங்களில் வெளியர்கியுள்ளது எனினும் இது தொடர்பில் இந்தியப் பாதுகாப்புத் தரப்பினர் தமக்கு எந்தவித உத்தியோகபூர்வ தகவல்களை வெளியிடவில்லை என்று அப்போது அவர் கூறினார். ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் இலங்கையில் அவ்வாறு எதுவும் அடையாளம் காணப்படவில்லை என்றும் தமக்குத் தகவல் கிடைக்கும் பட்சத்தில் இந்த விடயம் தொடர்பில் இந்தியப் பாதுகாப்புப் பிரிவுடன் இணைந்து செயற்படத் தயாராக உள்ளோம் என்றும் தம அப்போது அவர் தெரிவித்தார். எது எப்படியிருப்பினும் தற்போது இலங்கைக்குள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு ஊடுருவிவிட்டமை தெளிவாகிறது.

அதைப்போலவே குறித்த ஒரு சாம்ராஜ்யத்தில் நிலைகொள்ள முடியாத அவர்களின் நிலை உலகு முழுதும் அவர்களைப் பரப்பியிருப்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.



# உலகில் குறி வைக்கப்பட்ட உயிர்த்த ஞாயிறுகள் பல!

மேரி கிரிஸ் வரதராசன்



பிலிப்பைன்ஸ்



எகிப்து



கிறிஸ்தவர்களின் உயிர்த்த ஞாயிறு கொண்டாட்டத்தின்போது இந்த வருடம் இலங்கை குறிவைக்கப்பட்டிருக்கிறது. இலங்கையிலுள்ள தேவாலயங்கள், ஹோட்டல்கள், மற்றும் வீடுகளில் குறித்த தினத்தன்று குண்டுத் தாக்குதல்கள் நடந்து பல உயிர்களைப் பறித்துள்ளன. இந்த வருடம் உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு இலங்கையில் நடந்த இதுபோன்ற தாக்குதல்கள் இது வரையான ஆண்டுகளில் வேறு பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்டிருப்பதையும் இந்த இடத்தில் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. இதற்கு இஸ்லாம் தீவிரவாதக் குழுக்களின் கிறிஸ்தவம் மீதான காழ்ப்புணர்வே அதிக காரணமாக இருக்கிறது. அத்துடன் அமெரிக்கா என்கிற ஏகாதிபத்தியத்துக்கு எதிரான கோஷங்களையும் இந்த இஸ்லாமியத் தீவிரவாதிகள் வெளிப்படுத்தத் தவறவில்லை. ஆங்காங்கே ஒடுக்கப்பட்ட ஒரு சில இஸ்லாமியர்கள் ஒன்றுகூடி அந்த ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுவதுடன், அந்த ஒடுக்குமுறைக்குச் சரியான தீர்வாகத் தீவிரவாதச் செயல்களில் ஈடுபடுவதால் இத்தகைய தாக்குதல்கள் தொடர்ந்தும் நடந்து வருகின்றன.

**ஆசியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். தாக்குதல்கள்**

இதற்கு முன் ஆசிய மற்றும் மத்திய கிழக்கின் பல்வேறு பகுதிகளில் தேவாலயங்களைக் குறிவைத்துத் தாக்குதலில் ஈடுபட்டிருக்கிறது ஐ.எஸ்.ஐ.எஸ். 2018ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதியன்று இந்தோனேசியாவின் சூரபயா என்கிற நகரில் தேவாலயம் ஒன்றையும், பொலிஸ் தலைமையகத்தையும், தனியாருக்குச் சொந்தமான குடியிருப்புத் தொகுதி ஒன்றையும் குறிவைத்துத் தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியது. இதில் 28பேர் கொல்லப்பட்டனர். இதற்கடுத்து அங்கு அதே ஆண்டு ஜுலை மாதத்தில் மாகோ பிறிம்போ ஸ்ரான்டொவ என்கிற பகுதியில் மற்றொரு தாக்குதல் நடந்தது. இதில் 8பேர் கொல்லப்பட்டனர். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு நடத்திய இந்த இரண்டு தாக்குதல்களுக்கும் முன்னர் 2002ஆம் ஆண்டில் அங்குள்ள சுற்றுலா நகரான குட்டாவில் நடந்த தாக்குதலில் 204பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்கு அல்கொய்தாவும் ஜமாத் இஸ்லாம் என்கிற அமைப்பும் உரிமை கோரின. பிலிப்பைன்ஸின் ஜோலோ என்கிற நகரத்திலுள்ள தேவாலயங்களில் 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அதிகாலை தாக்குதல்கள் நடந்தன. இந்தத் தாக்குதலில் 20பேர் கொல்லப்பட்டனர். ஐ.எஸ்.ஐ.எஸ். பொறுப்பேற்றது. ஆசியாவில் இந்தத் தாக்குதல்களைவிட, இந்தியா, மியன்மாரில் உள்ள பௌத்த மதத்தவர்களை ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் எதிரி ஜிகாதிகள் குழுவான அல்கொய்தா, "முஸ்லிம்கள் மீதான உங்கள் தாக்குதல்கள் நிறுத்தப்படாவிட்டால் ஜிகாதிகளின் பதிலடியைச் சந்திக்க நேரிடும்" என்று எச்சரித்தமையும் பதிவாகியிருக்கிறது.



**உயிர்த்த ஞாயிறைக் குறிவைத்த தாக்குதல்கள்**

ஆசிய நாடான பாகிஸ்தானின் தலைநகர் லாகூரில் 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் திகதி உயிர்த்த ஞாயிறன்று ஜமாத் உல் அஹ்ரார் என்கிற அமைப்பால் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 75பேர் கொல்லப்பட்டனர். உயிர்த்த ஞாயிறு தினத்தன்று குல்ஷன் இ இக்பல் என்கிற பூங்காவைக் குறிவைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் இறந்தவர்களில் அதிகமானோர் இஸ்லாமியர்களாகவே இருந்தார்கள். இதற்கடுத்து 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் உயிர்த்த ஞாயிறுப் பண்டிகைக்குச் சில நாள்களுக்கு முன்பாக (குருத்து ஞாயிறு தினத்தன்று) எகிப்தின் காப்டிக் தேவாலயத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 47 பேர் கொல்லப்பட்டனர். இரண்டு குண்டுதாரிகள் இந்தத் தாக்குதலில் சம்பந்தப்பட்டதாகவும், அதில் ஒருவரின் பெயர் மஹ்மூத் ஹசன் முபாரக் அப்துல்லா என்றும் பின்னர் அறியப்பட்டது. சிரியாவுக்கான இஸ்லாமிய அரசு என்கிற அமைப்பு இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றது. இதற்கடுத்து அதே ஆண்டு டிசெம்பர் மாதத்தில் எகிப்தின் மற்றொரு நகரான கைரோவிலுள்ள பொட்றோசெயா தேவாலயத்தில் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது. 29பேர் கொல்லப்பட்ட இந்தத் தாக்குதலுக்கும் சிரியாவுக்கான இஸ்லாமிய அரசு என்கிற அமைப்பே பொறுப்பேற்றது.

> ஆங்காங்கே ஒடுக்கப்பட்ட ஒரு சில இஸ்லாமியர்கள் ஒன்றுகூடி அந்த ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுவதுடன், அந்த ஒடுக்கு முறைக்குச் சரியான தீர்வாகத் தீவிரவாதச் செயல்களில் ஈடுபடுவதை நியாயப்படுத்துவதால் இத்தகைய தாக்குதல்கள் தொடர்ந்தும் நடந்து வருகின்றன.



இந்தோனேசியா

**நைஜீரியா மற்றும் யேமன் தாக்குதல்கள்**

நைஜீரியாவில் 2012 ஆம் ஆண்டு கடுனா நகரத்தில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களில் 38 பேர் சாவடைந்தனர். மகிழுந்தில் குண்டுகள் நிரப்பப்பட்டு இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதில் போகோ ஹராம் அமைப்பு குற்றஞ்சாட்டப்பட்டது. இஸ்லாம் கிறிஸ்தவ மோதல்கள் கடுனா பகுதியில் தொடர்ந்து நடந்து வந்தன. இதில் நூற்றுக்கணக்கான மக்கள் சாவடைந்தனர். அதே ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம், 6ஆம் திகதிகளில் முபி, யொலா, ஹொம்பி, மைடுகுறி ஆகிய பகுதிகளிலும் 20ஆம் திகதி கனோ நகரிலும் தாக்குதல்கள் நடந்தன. தேவாலயங்கள், பொலிஸ் நிலையங்கள், குடியகல்வு குடிவரவு திணைக்களம், உள்நாட்டுப் பாதுகாப்புத் திணைக்களம் உட்படப் பல பகுதிகளைக் குறிவைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்களில் 222பேர் கொல்லப்பட்டனர். இதற்குப் போகோ ஹராம் அமைப்புப் பொறுப்பேற்றது. 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் தெற்கு யேமனில் துப்பாக்கிதாரி சுட்டதில் கன்னியாஸ்திரிகள் உட்பட 16 பேர் சாவடைந்தனர். இவர்கள் அனைவரும் அங்கு அன்னை தெரேசா ஆரம்பித்த தொண்டு நிறுவனத்தில் பணி செய்தவர்கள். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு மீது இந்தத் தாக்குதலுக்குக் குற்றஞ்சாட்டப்பட்டது. 2016ஆம் ஆண்டு 23ஆம் திகதி மே மாதம் யேமனின் அடென் என்கிற நகரில் குண்டுத்தாக்குதல்களும் தற்கொலைத் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. 2மாதக் குழந்தைகள் இருவர் உட்பட 45பேர் கொல்லப்பட்டனர். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பே இதற்கும் பொறுப்பேற்றது. இவ்வாறாகவும், இதைவிடவும் உலகம் பூராகவும் இஸ்லாமியத் தீவிரவாதம் தாக்குதல்கள் நடத்திய பதிவுகள் பல உண்டு.



இலங்கை

© REUTERS

# முஸ்லிம்களுடனான அணுகுமுறை!

■ வே. சந்திரசேகர்

ஆங்கிலத்தில் 'ஐ.எஸ்.ஐ.எஸ்' என்று சுட்டப்படுகின்ற பதத்தின் விரிவாக்கம் ஈராக்கிலும் சிரியாவிலும் இஸ்லாமிய அரசு என்பது. ஈராக்கையும் சிரியாவையும் இணைத்து இஸ்லாமிய அரசு ஒன்றை நிறுவும் நோக்குடன் இந்த அமைப்புச் செயற்பட்டு வருகிறது. இது உலகறிந்த விடயம் இதுவரை இந்த அமைப்பால் பல நாடுகளில், பல பகுதிகளில் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. பலர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தாக்குதல்களில் இஸ்லாமியர்கள் அல்லாதவர்களே குறிவைக்கப்பட்டு ஈவிரக்கமின்றிக் கொன்று குவிக்கப்படுகின்றனர்.

இது இஸ்லாம் ஒன்றை மாத்திரம் ஆதரிக்கின்ற, இஸ்லாம் சார் கடும் கோட்பாட்டை நிறுவ முற்படுகிற அமைப்பு. இந்த அமைப்பு முன்னெடுக்கின்ற தாக்குதல்கள், துன்புறுத்தல்கள், பாலியல் வதைகள் என்பன மனித குலத்துக்கு எதிரான உச்ச கொடூரங்கள்.

மிக மோசமான ஆயுத அமைப்பாக உலகளவில் பேசப்படுகிறது இந்த ஐ.எஸ்.ஐ.எஸ். ஈராக், சிரியா மாத்திரமன்றி உலக நாடுகள் பலவற்றிலும் கால் பதித்துள்ளது. இந்த அமைப்பின் தாக்குதல்களை எதிர்கொண்ட நாடுகள் பல. அவற்றுக்குள் இலங்கையும் ஒன்றாகியிருக்கிறது. ஆனால், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புத் தாக்குதல் நடத்தியுள்ள மற்றைய நாடுகளைக் காட்டிலும் இலங்கை வேறுபட்ட சூழலை உடையது. இங்குள்ள சிங்கள, தமிழ் இனங்களுடன் கூடி வாழ வேண்டிய நிலைமையிலுள்ளது உள்நாட்டில் இஸ்லாம் சமூகம். குறித்த அமைப்பின் தாக்குதல்களையடுத்துப் பல இடர்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டிருக்கிறது இந்தச் சமூகம். தாக்குதல் நடந்தேறிய பின்னரான நாட்டு நிலைமைகளில் இருந்து இதைப் பிரிந்தறிவது சுலபம்.

**பர்தாவுக்குத் தடை கோரும் தீர்மானம்**

இலங்கைக்குள் ஊடுருவி ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புத் தாக்குதல் நடத்திய பின்னர் முஸ்லிம் பெண்கள் அணிகின்ற முஸ்;லிம்களின் கலாசாரங்களைப் பிரதிபலிக்கின்ற ஆடையான பர்தாவுக்குத் தடை கோரும் தீர்மானம் குறித்துக் கவனத்தில் எடுக்கப்பட்டிருக்கிறது. பர்தாவைத் தடை செய்யக் கோரும் தீர்மான வரைபை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷீ மாரசிங்க நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளார். நாட்டின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்டான வரைபைச் சமர்ப்பிப்பதாகத் தெரிவித்த அவர், முஸ்லிம் பெண்கள் அணியும் குறித்த ஆடையால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உண்டு எனவே அதைத் தடை செய்கின்ற சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்றார். அண்மையில் நடந்த குண்டுத் தாக்குதல்களில் எந்தவொரு தற்கொலைதாரியும் பர்தா அணிந்து தாக்குதலைத் தொடுத்ததாக அறியக் கிட்க்க வில்லையாயினும் பர்தாவுக்குத் தடை கொண்டு வர வேண்டும் என்ற குரல் எழுப்பப்பட்டிருக்கிறது. இது ஏலவே இங்கு பெரும்பான்மை இனத்துடன் இருந்து வந்த முறுகல் முரண் நிலையின் வெளிப்பாடாகக் கொள்ளத்தக்கதே.

**முஸ்லிம்கள் மீதான வன்முறைகள்**

சிங்கள - தமிழருக்கிடையிலேயே இதுவரை நாட்டில் நீடித்திருந்தது பிரச்சினை. இது இனப் பிரச்சினை என்று சுட்டப்பட்டாலும் அதில் முஸ்லிம்கள் உள்வாங்கப்படவில்லை. சிங்கள - தமிழ் ஆகிய இரண்டு இனங்களுக்கிடையிலான இனப் பிரச்சினை யாகவே அது நடந்து முடிந்தது. கடந்த முப்பதாண்டு காலம் நடந்த அந்தப் பிரச்சினையில் முஸ்லிம்களுக்கான பாதிப்பு யாழ்ப்பாணத்தை விட்டுப் புலிகளால் வெளியேற்றப்பட்டதுடன் மட்டுப்படுத்தப்பட்டது. அந்த வெளியேற்றம் போரில் அவர்களின் ஈடுபாட்டைக் குறைத்ததோடு, இழப்புகளையும் தவிர்த்தது. இந்த விடயத்தில் புலிகள்ா தமிழ் மக்கள் மீது ஒரு சில முஸ்லிம்கள் அதிருப்தியை வெளிப்படுத்தினாலும், பின்னாள்களில் அந்த வெளியேற்றத்தால் அவர்களுக்கு ஏற்பட்ட நன்மைகளும், தமிழர் சிங்களவர் தொடர்புடைய இனப்பிரச்சினை விடயத்துக்குள் தள்ளப்படாமல் தப்பித்துக் கொண்டமையும் சிலாகிக்கப்பட்டது. தமிழ் சிங்கள இனப் பிரச்சினை முடிவுக்கு வந்த கையோடு, முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் பதிவாகின. முஸ்லிம்கள் பலர் கொல்லப்பட, முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் சூறை யாடப்பட்டன. நீண்ட போருடன் தமிழர் - சிங்களவர் பிரச்சினை ஓய்ந்திருக்க முஸ்லிம் - சிங்களவர் பிரச்சினை தலையெடுத்தது. இந்த நிலையிலே ஐ.எஸ். ஐ.எஸ். என்கிற ஆயுத அமைப்பின் தாக்குதல்கள் பதிவாகின. முஸ்லிம்கள் மீதான காழ்ப்புணர்வு விசாலிக்கிறது.

**தடைச் சட்டங்களின் கலப்பு**

நாட்டில் ஆரம்பித்த இனப் பிரச்சினையை அடுத்து பயங்கரவாதத் தடைச்சட்டம், கொண்டுவரப்பட்டது. அவசர காலச் சட்டமும் நடைமுறைக்கிடப்பட்டது. இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைக் காரணம் காட்டிப் பயங்கரவாதிகள் எனும் பெயரில் அப்பாவித் தமிழ்மக்கள், இளைஞர், யுவதிகளைக் கடத்தியது, காணாமலாக்கியது, கொன்றது எனப் பல பரிமாணங்களில் அரச படை அட்டூழியம் நடத்தியது. சோகமான மோசமான வரலாறு ஒன்று பதிவாகியது. போர் முடிந்த பின்பும் கூடப் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவில்லை. தற்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் சரத்துகளில் சிலவற்றை அவசரகாலத் தடைச்சட்டத்துடன் இணைக்கும் யோசனை முடிவாகியிருக்கிறது. இதனால், குறித்த தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் தண்டிக்கப்படுவதும், கண்டறியப்படுவதும், திட்டமிடப்பட்டிருந்த தாக்குதல்கள் தவிர்க்கப்படுவதுமாக இருந்தால் மாத்திரமே இது வரவேற்கப்படக்கூடியது. அல்லாமல் கடந்த காலங்களில் இனத்துவேசத்தைத் தமிழர்கள் மீது செலுத்தியதுபோல் இனி அதை முஸ்லிம்கள் மீது செலுத்துவதில்போய் முடிந்தால் இந்தத் தடைச்சட்டங்களும் அவற்றின் வழி அரங்கெறுகின்ற அட்டூழியங்களும் கண்டிக்கப்படவேண்டியவையே.

**அரச தலைவர், தலைமை அமைச்சரின் கருத்துகள்**

நடந்து முடிந்துள்ள குண்டுவெடிப்பு விவகாரத்தில் முஸ்லிம் மக்களைச் சந்தேகக் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டாம் என்றுள்ளார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. தாக்குதல் சம்பவம் குறித்து நாட்டு மக்களுக்கு ஆற்றிய சிறப்பு உரையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். 1980ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப் பகுதியில் சிங்கள மக்கள், தமிழர்களைச் சந்தேகக் கண்ணோட்டத்திலேயே பார்த்ததாக சுட்டிக்காட்டிய உதாரணத்துக்குத் தமிழர் சிங்களவர் முரண்பாட்டை முன்னிறுத்திக் காட்டிய அவர், அதன் பின்னரான காலப் பகுதியில் தமிழர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் கிடையாது என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டதாகவும் குறிப்பிட்டார். அதேபோன்றே அனைத்து முஸ்லிம் மக்களையும் சந்தேகக் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டாம் என்று தமிழர் மற்றும் சிங்கள மக்களிடம் வெளிப்படையாக வேண்டுகோள் விடுத்தார். இந்த அபத்தம் பற்றி அவர் நன்கு அறிந்து வைத்திருந்து பொறுப்புடன் இவ்வாறு நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டது பாராட்டுக்குரியதே. அத்தோடு, அனைத்து முஸ்லிம் மக்களும் பயங்கரவாதிகள் கிடையாது என்றும் ஒரு சிலரே இனவாத ரீதியில் செயற்பட்டு வருகிறார்கள் என்றும் அவர் கூறிய கூற்றுகள் முஸ்லிம் மக்கள் குறித்து மற்றைய இனங்கள் மத்தியில் உருhக்கூடிய காழ்ப்புணர்வைத் தவிர்ப்பதற்காக அவரால் முன்மொழியப்பட்டவையே. அதே நேரம், நாடாளுமன்றத்தில் ஆற்றிய சிறப்பு உரையின்போது "1983ஆம் ஆண்டில் புலிகள் தாக்குதல்களை ஆரம்பித்தபோது தமிழ் மக்களின் மிகச் சிறிய தொகையினரே அவர்களை ஆதரித்தார்கள் நாம் இனக்கலவரம் ஒன்றை நடத்தியதால் அது அவர்களுக்குச் சாதகமாக அமைந்தது. 30 வருடங்கள் துன்பப்பட வேண்டியிருந்தது. அவ்வாறதொரு நிலை இனித் தோற்றுவிக்கப்படக்கூடாது.'' எனக் குறிப்பிட்டார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க. இவர்களின் கருத்துக்கள் மனங்கொள்ளத்தக்கன.

**முஸ்லிம்கள் மீதான பார்வை**

ஐ.எஸ்.ஐ.எஸ். என்பது இஸ்லாம் சார்ந்த இறுக்கமான, மூடத்தனமான, மிக மோசமான ஆயுத அமைப்பு என்பது உண்மையே. தற்கொலைதாரிகள், தாக்குதலுக்குத் திட்டம் தீட்டிய சூதத்திரதாரிகள், உதவியளிப்பவர்கள் என்று அந்த அமைப்பின் செயற்பாட்டுக்கு உயிரளிப்பவர்களும் இஸ்லாம் சார்ந்தவர்களே. ஆனால், அதை முழு இஸ்லாம் சமூகம் மீதும் திணித்து விட முடியாது. இந்தத் தாக்குதலுக்கு உதவியளித்ததாக நம்பப்படுகின்ற உள்நாட்டு முஸ்லிம் அமைப்பையும், அந்த அமைப்பச் சார்ந்த நபர்களையும் கண்டித்தும், அவர்களை விரட்டியடிக்கு மாறும் கோரி முஸ்லிம்கள் சிலர் நடத்திய போராட்டம் இவ்விடத்தில் சுட்டிக்காட்டத்தக்கது. பௌத்தம், கிறிஸ்தவம், இந்து ஆகிய இங்குள்ள மற்றைய மதங்களைக் காட்டிலும் இஸ்லாம் மதத்தவர்களின் மத இறுக்கம் அதிகமானது என்பதை ஏற்றுக்கொண்டாலும், தற்போதைய தாக்குதல் விடயத்தில் ஒட்டுமொத்த இஸ்லாமியர்களின் மீதும் கறையைப் படிய வைப்பதும், வக்கிரப் பார்வையைச் செலுத்துவதும் முறையற்றது. ஓர் ஆயுதக் குழுவையும், அதை ஆதரிக்கின்ற ஒரு சில இஸ்லாமியர்களையும் கொண்டு ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களையும் வன்மத்துக்கு உள்ளாக்குவது முறையற்றது.

மறுபுறத்தில் இலங்கையில் மற்றைய இனத்தவர்களோடும், மதத்தவர்களோடும் வாழத்தக்க வகையில் இஸ்லாமியர்களும் ஏனைய மதத்தினரும் தமது மதம் சார்ந்த இறுக்கங்களைத் தளர்த்திக் கொள்வதற்கு முன்வருவது மேம்பட்ட மனிதர்களாக அவர்களை உயர்த்தும். ■



கார்த்திகேசு செங்கதிர்நாதன்

# முகநூலின் முடக்கமும் முற்றுப்புள்ளியிடல்களும்

முகநூல் முடக்கப்பட்டதுடன் அரட்டைகள் மற்றும் அலப்பறைகள் முடிவுக்கு வந்தன என்பதும், மக்களிடையே பதற்றங்களையும், அநாவசிய விடயங்களையும் பரப்புவது தவிர்க்கப்பட்டது என்பதும் நிகழ்ந்தது. இந்தத் தடைக்கு மத்தியில் கீச்சகத்தின் பயன்பாடு நீடித்தது. அதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கவில்லை.


தின மலர்

'ஓ... சேசப்பா!'

- இலங்கையில் எட்டு இடங்களில் தொடர் குண்டு வெடிப்பு
- தேவாலயங்கள். நட்சத்திர ஓட்டல்கள் சின்னாபின்னமாகின
- ஈஸ்டர் விழாவில் நிகழ்ந்த கோர தாக்குதல்களில் 225 பேர் பலி
- நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு அமல்; 500 பேர் படுகாயம்

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடந்த குண்டுத் தாக்குதல்களுடன் சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டன. தேவையற்ற வாந்திகளைப் பரப்பி மற்றவர்களைப் பதற்றத்துக்கு உள்ளாக்குவதைத் தவிர்க்கவும், வன்மங்களைத் தூண்டிவிட்டு வன்முறைகள் ஏற்படுவதைத் தவிர்க்கவுமே இந்த வலைத்தள முடக்கம் உடனடியாக நடைமுறைக்கிடப்பட்டது. கீச்சகம் தவிர்ந்த இணையச் செயலிகள் முடக்கப்பட்டன. காணொலிகளைப் பகிரும், பதிவிடும், பரப்பும் 'யூ டியூப்'புக்கும் தடை விழுந்தது. முகநூல் மற்றும் இதர வலைத்தளச் செயலிகள் மூலம் அனுபவிக்கக்கூடிய பயன்கள், வசதிகளைப் புறந்தள்ளி அவற்றை அரட்டைக்காகவும், தேவையற்ற காரியங்களுக்கும், பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதற்குமே நம்மவர்கள் பயன்படுத்தி வந்தார்கள். இதன் காரணத்தாலேயே நாட்டில் நடந்த பெரும் அசம்பாவிதங்களுக்கு மத்தியில் முதல் பார்வையும், தடையும் அவற்றின் மீது விழுந்தன. இந்தத் தடை அத்தகைய அரட்டையர்களைத் தவிப்புக்கு உள்ளாக்கியிருக்கும் எனினும் பிரச்சினைகள் பலவற்றின் தோற்றுவாய்க்குத் தற்காலிகத் தடை விதிக்கும் என்பதே அதன் உடனடித் தேவையாக இருந்தது. ஆனாலும் இதைக் கடந்து குறிப்பிட்ட அளவுக்காவது உள்நாட்டில் முறுகல் நிலை ஒன்றுக்கு அத்திபாரமிடப்படாமலில்லை. இதற்குக் காரணம் புலம்பெயர்ந்துள்ள இலங்கையர்கள் விடயத்தில் இந்த முடக்கம் சாத்தியப்படாமையே. இங்குள்ள அரட்டையர்களுக்குச் சற்றும் குறைந்துவிடாத அவர்கள் இந்த விடயத்தில் தொடர்ந்தம் வன்மங்களைப் பரப்பாமலில்லை. இங்குள்ள வலைத் தள முடக்கங்கள் முடிவுக்கு வரும் பட்சத்தில் இந்த முறுகல் நிலை அதிகரிக்கலாம் என்று கட்டியம் கூறப்படுகிறது.

### கீச்சகப் பதிவுகள்

முகநூல் முடக்கப்பட்டதுடன் அரட்டைகள் மற்றும் அலப்பறைகள் முடிவுக்கு வந்தன என்பதும், மக்களிடையே பதற்றங்களையும், அநாவசிய விடயங்களையும் பரப்புவது தவிர்க்கப்பட்டது என்பதும் நிகழ்ந்தது. இந்தத் தடைக்கு மத்தியில் கீச்சகத்தின் பயன்பாடு நீடித்தது. அதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கவில்லை. முகநூல் போன்று நம்மவர்களிடையே அதிகம் பிரபலமாகாத, அரட்டைத் தன்மையில்லாத கீச்சகமானது செய்திகள் கிடைக்கும் வேகத்தையும், அளவையும் குறைத்திருந்தாலும், நம்பகத் தன்மையான செய்திகளைத் தொடர்ந்து வெளிப்படுத்திக் கொண்டது. ஆனாலும் நம்மவர்களில் ஒரு சிலரின், நான் முந்தி, நீ முந்தித் தனத்தால் தவறான செய்திகளும், வதந்திகளும் அதிலும் பரப்பப்படாமலில்லை. பல வீதிகளிலும் தடுப்புகள், சோதனைச் சாவடிகளை நிறுவி வாகனங்களைச் சோதனையிடுகின்றனர். வீட்டிலிருந்து பயணிக்கும்போது தேசிய அடையாள அட்டையுடன் செல்வது கட்டாயமானது, வாகனங்களை அநாதரவாக வீதிகளில் நிறுத்தாதீர்கள், பொதிகளுடன் பயணிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் இவற்றுக்குப் போதுமான ஒத்துழைப்பை வழங்குங்கள், பதற்றமடையாமல், இவற்றைப் பரபரப்பான வதந்திகளாக மாற்றாமல் அமைதியைப் பேணுங்கள் என்று கீச்சகத்தில் ஒரு சாரார் பதிவுகளை மேற்கொண்டுவர, இப்போது இருக்கின்ற சூழ்நிலையில் வீதிகளைச் சோதனையிடும் போது மக்கள் அச்சமடைய வேண்டாம் என்று காவல்துறைப் பேச்சாளரும் கேட்டுக்கொள்ள, குடிநீரில் விஷம் கலக்கப்பட்டதாக வாந்தி ஒன்றும் கீச்சகத்தில் பரவியது. பின்னர் அதில் எதுவித உண்மையுமில்லை எனப் பொலிஸ் பேச்சாளர் உறுதிப்படுத்தினார். இது முகப்புத்தகம்போன்ற அரட்டையர்களின் ஆதிக்கம் கீச்சகத்திலும் இல்லாமலில்லை என்பதை உணர்த்தியது.

### இந்திய ஊடகங்களின் தவறான செய்தியிடல்

நாட்டு நிலமையால் சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டிருக்க அச்சு ஊடகங்களும், தொலைக்காட்சி, வானொலி ஊடகங்களும் வழமைபோலவே மக்களுக்குச் செய்தியைப் பரப்பின. ஆனால், அச்சு ஊடகங்களிலும் இதுகுறித்த செய்திகளில் பர பரப்பையும், மக்களிடையே வன்முறைகளையும் தூண்டும் விதமான செய்திகள் வெளியாகாமலில்லை. குறிப்பாகத் தமிழக ஊடகங்கள் இந்த விடயத்தில் இங்குள்ள முகநூல் அரட்டையர்களைப்போல செய்திகளை அறிக்கையிட்டமை அருவருப்பூட்டுவதாக அமைந்தது. தாக்குதல் நடந்த தினத்தன்று ஓர் ஊடகம் 'ஓ சேசப்பா...' என்று வழித்தமையைக் கீச்சகத்தில் பலரும் கண்டித்தனர். ஓர் ஊடகம் இந்தத் தாக்குதல்களையடுத்து முஸ்லிம்கள் தாக்கப்பட்டுவருகிறார்கள் என்பதாகப் பரபரப்பை ஏற்படுத்தும் நோக்கில் செய்தி வெளியிட்டது. அத்தோடு இலங்கைச் செய்திகளைத் தமிழ்ப்படுத்தும், போது தமிழைச் சரியாகப் பயன்படுத்துமாறும் தமிழக அச்சு ஊடகங்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது. (டெமட்டகோடா, நெகெம்போ, பட்டிகலோ). அத்தோடு யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் உதயன் பத்திரிகையின் செய்தியிடல் குறித்த பாராட்டும் கீச்சகத்தில் எதிரொலித்தது.

அதே நேரம் அத்தியவசியமாகச் செய்யப்பட வேண்டிய, பேசப்படவேண்டிய, சிந்திக்கப்படவேண்டிய விடயங்கள் ஏராளமாக இருக்க, அவற்றைப் புறமொதுக்கி முகப்புத்தகத்தினரை ஒத்த விதி விலக்கான ஒருசிலர் குறித்த பத்திரிகையின் செய்தியிடலைச் சுட்டிக்காட்டிக் கிண்டலடிக்கவும் தவறியிருக்கவில்லை.

### முடக்கங்கள் முடிவுக்கு வந்ததும் முடிவைத் தேடுவதே சிறப்பு

உள்நாட்டில் முகப்புத்தகப் பயன்பாடு தவிர்க்கப்பட்டாலும் ஒரு சிலர் பிரத்தியோக இணையச் செயலிகளைத் தரவிறக்கி முகப்புத்தகப் பயன்பாட்டைத் தொடரவும் செய்திருக்கிறார்கள். இன, மத, மொழி, நிற வெறியர்களைப் போல அல்லாவிடினும் முகநூல் என்கிற போதைக்கு அடிமையானவர்கள் இவர்கள் என்பது ஆய்வுசெய்து கண்டுணர வேண்டிய விடயமல்ல. இவர்களும் ஒரு வகையில் ஆபத்தானவர்களே. அத்தோடு வெளி நாடுகளில் முகநூல் தொடர் பயன்பாட்டிலேயே உள்ளது. நம்மவர்கள் பலரும் அங்கிருந்தவாறு வழமையான தமது பதிவுகளை வெளிப்படுத்தியிருப்பார்கள். அவை வெறுப்புணர்வையும்:, முரண்பாடுகளையும் உருவாக்குவதற்கு மிகச் சிறந்த பங்காற்றத் தயாரக இருக்கும் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. முகநூல் மீதான தடை நீக்கப்படும்பேரது மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பிவிடும் அரட்டையர்கள் உலகம். கொழும்பில் ஒன்றும் அறியாத கிறிஸ்தவர்களுக்குக் குண்டு வைத்தது தவறு என்றும், யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்டபோதோ, பின்னர் சிங்களவர்களால் முஸ்லிம்கள் ஒடுக்கப்பட்டபோதே போர் செய்யாமை தவறு என்றும் காணொலி பதிவேற்றிக் குறிப்பிடுகின்றார் புலம்பெயர்ந்துள்ள இஸ்லாமியர் ஒருவர். அவரைப்போன்ற பலர் இந்த உலகில் உள்ளனர். இங்குள்ள ஏனைய மதத்தினரும் இனி முகநூலில் காழ்ப்புணர்வுகளைத் தூண்ட முற்பட மாட்டார்கள் என்று கூறுவதற்கில்லை. இவ்வகை மனிதர்களை அடையாளம் கண்டு ஆற்றுப்படுத்துவது அவசியமும், அவசரமுமானது என்பதை உணரவேண்டும். எதற்குமே வன்முறை தீர்வாகது என்பது புரிய வைக்கப்பட வேண்டும். மதங்கள் அனைத்துமே அன்பையும் சமத்துவத்தையும் சமாதானத்தையும் போதிப்பன என்று இடித்துரைக்க வேண்டும். மதங்கள் இன்றைக்குப் பாதை மாறிப் பயணிப்பதற்கு உடன் தடை வேண்டும்.


மனித வெடிகுண்டாக மாறிய சிங்கள கோடீஸ்வர குடும்பம்

ராஜபக்ஷேக்கு தொடர்பு

தமிழர்களுடன் 100 பேர் கைது

வெடி குண்டு ஆலை

திருச்சி சாமியார் ரூ. 37 லட்சம் மோசடி

மாலை முரசு

24-4-2019

அன்பே சிவம் என்கிற இந்துக்கள் அடாவடிகளில் ஈடுபடுவதும், ஒரு கன்னத்தை அறைந்தால் மறுகன்னத்தைக் காட்டு என்கிற கிறிஸ்தவர்கள் வன்முறைகளில் ஈடுபடுவதும், அமைதியைப் போதிக்கின்ற புத்தரின் போதைனைகளைப் புறந்தள்ளி அட்டூழியங்கள் நிகழத்துவதும், இஸ்லாமிய மார்க்கத்தில் கொலை செய்வதும், போர் புரிவதும் பற்றிக் குறிப்பிட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டி வன்மங்களைப் பரப்புவதும் உடனடியாகத் தவிர்க்கப்படவேண்டும். சக மனிதர்களிடம் அன்பு செலுத்தத் தவறுகின்ற எந்தவொரு மதத்தையும் கேள்விக்குட்படுத்தாமல் நிராகரிக்க வேண்டும். மத இறுக்கங்கள், மதப் பிடிப்புகளில் இருந்து விடுபட்டு மனிதர்களாக மாறுவதே தற்போதுள்ள தேவை என்பது அவசரமாக உணரப்படவேண்டும்.



# முஸ்லிம்களைப் பாதிக்கும் 'ஐ.எஸ்.ஐ.எஸ்.' ஆதிக்கம்

■ நியூட்டன்

ஐ.எஸ்.ஐ.எஸ். என்பது இஸ்லாமிய அடிப்படைவாதம், இஸ்லமியத் தீவிரவாதம், பயங்கரவாதம் ஆகிய விடயங்கள் கலந்த கலவையாகும். 'இஸ்லாமிக் இஸ்டேட் ஒவ் ஈராக் அன்ட் சிரியா' என்ற ஆங்கியப் பதத்தின் சுருக்கமே இந்த ஐ.எஸ்.ஐ.எஸ். ஈராக்கையும் சிரியாவையும் மையப்படுத்தி ஓர் இஸ்லாமிய அரசை உருவாக்குவதே இவர்களின் மூலோபாயமாகும்.



இந்த நோக்கத்தின் அடிப்படையில் சிரியாவில் இறுதியாகத் தம் வசம் வைத்திருந்த பாகூஸ் பகுதியையும் அண்மையில் அமெரிக்கப் படைகள் முற்று முழுதாக இவர்களிடமிருந்து பறித்தெடுத்தன. இப்போது அவர்களது இலக்கு உலகம் முழுவதுமாகி யுள்ளது. 'றிவேன்ஞ் இன்வென்சன்;' என்ற பழிவாங்கும் படையெடுப்பு நடவடிக்கையாக முடுக்கி விடப்பட்டிருக்கிறது. அதன் ஒரு வடிவமே கொழும்பிலும் மட்டக்களப்பிலும் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களாகும். இந்தத் தாக்குதல்கள் இலங்கையில் பல்வேறு உணர் நிலைகளைத் தோற்றுவித்திருந்த நிலையில், மேற்படித் தாக்குதல்களுக்குத் தாமே பொறுப்பு என வெளிப்படையாக அறிக்கை விட்டிருக்கிறது மேற்படி அமைப்பு. இந்தத் தாக்குதலுக்குத் தேசிய தௌபீத் ஜமாத் என்ற அமைப்பின் உறுப்பினராகவிருந்த சஹ்ரான் ஹாசிம் என்பவரே மூலகாரணம் என்றும் இவரின் தலைமையில் பலர் இந்தத் தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியதும் உறுதிப் படுத்தப்பட்டது.

**முழு முஸ்லிம்களையும் பாதிக்கிறது**

இலங்கையிலுள்ள முஸ்லிம்களில் மிகக் குறைந்த அளவினரே இத்தகைய தாக்குதல்களுடன் சம்பந்தப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும் இலங்கை வாழ் முஸ்லிம் மக்களுக்குப் பெரிய பாதிப்பாகவே இது அமைந்துள்ளது. இலங்கையின் அமைவிடம் மற்றும் சிங்களவர், தமிழர் என்ற இரண்டு இனங்களுடன் சேர்ந்து வாழவேண்டியிருப்பது, 1990 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளால் வெளியேற்றப்பட்டது, அதன் பின் வந்த அரசுகளால் பௌத்த மேலாதிக்க ஒடுக்குமுறைக்கு ஆளானது, எனப் பலரும் பல விடயங்களையும் பல கோணங்களில் முன்னிறுத்திப் பேசுவதற்கும், முரண்பாடுகளை நீட்டிக்கச் செய்வதற்கும் குறித்த தாக்குதல் வழிகோலியிருக்கின்றன. இங்கிருந்து படித்த பணக்கார முஸ்லிம் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்கள் வெளிநாடுகளில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புபட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை 2016ஆம் ஆண்டு நவம்பர் 16ஆம் திகதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச, நாடாளுமன்றில் குறிப்பிட்டார்.

"நான்கு குடும்பங்க ளைச் சேர்ந்த 32பேர் ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தால் பயிற்றுவிக்கப்பட்டு இலங்கையில் தாக்குதல்களை நடத்துவதற்குத் தயாராகவுள்ளனர்" என அன்று அவர் குறிப்பிட்டபோது அதை ஐக்கிய தேசியக் கட்சியின் முஸ்லிம் அமைச்சரான முஜிபு ரஹ்மான் வன்மையாகக் கண்டித்தார்.

நடந்து முடிந்த தாக்குதலின் பின்னர் கூடிய நாடாளுமன்றச் சிறப்பு அமர்வின்போது, "இந்தத் தாக்குதலுக்கு முஜிபு ரஹ்மானே பொறுப்பு ஏற்க வேண்டும்" என்று விஜயதாச ராஜபக்ச நேரடியாகவே கூறி முடித்தார்.

**முஸ்லிம் அரசியல்வாதிகளும் பின்னணியில்...**

வானத்தவில்லு (வண்ணாத்தி வில்) பகுதியில் 100 கிலோ வெடிபொருள்களுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை முஜிபு ரஹ்மான் காப்பாற்றினார் எனவும் அவர்களில் ஒருவர் தற்போது தற்கொலைக் குண்டுதாரியாக இறந்திருக்கிறார் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் கபீர் காசிம் குற்றம் சாட்டினார். இந்தத் தாக்குதல்தாரிகளுடன் வடக்குக் கிழக்கைச் சேர்ந்த முஸ்லிம் அரசியல் வாதிகள் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் இவர்கள் தவிர நாடாளுமன்றிலும் வெளியேயும் பரவலாகப் பேச்செழுந்தது. றிசாத் பதியுதீன், ஹிஸ்புல்லா, முஜிபு ரஹ்மான், ஆசாத் சாலி ஆகியோரே இதில் முக்கியப்பட்டார்கள். அதே நேரம் வடக்குக் கிழக்கைச் சாராத ரவூப் ஹக்கீம், கபீர் காசிம், பௌசி ஆகியோருக்கு இந்தத் தாக்குதல் தாரிகளுடன் தொடர்பிருந்ததாக இதுவரை செய்திகளில்லை. குண்டு வெடிப்பு நிகழ்ந்தவுடன் கொச்சிக்கடை தேவாலயத்துக்குப் பயணம் செய்தவர்களில் மூத்த அமைச்சர் பௌசியும் ஒருவர். அவர் இந்தத் தாக்குதல்களைப் பார்த்தவுடன் "விடுதலைப் புலிகளைவிட மிகப் பயங்கரமான வகையில் இந்தத் தாக்குதல் காணப்படுகிறது. இதைச் செய்தவர்கள் எவராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும்" என்றார். அன்று மாலையே இஸ்லாமியப் பயங்கரவாதிகளால் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகத் தெரியவந்து அதிர்ச்சியூட்டியது.

**நாடு முடங்கியது**

இந்தப் பயங்கரவாதத் தாக்குதலானது இலங்கையை முழுதுமாக முடக்கியிருக்கிறது என்பதை எவராலும் மறுக்க முடியாது. பாடசாலைகளை ஆரம்பிப்பது வர்த்தக நிலையங்கள், வணக்க ஸ்தலங்கள், அரச திணைக்களங்கள், சந்தைகள், தொடருந்து நிலையங்கள், வானூர்தி நிலையச் செயற்பாடு எனப் பல்வேறு பகுதிகளிலும் முஸ்;லிம்கள் சந்தேகத்துக்குரியவர்களாகப் பார்க்கப்படுகின்ற நிலை ஏற்பட்டு விட்டது.

முஸ்லிம் பெண்கள் அணிகின்ற ஆடை தொடர்பில் அதிகம் சிகிக்கப்படுகிறது. இனிச் சாதாரண முஸ்லிம் மக்களை புறமொதுக்குவதற்காக ஏதுகளையும் குறித்த தாக்குதல் ஏற்படுத்தியிருக்கிறது.

**புலிகளால் வெளியேற்றப்பட்டது சரி எனும் சிந்தனை**


1990ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளால் முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட போது அதை விமர்சித்த சிங்களத் தலைவர்கள்கூட தற்போது அது ஓர் தீர்க்க தரிசன முடிவே என்று சிந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது இந்தத் தாக்குதல். அந்தச் சூழலில் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தொடர்பில் தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் ஆழமான அனுதாபம் இருந்தது அந்தச் சூழலைத் தற்போது முஸ்லிம்கள் இழந்து விட்டனர். இது விடயத்தில் சிங்கள, தமிழ் மக்களின் நோக்கு நிலையில் தவறு இருப்பதாககவும் கூற முடியாது. 10 வருடங்களாகப் போர்ச் சூழல் இல்லாதிருந்தபடியால் எந்தவொரு நபரும் இலங்கையின் எந்தப் பாகத்துக்கும் தனது அடையாள அட்டையின்றிப் பயணம் செய்யும் வாய்ப்பிருந்தது. இந்தச் சூழல் ஐ எஸ் உறுப்பினர்களின் திட்டமிட்ட செயற்பாடுகளுக்குச் சாதகமாக அமைந்தது.

**முஸ்லிம்கள் மீதான சந்தேகம்**

குறித்த தாக்குதல்கள் உயிர்த்த ஞாயிறு அன்று திட்டமிடப்பட்டதால் அன்றைய தினம் தேவாலயங்களில் கூடும் அதிகமான மக்களைக் கொல்லும் இலக்கே இது.

இதை வைத்து கிறிஸ்தவர்களை மாத்திரம் கொல்வதுதான் அவர்களது இலக்கு என எடுத்து விட முடியாது. அடுத்த மாதங்களில் நடக்கவுள்ள வெசாக், பொசன் என மக்கள் அதிகம் சேருகின்ற நிகழ்வுகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது பற்றிப் பாதுகாப்புத் தரப்பினரால் சிந்திக்கப்படுகிறது. அதேவேளை மே தின ஊர்வலங்கள் முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு தவிர்ந்த அளுத்கம, கட்டான, பேருவளை, வறக்காப்பொல எனப் பல இடங்களிலும் சந்தேக நபர்கள் கைதாகியுள்ளனர். குறித்த குண்டுத் தாக்குதல் நடந்த தருணத்தில் இருந்து சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் சந்தேகக் கண்ணோட்டத்துடன் முஸ்லிம்களைப் பார்க்க வைத்திருக்கிறது.




இதுவரை சிங்களவருக்குத் தமிழர் மீதிருந்த 'மைனாரெட்டி போபிய' (சிறுபான்மை பற்றிய அச்சம்) என்ற நிலை மாறி முஸ்லிம்கள் மீது அது படிய ஆரம்பித்திருக்கிறது. இந்தத் தாக்குதல் மூலம் எதுவும் அறியாத அப்பாவி மக்கள் அநியாயமாகச் சாவடைந்திருக்கிறார்கள். இவ்வாறு இன்னும் பல குண்டுத் தாக்குதல்களை நடத்தி அழிவுகளை ஏற்படுத்தினாலும் உள்நாட்டில் வாழ்கின்ற முஸ்லிம்களுக்கு நல்லது எதையும் கொடுத்துவிடப் பொவதில்லை.

ஐ.எஸ்.ஐ.எஸ்;ஸின் பழிவாங்கும் படையெடுப்பு என்பது இலங்கையைப் பொறுத்தவரை முஸ்லிம்களையும் இஸ்லாத்தையும் பாதிப்பதாகவே அமையும். இலங்கைச் சூழல் புரியாது தாக்குதலை முன்னெடுத்து முஸ்லிம்களுக்கே பாதிப்பை வாரி வழங்கியிருக்கிறது குறித்த ஆயுத அமைப்பு. ■

சந்திரசேகர ஆசாத்

# இலங்கையில் முளைவிட்டது பன்னாட்டு பயங்கரவாதம்!




உயிர்த்த ஞாயிறு அன்று இலங்கையில் தேவாலயங்கள், நட்சத்திர ஹோட்டல்கள் உட்பட எட்டு இடங்களில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் என அழைக்கப்படும் ஈராக் மற்றும் சிரியா வுக்கான இஸ்லாமிய அரசு என்கிற பயங்கரவாத அமைப்பு உரிமை கோரியுள்ளது. இந்தப் பேரவலத்தின் காரணமாக இதுவரை 38 வெளிநாட்டவர்கள் உட்பட 253 பேர் சாவடைந்திருப்பதாகவும் அதில் வெளிநாட்டவர்கள் பலரும் உள்ளடங்குவதாகவும் இதைவிட 450இக்கும் மேற்பட்டோர் காயமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நியூஸிலாந்தில் பள்ளிவாசலில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களுக்குப் பழிவாங்கும் முகமாகவே இந்தக் கொடிய தாக்குதல் இலங்கைத் தேவாலயங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜயவர்த்தன.

**நாட்டின் பல பகுதிகளிலும் ஒரே நேரத்தில் பேரழிவை ஏற்படுத்தியிருக்கின்றன நடந்தேறிய தாக்குதல்கள். இவை நன்கு திட்டமிடப்பட்டு நன்கு பயிற்சிபெற்ற குழுவினரால் வலிமையான பின்னணியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.**

### கவனிக்கப்படாமல்போன எச்சரிக்கை

இப்படி ஒரு தாக்குதல் சம்பவம் இடம்பெறும் என இந்த மாதம் 4ஆம் திகதியே புலனாய்வுத் தகவல்கள் கிடைத்ததாகவும், அது ஒரு சில அதிகாரிகள் மட்டத்திலேயே பரிமாற்றப்பட்டதாகவும், உரிய தரப்பினருக்கு குறிப்பாக முப்படைத் தரப்புக்கு இந்த விடயம் தெரியப்படுத்தப்படவில்லை எனவும், தலைமை அமைச்சருக்கும் அரச தலைவருக்குமிடையே நீடித்து வருகின்ற இணக்கமின்மை காரணமாக அந்த எச்சரிக்கை கவனிக்கப்படாமல்போயிற்று என்றும் பலவாறாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. பொலிஸ்மா அதிபர், பாதுகாப்புச் செயலர் ஆகியோரைப் பதவி நீக்கம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்திருந்து, பாதுகாப்பு நடவடிக்கைக்குச் சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஹேம சிறி பெர்ணான்டோ பதவி விலகினார். தன்னால் இந்த அரச ஆட்சியைக் கையளித்துச் சென்றபோது நாட்டில் அமைதி நிலவியதெனவும் இந்தத் தாக்குதல்களுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும் எனவும் குற்றம் சாட்டியுள்ளார் முன்னாள் அரச தலைவரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரமான மகிந்த ராஜபக்ச.

### நன்கு திட்டமிட்ட பின்னணிகளுண்டு

நாட்டின் பல பகுதிகளிலும் ஒரே நேரத்தில் பேரழிவை ஏற்படுத்தியிருக்கின்றன நடந்தேறிய தாக்குதல்கள். இவை நன்கு திட்டமிடப்பட்டு நன்கு பயிற்சிபெற்ற குழுவினரால் வலிமையான பின்னணியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அதை நாடாளுமன்றத்தில் தலைமை அமைச்சரும் தெரிவித்தார். இங்குள்ள ஒரு .சிலரே இங்கோ அல்லது வேறு ஒரு நாட்டிலோ தற்கொலைத் தாக்குதல்தாரியாக நன்கு பயிற்சி பெற்று தம்மைத் தாமே சாகடித்து மற்றவர்களையும் கொல்வதற்குத் தயாராக உருவாக்கப்பட்டுள்ளனர். அப்படி ஒரு சிலர் உருவாக்கப்படுவதற்கு வாய்ப்பான ஒரு சூழ்நிலை இங்கு நிலவியிருக்கிறது என்பதே கவனத்தில் கொள்ளப்படவேண்டியது. அல்லது அந்த நிறை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

### பயங்கரவாதம் முளைவிட ஏற்ற நிலம் இலங்கை

தேவபாலன் உயிர்த்தெழுந்த இந்த நாளில் ஏற்பட்ட பேரவலம் தொடர்பாகப் பார்க்கும்போது அவரின் போதனை ஒன்று நினைவு கூருவது பொருத்தமாயிருக்கும். "விதைகளை விசிறும்போது அவற்றில் சில பாறாங்கற்களில் விழுகின்றன. சில பற்றைகளுக்குள்ளும், செடிகளுக்கும் விழுகின்றன. சில பண்படுத்தப்பட்ட நல்ல நிலங்களில் விழுகின்றன. பாறைகளிலும் பற்றைகள், செடிகொடிகளிடையேயும் விழுபவை அழிவுறுகின்றன. நல்ல நிலங்களில் விழுபவையே முளைவிட்டு வளர்ந்து பயன்தருகின்றன" என்று சொல்லப்படுகிறது.

நிலத்தில் நச்சு விதைகள் விசிறப்படும்போது அவை முளைப்பதற்குப் பொருத்தமானதாக நிலம் அமைந்தாலேயே அவை முளைவிட்டு வளர முடியும்.

அவ்வகையில் பன்னாட்டுப் பயங்கரவாதம் இலங்கையில் முளைவிட்டுத் தற்கொலைத் தாக்குதல்தாரிகளை உருவாகுமளவுக்குச் செழித்து வளர்ந்திருக்கிறது. அதற்கெற்ற வகையில் இங்குள்ள சூழல் அமைந்துள்ளது என்பது தான் இதன் அர்த்தம்.


அதாவது நச்சு விதைகள் முளைவிடுவதற்கு ஏற்ப இங்குள்ள நிலம் பண்படுத்தப்பட்டிருக்கிறது. அதை யார் பண்படுத்தினார்கள்? எப்படிப் பண்படுத்தினார்கள்? என்பதுதான் இப்போது எழும் கேள்விகள்.

### முஸ்லிம்கள் மீதான ஒடுக்குமுறைகள்


அனுராதபுரத்தில் 500 ஆண்டுகள் பழமைவாய்ந்த பள்ளிவாசல் உடைத்தழிக்கப்பட்டதிலிருந்து தம்புள்ள பள்ளிவாசலை இடித்து அகற்ற மேற்கொள்ளப்பட்ட முயற்சி உட்பட இலங்கையில் பல பள்ளிவாசல்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

குருநாகலில் புனித ரம்ழான் நாளில் தொழுகை வேளையில் அங்கு புகுந்த சில பௌத்த பிக்குகளும் சிங்களக் காடையர்களும் முஸ்லிம்களின் புனித நூலான குர்ஆனைத் தூக்கி வீதியில் வீசினார். மகியங்கனையில் முஸ்லிம்களால் விலக்கப்பட்ட பன்றி இறைச்சியைப் பள்ளிவாசலுக்குள் வீசினர். முஸ்லிம் வர்த்தகர்களின் மையம் எனக் கருதப்படும் பேருவளை, அளுத்கம, தர்காநகர் ஆகிய பகுதிகளில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. கொலை, கொள்ளை, வர்த்தக நிலையங்கள் குடியிருப்புக்களை அழித்தல் எனப் பெரும் கொடுமைகள் இடம்பெற்றன. அப்போது முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவிடம் இந்த வன்முறைகள் பற்றி முறையிட்டபோது, ஒரு போயா தினத்தில் தேரர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்தைச் சாதாரணமாக எடுத்துவிட முடியாது எனக் கூறி அந்தத் தாக்குதல்களை நியாயப்படுத்தினார் அவர். இவை கடந்த காலத்தில் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அநீதிகள்.

பின்வந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசிலும் அம்பாறை, கண்டி ஆகிய பிரதேசங்களில்சிலதனிப்பட்டபிரச்சினைகளால் முஸ்லிம்கள் மேல் பேரழிவுகள் ஏற்படுத்தப்பட்டன. வர்த்தக நிலையங்கள் அழிக்கப்பட்டன. இவ்வாறு சிங்கள பௌத்த வெறியர்களால் காலத்துக்குக் காலம் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்துவிட்டப்பட்டன. இவற்றைத் தடுத்து நிறுத்தவோ இவற்றை முன்னின்று நடத்திய அமைப்புக்களைக் கட்டுப்படுத்தவோ ஆட்சியாளர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.










(25ஆம் பக்கம் பார்க்க)

# இந்த வாரம்

**28.04.2019 முதல் 04.05.2019 வரை**

உங்களுக்கு எப்படி?

## மேடம்

குரு, சுக்கிரன், ராகு அனுகூல அமர்வில் உள்ளனர். எதிர்காலதேவைகளுக்காக திட்டமிடுவீர்கள். பணிகளில் திறமையும், சமயோசிதமும் வெளிப்படும். உடன்பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். தாய்வழி உறவினர்களின் வருகை மகிழ்ச்சி தரும். பிள்ளைகள்படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். மங்கல நிகழ்ச்சியில் கலந்துகொள்வீர்கள். இளமைக்கால இனியநினைவுகள் நம்பிக்கையை தரும். மனைவியின் ஆர்வமிகு செயல்களில்குளறுபடிஏற்படலாம். தொழில், வியாபாரத்தில்வளர்ச்சிக்கானமாற்றம்செய்வீர்கள். பணவரவுசீராகஇருக்கும். பணியாளர்கள் கடமையுணர்வுடன் செயல்படுவர்.

## இடபம்

புதன், குரு, சுக்கிரன், சந்திரன் அளப்பரிய நன்மை வழங்குவர். பொது இடங்களில் நிதானித்து பேச வேண்டும். தகுந்ததிட்டமிடுதலால்பணிகள்குறித்தகாலத்தில் நிறைவேறும். புதியவர்களின் அறிமுகத்தால்உதவி கிடைக்கும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு நடைமுறையை பின்பற்றவும். பிள்ளைகள் உங்களின் ஆலோசனையைமதித்துசெயல்படுவர். சத்தானஉணவு உண்பதும், சீரான ஓய்வும் ஆரோக்கியம் பலம் பெற உதவும்.மனைவியின்கருத்துக்குமுக்கியத்துவம் தருவதால் குடும்பத்தில் ஒற்றுமை வளரும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர் பணியிலக்கை கால அவகாசத்தில் நிறைவேற்றுவர்.

## மிதுனம்

சூரியன், புதன், குரு, சந்திரனால் அதிக நற்பலன்கிடைக்கும். பணிகளில் உங்களின்திறமைபளிச்சிடும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். தம்பி, தங்கையின் அன்பால் மனம் நெகிழ்வீர்கள். வாகனத்தின் பயன்பாடு அதிகரிக்கும். பிள்ளைகள்விளையாட்டு குணத்துடன்நடந்துகொள்வர். பணக்கடனில்ஒருபகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் செயல்கள் வீட்டிற்கு பெருமை தேடித் தரும். தொழில், வியாபாரம் புதியவர்களின் ஆதரவால் வளர்ச்சி பெறும். லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்கள் தாய் வீட்டுக்கு உதவுவர்.

## கடகம்

பெரும்பான்மை கிரகங்களால் ராஜயோகபலன்கிடைக்கும். இனிமையான பேச்சால் நண்பர்களை கவர்வீர்கள். தாய்வழிஉறவினர்களின் உதவி கிடைக்கும். வீடு, வாகனம் வகையில் கடன் வாங்க நேரிடலாம். பிள்ளைகளின் நீண்டநாள் தேவையை நிறைவேற்றி மகிழ்வீர்கள். வழக்கு, விவகாரத்தில்சுமுகதீர்வுகிடைக்கும். மனைவி கருத்திணக்கமுடன் நடந்துகொள்வார். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்துவளரும். இதமான அணுகுமுறையால் நிலுவைப்பணம் வசூலாகும். பணியாளர்கள் கடமையை உணர்ந்து பணிபுரிவர். சலுகையும் கிடைக்கும். பெண்கள் இஷ்டதெய்வ வழிபாடு நடத்துவர்.

## சிங்கம்

புதன், குரு, சுக்கிரன், ராகு தாராள நற்பலன் வழங்குவர். தடைபட்ட செயல்கள் மளமளவென நிறைவேறும். தாய்வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். வெளியூர் பயணம்நன்மை தரும். பிள்ளைகளின் படிப்பு, வேலைவாய்ப்பில் தாமதம் விலகி முன்னேற்றம் ஏற்படும். பகைவரின் கெடுசெயல் பலமிழக்கும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். விருந்து விழாவில் மகிழ்ச்சியுடன் பங்கேற்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி நிறைவேறும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர். மாணவர்கள் கல்வி வளர்ச்சி காண்பர்.

## கன்னி

சந்திரனால்நன்மை கிடைக்கும். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். உடன் பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகள் விரும்பிய பொருள் தாராள பணச்செலவில் வாங்கித் தருவீர்கள். ஆரோக்கியம் பலம் பெறும். வாழ்வில் இனிய அனுபவம் காண்பீர்கள். மனைவியின் அன்பால் மனம் நெகிழ்வீர்கள். தொழில் வியாபாரம் செழிக்கும். பணியாளர்கள் பணித்திறனில் மேம்படுவர். சலுகையும் கிடைக்கும். பெண்கள் மற்றவர் பிரச்னையில் கருத்து சொல்ல வேண்டாம். மாணவர்கள் பொழுது போக்கில் ஈடுபடுவர்.

## துலாம்

புதன், சந்திரன், கேது, சனீஸ்வரர் தாராள நற்பலன் வழங்குவர். இடம், சூழ்நிலை உணர்ந்து நண்பர்களிடம் பழகுவீர்கள். குடும்பச் செலவுகளில் தாராளம் இருக்கும். புதிய வாகனம் திட்டமிட்டபடி வாங்கலாம். பிள்ளைகள் பெற்றோரின் சொல்லை ஏற்றுச் செயல்படுவர். வழக்கு விவகாரத்தில் சுமுகத் தீர்வு கிடைக்கும். உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவுகளை தவிர்க்கவும். நிர்பந்த கடனில் ஒரு பகுதியைசெலுத்துவீர்கள். மனைவியிடம் மற்றவர் குடும்ப விஷயம் பேச வேண்டாம். தொழில், வியாபாரம் கூடுதல் உழைப்பால் சீராகும். பணியாளர்கள் பணிச்சுமையை திறம்பட சமாளிப்பர்.

## விருச்சிகம்

சூரியன், குரு, சுக்கிரன், சந்திரனால் அனுகூலபலன் கிடைக்கும். இனிய பேச்சால் பிறர் மனம் கவர்வீர்கள். சமூக நிகழ்வுகளால் புதிய அனுபவம் கிடைக்கும். வெளியூர் பயணம் எதிர்பார்ப்பு நிறைவேறும். பிள்ளைகள் உங்கள் ஆலோசனையை அக்கறையுடன் பின்பற்றுவர். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், பணவரவும் கூடும். பகைவரால் உருவான தொந்தரவு விலகும். மனைவியின் தியாகம் நிறைந்த பணிகளை பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து சேமிப்பு அதிகரிக்கும். அரசு தொடர்பான உதவிகிடைக்கும். பணியாளர்கள்பணி இலக்கைநிறைவேற்றுவர்.

## தனுசு

செவ்வாய், புதன், சுக்கிரன், சந்திரன் சகல வளமும் தருவர். மனதில் நம்பிக்கை அதிகரிக்கும். குறுக்கீடுகளை மாற்று உபாயத்தால் சரி செயவீர்கள். வாகன பயன்பாட்டால் ஓரளவு நன்மை உண்டு. பிள்ளைகள் பெற்றோர் பாராட்டும் வகையில் செயல்படுவர். வீட்டு உபயோகப்பொருட்கள் வாங்குவீர்கள். மனைவி குடும்பநலன் சிறக்க தேவையான பணிகளை மேற்கொள்வார். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் கூடுதல் தொழில்நுட்பம் அறிந்து கொள்வர். பெண்கள் சுபநிகழ்ச்சிகளில் பங்கேற்பர். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் பயில்வர்.

## மகரம்

பெரும்பான்மை கிரகங்கள் அளப்பரியநற்பலன் வழங்குவர். உங்கள் மீதான மற்றவரின் பார்வை மதிப்பு மிகுந்ததாக இருக்கும். தாய்வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். பிள்ளைகள் படிப்பு, வேலையில் முன்னேற உதவுவீர்கள், பூர்வ சொத்து பராமரிப்பில் நம்பகமானவர்களை பணியமர்த்தவும். நோய் தொந்தரவு குறையும். மனைவி உங்கள் கருத்துக்கு மதிப்பளிப்பார். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். தொழில், வியாபாரம் செழித்துலாபம் உயரும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் மகிழ்ச்சிகரமான வாழ்க்கை நடத்துவர். மாணவர்கள் கலைகளில் ஆர்வம் கொள்வர்.

## கும்பம்

ராகு, சுக்கிரன், சந்திரனால் நன்மை ஏற்படும். மனதில் உற்சாகம் பிறக்கும். பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தாய்வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். பிள்ளைகளின் நற்செயல் பெற்றோர்க்கு பெருமையை தேடித் தரும். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், பணவரவும் கூடும். உடல்நலம் சீராக இருக்கும். வாழ்வியல் நடைமுறை சுமுகமாக இருக்கும். மனைவியின்அன்பு மனநெகிழ்ச்சியை தரும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில் வியாபாரம் செழித்து ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் கூடுதல் தொழில்நுட்பம்அறிந்துகொள்வர். பெண்கள் புத்தாடை, நகை வாங்க யோகம் உண்டு. மாணவர்கள்லட்சியநோக்குடன் படிப்பர்.

## மீனம்

சந்திரன், செவ்வாய், சுக்கிரன் தாராள நற்பலன் வழங்குவர். உற்சாகமுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். வாழ்வில் புதிய மாற்றம் உருவாகும். வாகனத்தில் உரிய பராமரிப்புபயணத்தைஎளிதாக்கும். பிள்ளைகளின் செயல் சிறப்பாக அமைந்திட உதவுவீர்கள். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி கருத்திணக்கமுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை தவறாமல் பாதுகாக்கவும். பணியாளர்கள் பணியிடத்தில் விவாதம் செய்ய வேண்டாம். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றவும். மாணவர்கள் பெற்றோரின் சொல் கேட்பது நல்லது.

# தென்னிந்திய இசை மோகத்தை உடைத்து வளரத் துடிக்கும் ஈழத்துத் தமிழிசை

எஸ்.தர்சன்


த.றொபேட்


ஸ்ரீ.மதுராங்கி


அ.அமிர்தசிந்துஜன்


சி.மதுஜா


க.ரஜீவன்


மு.துஸ்யந்தன்


மு.அனுச்சித்திரா


ந.சங்கீதவாணி


ப.சாரங்கன்


க.சுடரோன்



தென்னிந்திய இசைக்கலைஞர்களில் நாட்டமும், ஈடுபாடும் கொண்டு அவர்களை ஈழத்துக்கு அழைத்து அவர்களுடைய இசையை எம்மத்தியில் திணிக்கும் இந்தச் சமுதாயத்தில், அந்த மாயையை உடைத்து ஈழத்து இசையிலும் தமிழ்த் தேசியம் இருக்க வேண்டும் என்ற வெறியுடன், ஈழத்துத் தமிழிசைத் திருவிழா ஒன்று முதன் முறையாக யாழ்ப்பாணத்தில் அரங்கேற்றப்பட்டுள்ளது. தமிழர்களின் இருப்பை பலப்படுத்தும், அவர்களின் கலைகளை அழிவில் இருந்து பாதுகாக்கும் வரலாற்று உத்தியாகவே இந்த தமிழிசை விழா பார்க்கப்படுகிறது. அது ஈழத்துதமிழிசைவிழாஎன்றுகூறப்பட்டாலும்,தமிழர்களுக்கு அது தமிழிசைத் திருவிழாவாகவே அமையப்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இசைத்துறையின் மூத்த விரிவுரையாளர், நுண்கலைகளின் தாயகம், குரலோசையின் இயக்குநர் தவநாதன் றொபேட் இந்த விழாவை அரங்கேற்றியுள்ளார். தனிஒரு மனிதனாக, தனது மாணவர்களை ஒருங்கிணைத்து அவர் இந்த தலைசிறந்த சாதனையை அரங்கேற்றியது இசைக் கலைஞர்ளுக்கு ஓர் அத்திபாரம் என்றே கூறவேண்டும். தமிழ் மீதுள்ள பற்று, ஈழத்து தமிழிசை மேல் அவருக்கு இருந்தவெறியேஇவ்வாறானஅரங்கேற்றத்துக்கு தூண்டியுள்ளது. தமிழர்களின் தனித்துவ அடையாளங்களோடு அரங்கேறிய தமிழிசைத் திருவிழா தொடர்பில் மூத்த விரிவுரையாளர் றொபேட்டுடன் உரையாடினோம். அது தொடர்பில் அவர் உதயனுக்கு பல சுவாரஸ்ய சம்பவங்கைப் பதிவு செய்து கொண்டார்.

### ஏன்? எதற்காக இந்த அரங்கேற்றம்?

"நாங்கள் இலங்கையில் எத்தனையோ நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகின்ற ஒரு தேசிய இனம். எங்களுடைய கலைகளில் அனேகமானவை எங்களுக்குரியனவாக இல்லை. அயல் நாட்டினுடைய தாக்கம் கொண்டதாகவே உள்ளன. இசை, நடனத்தைப் பொறுத்தவரையில், எங்களுடைய மயப்பட்டு, எங்களுடைய அடையாளங்களைவெளிப்படுத்தக்கூடிய வகையில் நீண்டகாலமாகவே இங்கு இருக்கவில்லை. உதாரணமாகநல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் 25 நாள் திருவிழா இடம்பெறுகின்றது என்றால், அந்த 25நாள்களும்பாடப்படுகின்ற250பாடல்களில் ஐந்து பாடல்கள் கூட நல்லூர் கந்த சுவாமியைப் பற்றியதாக இருக்காது. அதில் பெருந்தொகையானது அயல் நாட்டினுடைய ஆலயங்கள் பற்றியதாகத் தான் அமைகிறது. எங்களுடைய ஆலயங்கள் மீதான எங்களுடைய கவிராயர்கள் இயற்றிய பாடல்களுக்கு நாங்கள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இதுதான் இந்த தேடலுக்கான தொடக்கம். இதில் ஆறுமுகநாவலர், விபுலானந்தரில் இருந்து இன்றுவரை பாடல்கள் எழுதிய அத்தனை பேரையும் நாங்கள் தேடி தெரிவு செய்து நூறுபாடல்களை அரங்கேற்றியுள்ளோம்.இந்தநூறுபாடல்களையும் பதம், தில்லானா, காவடிச் சிந்து, திருப்புகழ், தாலாட்டு, கவிதை என்று வகைப்படுத்தியுள்ளோம். 34 கவிராயர்கள் இதனுள் உள்ளடங்கியுள்ளனர்." என்று றொபேட் தமிழிசைத் திருவிழா பற்றி உதயனுக்குப் பகிர ஆரம்பித்தார். அது தொடர்பில் அவர் கூறும் போது அவருக்கு தமிழிசை மீது இருக்கும் வெறி தானாகவே வெளிவரத் தொடங்கியது. எந்தச் செல்வாக்கும் அற்ற ஒரு மனிதன், தமிழிசையை வளர்க்க வேண்டும், ஏற்கனவே எம்மிடத்தில் இருப்பதை அடையாளப்படுத்தி அதற்கு புத்துயிர் கொடுத்து மீண்டும் மிடுக்குடன் தமிழிசை ஈழத்தில் தலைநிமிர்ந்து இசைப்படவேண்டும் என்ற ஒரே ஒரு கனவுடன் தனது மாணவர்களையும், இசை நண்பர்களையும் இணைத்து இப்படி ஒரு விழாவை அரங்கேற்றியிருப்பதானது மெய்சிலிர்க்க வைத்தது.

### எப்படிச் சாத்தியம்

100 பாடல்களை ஒரே மேடையில், ஒரே நாளில் தமிழிசையுடன் பாடமுடியுமா? அது சாத்தியமா? அதற்கு பக்கவாத்தியக் கலைஞர்கள், குரலிசையாளர்கள்சம்மதிப்பார்களா?, விழாவைசிறப்புறநடத்த,தமிழிசையை மக்கள் மத்தியில் கொண்டுபோய்ச்சேர்க்கமுடியுமா?, அல்லது தென்னிந்திய இசையில் நாட்டம் கொண்டு அதனுள் மூழ்கி யிருக்கும் பார்வையாளர்கள் மரபுவழி இசைச் செம்மையுடன் இசைக்கடும் ஈழத்து தமிழிசையை பொறுமையுடன் கேட்டு இரசிப்பார்களா, ஒத்துழைப்பார்களா என்ற பல கேள்விகள் எம்முள் எழத்தான் செய்கின்றன. பல உணர்வுகளைக் கொண்டு தயாரிக்கப்படும் சினிமாவையே மூன்று மணிநேரத்துமேல்பார்ப்பதற்குசலிப்படையும் பார்வையாளர்கள் இந்த தமிழிசை விழாவை பொறுமையுடன் பார்ப்பார்களா அது சாத்தியமா என்றும் என்னத் தோன்றுகின்றது. இந்த ஐயங்களை உடைக்கும் உத்தியை றொபேட்ட கையாண்டுள்ளார். சுமார் எட்டு அரை மணித்தியாலங்கள் தமிழிசையால் பார்வையாளர்களை கட்டிப் போட்டார் என்றால் அந்த விழாவுக்கு வேறு என்ன வேண்டும். அது தொடர்பில் றொபேட் சில சுவாரிய சம்பங்களை நகைச்சுவை உணர்வோடு எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

"தமிழிசை விழா தொடர்பாக குறுந்தகவல்கள் எமது கலைஞர்களுக்கு அனுப்பினேன். அதையே ஒரு பெருந் தகவலாக ஏற்று எமது இசைக் கலைஞர்கள் இந்த அறையில் கூடிவிட்டனர். இடம் போதாத நிலை ஏற்படும் அளவுக்கு எமது கலைஞர்கள் இங்கு வந்தார்கள். ஏனென்றால் ஈழத்தின் தமிழிசை100 பாடல்கள் எனும் கருத்தியல் எல்லோரையும் உலுப்பிவிட்டது. இதில் பங்கு கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எமது கலைஞர்களிடம் வந்துவிட்டது. 26 பக்கவாத்திய கலைஞர்களில் ஒரு கலைஞருக்குக் கூட எந்த வித கொடுப்பனவுகளையும் நாங்கள் கொடுக்கவில்லை. அவர்களும் அதை எதிர்பார்க்கவில்லை. எல்லோம் தாங்களாக இதற்கு ஒத்துழைத்தார்கள் அதை தவிர ஒலியமைப்பு, மண்டபம், ஒளிப்படம் உள்ளட்ட அனைத்துவிடையங்களும்சம்மந்தப்பட்டவர்கள் தங்களை அர்ப்பணித்துள்ளனர் இதனாலேயேஇதுசாத்தியமானது"என்று அவர்மகிழ்ச்சியுடன்பகிர்ந்துகொண்டார்.

### குரலிசைக் கலைஞர்கள் யார்

மூத்த விரிவுரையாளர் றோபேட்டுடன் 9 மாணவர்கள் இந்த விழாவில் கதாநாயகர்கள், தமிழிசையைஈழத்தில்ஒப்பேற்ற வேண்டும்என்றஒரேஒரு உயரிய நோக்கமே அந்த மாணவர்களிடமும் இருந்திருக்க வேண்டும். அவர்கள் 10 ஆண்டுகளாக விரிவுரையாளரின் தனிப்பட்ட மாணவர்களாகவே இருந்து வருகின்றனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உதவிவிரிவுரையாளர்களாகவும்உள்ளனர். பாடசாலை மாணவர்கள் இருவரும் இவர்களில் உள்ளடங்குகின்றனர். இந்த இசை அரங்கேற்றத்துக்காக இரண்டு ஆண்டுகள் அவர்கள் பயிற்சி செய்துள்ளார்கள். 120 வகுப்புக்கள் இடம்பெற்றுள்ளன. ஒரு சிறிய அறையில் அவர்கள் தங்களுக்கானபயிற்சிகளைமுன்னெடுத்துள்ளனர். மாணவர்களிமிருந்து எந்த ஒரு கொடுப்பனவையும்பெற்றுக்கொடுக்காது தனது வித்தைகளை மாணவர்களுக்கு கற்றுக் கொடுத்துள்ளார் விரிரையாளர் றொபேட்.அந்தமாணவர்களுஏகலைவன் போன்றவர்கள். தமிழிசை விழாவுக்கு தங்களையே அர்ப்பணித்துள்ளனர். பாடல்களுக்கு சமஉரிமை கொடுக்கப்பட்டே அரங்கேற்றம் இடம்பெற்றுள்ளது.

### தமிழ்த் தாய்க்கு முதல் சிலை

தனியே தமிழிசையோடு மட்டும் நின்றுவிடாமல், தமிழ்த் தாய்க்கு சிலை அமைத்து, திரை நீக்கமும் செய்து வைக்கப்பட்டுள்ளது.இலங்கையிலேயேமுதன் முதல் பிரமாண்டமாக தமிழ்த் தாய்க்கு சிலைவைத்து, திரைநீக்கம்செய்துவைத்ததுத்துள்ளார்றொபேட்.தமிழுக்குமேலும் ஒரு மிடுக்கு அதன் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. ஏடு, எழுத்தாணிகளுடன் ஆறுஅடிஉயரத்தில்அந்தச்சிலைஅமைக்கப்பட்டுள்ளது. தன்னுடைய சொந்தப் பணத்தில் அந்தச் சிலையை அமைத்துள்ளார். அதையிட்டு அவர் பெருமையும் கொண்டுள்ளார். (அடுத்த பக்கம்)

### தமிழிசை ஏன் வளரவில்லை

இத்தனை நூற்றாண்டுகளில் எத்தனையோ கலைஞர்கள் வாழ்ந்தார்கள், கவியுரைத்தார்கள். ஆனாலும், ஈழத்தில் தமிழிசை ஏன் இதுவரை காலமும் வளரவில்லை என்ற கேள்வி பலரிடமும் இருக்கத்தான் செய்கிறது. அந்தக் கேள்விக்கான பதிலும் றொபேட் டின் சிந்தனையில் இருந்து பிறந்துள்ளது.

"ஈழத்துத் தமிழிசை இதுவரை காலமும் அரங்குக்குக் கொண்டுவரப்படவில்லை. யாரும் அதை அரங்குக்கு கொண்டுவரலில்லை, அதற்கு என்ன காரணம்என்றால், இவ்வளவுகாலமும் கற்பித்தலில் இசை உள்ளது. அந்தக் கற்பித்தல் பண்பாட்டுக்குள் எங்களுடைய தமிழிசையைச் உட்புகுத்துவதற்கு யாரும் முயற்சிக்கவில்லை. ஆசிரியத்துவத்திலும் எங்களுடைய பாடல்கள் வரவில்லை. ஏன் வரவில்லை



என்றால் எங்களுடைய பாடல்களுக்கான காத்திரமான இசைவடிவம் கொடுக்கப்படவில்லை. எங்களுடைய பாடல்கள் வெறுமனே கவிதைகளாகவே பார்க்கப்பட்டன. சோ. பத்மநாதன் எழுதிய கவிதை, மகாகவி உருத்திரமூர்ந்திஎழுதியகவிதை, முருகையன் எழுதிய கவிதை, நீலாவணன் எழுதிய கவிதை என்று யாவும் கவிதைகளாக நூல்களாக இருந்தனவே தவிர அவற்றுக்குரிய இசை வடிவம் கொடுக்கப்படவில்லை.

அந்தப் பணிக்குத் தான் நான் இரண்டு ஆண்டுகள் இரவு பகலாக இருந்து அதைச்செய்யவேண்டியிருந்தது. இவ்வளவு காலமும் எப்படி ஒரு தியாகராயர் கீர்தனையைப் பாடித் திரிகிறோமோ, ஒரு கர்நாடக சங்கீத உருப்படிகளைப் படிக்கிணாரோமோ அதைப் போன்று இவற்றையும் ஒரு கீர்த்தனை களாக ஸ்வரப்படுத்தி எமது மாணவர்கள் படித்தார்கள். அதற்குத்தான் இரண்டு ஆண்டுகள் தேவைப்பட்டன. இரண்டு ஆண்டுகள்மாணவர்கள்இசைகற்றல்முறையிலேகற்றுத்தான் இந்த தமிழிசையை அரங்கேற்றியுள்ளனர். இதைக் கடந்த காலத்தில் யாரும் சிந்திக்காத படியால் தான் தமிழிசை அரங்குக்கு வராதிருந்தது,வளரராதிருந்தது.என்றார்றொபேட்.

### தமிழிசையைத் தொடர்ந்து எப்படி வளர்ப்பது?

"இப்போது நானும், என்னுடைய மாணவர்களும் என்ற வட்டத்துக்குள் இருக்கும் இந்தத் தமிழிசை, நாளை என்னைப்போன்றஏனைய ஆசிரியர்களிடமும் போய்ச் சேரவேண்டும். அவர்கள் இதைப்பாடி, அவர்கள்தங்களுடைய மாணவர்களுக்கு கற்பித்து, எல்லா இசைக் கலைஞர்கள், இசை மாணவர்களுடைய மயப்பட்டதாக இதை மாற்றும் போதே இந்த தமிழிசை வளரும். இதுதான் என்னுடைய அடுத்த கட்ட நகர்வாக இருக்கப் போகிறது. தற்பொது யாழ்ப்பாணத்தில் அரங்கேற்றப்பட்ட தமிழிசையை இனிமேல் எல்லா இடங்களிலும் அரங்கேற்றுவதற்கு நாங்கள் சிந்தித் துள்ளோம்,

அனைத்து மாவட்டங்களிலும் தமிழிசையை இசைக்க வேண்டும் என்று ஆசைப் படுகிறோம். இது போன்று இல்லாது, நேரத்தைக் குறைத்து தேவையான, இரசனைக்கு உரிய பாடல்களாகத் தெரிவு செய்து மக்களிடம் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும், தனியே சங்கீதம் சங்கீம்என்றுஅல்லாதுமக்களுடைய ரசனைக்கு ஏற்ற தமிழிசைகளைப் பாடினால் அவை மக்கள் மத்தியில்இலகுவாகச்சென்றடையும், இதனால்தமிழிசைமேலும் வளர்வதற்கு வாய்ப்புக்கள் உண்டு ஆசிரியர் றொபேட் தமிழிசையை எப்படியாவது வளர்த்து விட வேண்டும் என்று சிந்தித்துள்ளார். அதையே அவர் எம்மிடமும் கூறினார்.

### கோரிக்கை

"எல்லாக் கலைஞர்களும் இந்த தமிழிசைக்கு ஆதரவு தர வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை மூத்த விரிவுரையாளர் றொபேட் முன் வைத்துள் ளார். ஏற்கனவே சிலகீர்தனைகளை, அல்லது சில உருப்படிகளை, பாடாந்தரங்களை வைத்திருக்கும் கலைஞர்கள் தங்களை மேலதிகமாக மெருகேற்ற தயங்குகிறார்கள் அந்த தடைகளை உடைத்து எங்களுடைய பாடல்களை தங்களுடைய இசையரங்குகளில் சேர்க்கின்ற மனப்பக்குவம், எங்களுடைய மூத்த கலைஞர்களுக்கும், ஏனைய இளம் கலைஞர்களுக்கும் வரவேண்டும். அது வந்துவிட்டால் எங்களுடைய தமிழிசை வளர்ந்து விடும். ஏன்னென்றால் எங்களுடைய தேசிய அடையாளமாகதமிழிசைவளரவேண்டும்என்பது எனதுஅவா."என்றுஅவர்தனதுகோரிக்கையை முன்வைத்து தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

ஈழத்து தமிழ்க் கவிராயர்களுடைய பாடல்களுக்கு புதிய தமிழிசை வடிவம் கொடுத்து, அதன் மூலம் தமித் தேசியத்தை நிலை நிறுத்தி, தேசிய அடையாளத்தை வேரூன்றச் செய்ய வேண்டும் என்ற முனைப்புடன் விரிவுரையாளர் றொபேட் அரும்பாடுபட்டுள்ளார் என்பது அவருடைய பேச்சுக்களில் இருந்து அறிய முடிந்தது. "ஈழத் தமிழர்களுடைய ஆண்மீக வெளிப்பாட்டை யோக சுவாமிகளிடம் கண்டுள்ளேன். நான் இவ்வளவு காலமும் உலகத்தில் பாடிய எந்தவொரு பாடலிலும் அவருடைய பாடல்களில் உள்ள ஆண்மீகத்துக்கு நிகராகன ஆண்மீகத்தை நான் காணவில்லை. ஏன் அது வந்தது என்றால். அவருடைய பாடல்கள் எங்களுடைய அன்றாட மொழி நடையிலும், எங்களுடைய அழகான சொற் பிரயோகங்களாலும் அமைந்துள்ளன. நாங்கள் இதில் பாடிய பாடல்களில் அதிகமானவை யோக சுவாமிகளுடையதும், வினாசித்தம்பிப் புலவருடையதுமே." என்று அவர்தமிழ்க்கவிராயர்களின்பெருமை பற்றிக் கூறினார்.

யோக சுவாமிகளின் பாடல்களில் ஒரு வரியே முழு அர்த்தத்தையும் கூறிவிடும் என்றும் அவருடைய பாடல்கள் தமிழ் தேசிய அடையாளம் உள்ளன என்றும் அவர் பெருமை கொண்டார். இவ்வளவு காலமும் அவர்களுடைய பால்களை தவறவிட்டதை குற்றவுணர்வு டன் பார்ப்பதாக மனம் வெதும்பிய றோபேட் அவர்கள் இனி வருங்காலத்தில் இத்தகைய பாடல்களை தமிழிசையுடன்பாடுவதையேபிரதானமாகக் கொள்வதாகவும் அவர் சபதம் எடுத்தார்.


அவருடைய இந்த எண்ணம் தமிழிசையை ஈழத்தில் வளர்த்தெடுக்கும்என்றுநாமும்நம்புவோம், தமிழருடைய அடையாளத்தை பாதுகாக்கத் துடிக்கும் அவரைப் போன்றகலைஞர்களுக்குகைகொடுப்போம்.

தமிழ்த் தாய்க்கு சிலை



தனியே தமிழிசையோடு மட்டும் நின்றுவிடாமல், தமிழ்த் தாய்க்கு சிலை அமைத்து, திரை நீக்கமும் செய்து வைக்கப்பட்டுள்ளது. இலங்கையிலேயே முதன் முதல் பிரமாண்டமாக தமிழ்த் தாய்க்கு சிலைவைத்து, திரை நீக்கம் செய்து வைத்ததுத்துள்ளார் றொபேட். தமிழுக்கு மேலும் ஒரு மிடுக்கு அதன் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.








தாஸ் மாஸ்ரர்



# சிறைக்கதவில் எத்தனை கம்பிகள்

40

அன்று மலம் கழிக்கக் கூடக் கைதிகளை அனுமதிக்கவில்லை.எல்லோருக்குமேமிகப் பெரிய அசௌகரியமாக இருந்தது. காலையில் எழுந்தவுடன் கொஞ்சம் ஆறுதலாக நின்று கதைத்து முகம் கழுவும் நேரம் அது. சற்று நேரத்தில் 25க்கு மேற்பட்ட பாட்டிக்காரர் மண்வெட்டி, குப்பைவாரி போன்றவற்றுடன்அங்குவந்துநடப்பட்டிருந்தபூக்கன்றுகள், புல்லுகளைப் பிடுங்கி எடுத்துக்கொண்டு போனார்கள். சிறை முற்றத்தில் அங்குலம் அங்குலமாக மிதிவெடி தேடுகின்ற மாதிரி தேடுதல்நடத்தினர். சிறைச்சாலைஊழியர்களிலும் நிறையப் பேர் இந்தப் பூட்டுத் தேடும் பணியில் ஈடுபட்டார்கள்.

காலை8.30மணியளவில்ஆயுதம்தாங்கிய பொலிஸாரும் வந்து இந்தத் தேடுதலில் ஈடுபட்டனர். ஆனால் கைதிகளோடு எவரும் வந்துகதைக்கவில்லை.சிலகைதிகள்தமக்கு ஓரளவுக்குப் பழக்கப்பட்ட சிறைச்சாலை ஊழியர்களைக் கூப்பிட்டு மலம் கழிக்கப் போக வேண்டும் என்று கேட்டபோதிலும் பத்து மணிவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

பின்னர் ஒவ்வோர் அறையாகத் திறந்து. அதில் உள்ளவர்கள் மட்டும் அவசர அவசரமாகப் போய் திரும்பிவர அனுமதிக்கப்பட்டனர். உடனே மீண்டும் பூட்டப்பட்டார்கள். காலையில் கதவு திறந்தவுடனேயே மலம் கழிக்கும் பழக்கமுள்ளவர்கள் மிகவும் துன்பப்பட நேரிட்டது. சிறைச்சாலையில் எந்த நேரம் என்ன நடக்கும் என்று சொல்லிவிட முடியாது.


⊙ ⊙ ⊙ ⊙

இவ்வாறு எம்மைப்பூஸாநிர்வாகம்நடத்தியதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். நாம் அறைக்குள் மிக்சர் சாப்பிடும்போது நடந்த சம்பவங்களும் அதன் பின்னணியில் கைதிகள்நடந்துகொண்டவிதமும்நிர்வாகத்துக்குச் சில விடயங்களை முன் எச்சரிக்கையாகச் செய்து கொள்ள வேண்டிய தேவையைக் கொடுத்திருக்கலாம். இதற்குப் பூட்டு விவகாரத்தை அவர்கள் பயன்படுத்தியிருக்கலாம். கைதிகள் யாராவது அதை எடுத்திருந்தால் அதைப் பயன்படுத்தித் தப்பியோடும் முயற்சியில் இறங்கக்கூடும் என்றும் நினைத்தி ருப்பர். இதைவிடவும்இதற்குப்பலகாரணங்கள் இருக்கலாம்.

⊙ ⊙ ⊙ ⊙

பூஸா நிர்வாகம் களுத்துறையை விட இறுக்கமானதும், கண்டிப்பு மிக்கதும் என்பதைப் புதிய கைதிகளுக்குக் கற்பிக்கவும், இந்த நடவடிக்கைஉதவியிருக்கும். இந்தப்பூட்டுக்கே இப்படியென்றால்.... என்ற உணர்வைக் கைதிகள் மத்தியில் ஏற்படுத்துவது. கைதிகள் அதை எடுத்திருந்தால் எவ்வாறு மறைத்தார்கள் என்பதைக் கண்டறிந்தால் தான் இனிவரும் நாள்களில் நடக்கப்போகின்ற விடயங்களைக் கண்காணிக்க முடியும் என்ற எதிர்பார்ப்பு. பூட்டு விடயத்தில் ஏற்கனவே பூஸாவில் இருந்த கைதிகளுக்கும் புதியவர்களுக்கும்முரண்பாடுதோன்றுமானால்அதுநிர்வாகத்துக்குச் சாதகமாக அமையும் என்ற எதிர்பார்ப்பு.

இந்த விடயத்தில் கைதிகளுக்கிடையில் சில கருத்துக்கள் நிலவிய போதிலும் அது முரண்பாடாகவெளிவரவில்லை. பொதுவாகநிர்வாகம் தான் வேண்டுமென்றே செய்திருக்க வேண்டும் என்ற அபிப்பிராயம் வலுவாக இருந்தது. நான் விடுதலையாவதற்குச் சில நாள்கள் இருந்தபோது (2002) ஒரு நண்பர் சொன்னார், இந்தப்பூட்டுவிடயத்தில்மூன்று பேர் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்றும் 'சும்மாமுஸ்பாஸ்திக்காக'அதைச்செய்ததாகவும். பூட்டைக் கழற்றிப் பேப்பர் ஒன்றில் சுற்றிக் குப்பை வாளிக்குள் போட்டதாகவும், பாட்டிக்காரன் மறுநாள் காலையிலேயே குப்பை வாளியைக் கொண்டு போனதாலேயே சிறைச்சாலை வளாகம் முழுவதும் தேடியும் அதைக் கண்டு பிடிக்க முடியாமல் போய்விட்டதுஎன்றும்கூறினார். இந்தநடவடிக்கையால் கைதிகள் அனைவரும் பல அளெகரியங்களைச் சந்தித்த பின் அதுபற்றி வேறு யாருக்கும் சொல்ல முடியாமல் போய்விட்டதாகவும், அவ்வாறு சொல்லியிருந்தால் பல கைதிகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அடித்திருப்பார்கள். அதனால் தான் சொல்லவில்லைஎன்றும்கூறினார். இந்த விடயம் பற்றி அப்போதுஅங்கிருந்தகைதிகள் பலரும் பல விடயங்களை அலட்டிக் கொண்டார்கள். இப்போது இவர் அந்த விடயத்தை எனக்குக் கூறியதுடன், சிறை நிர்வாகம் திட்டமிட்டுக் கைதிகளைப் பழிவாங்கியது என்றிருந்த எண்ணம் இல்லாது போயிற்று. (தொடரும்)



எஸ்.தர்சி


# ஒழுங்கற்ற மனிதர்கள்

இற்றைக்குப் பல
நூறாயிரம் ஆண்டுகளைக்
கடந்து விட்டார்கள்
மனிதர்கள்....

கொஞ்சி விளையாடவும்
கொன்று புசிக்கவும்
விலங்குகளின் மேலும்..
பறவைகளின் மேலும்..
உறவு கொண்டனர்....!
ஆறாம் அறிவென்று
பீத்திக் கொண்டு
அனேகமானவற்றைப் படைத்தனர்

காடுகளை வெட்டியும்...
மலைகளைக் குடைந்தும்...
வீடுகளையும் நகரங்களையும்
உண்டாக்கினர்.....
வேட்டையாடினர்
வேளாண்மை செய்தனர்
வேலை பார்த்தனர்
வேவு பார்த்தனர்
கூடி வாழ்ந்தனர்
குடும்பமாகினர்
காதல்..கவிதை..இலக்கியம்...லேகியமென...
அனைத்தும் கொண்டனர்

மொழி கொண்டனர் அதன் மேல்
மோகம் கொண்டனர்
வெறி கொண்டனர்



தேசம் செய்தனர்
வேட்கை கொண்டனர்
போதாமை கொண்டனர்
போர் செய்தனர் பின்னர்
மண்டை ஓடுகளின் மேலே
சாம்ராஜ்யம் எழுப்பினர்!

சாம்ராஜ்யத்தின் மேலே நின்று
சமாதானம் குறித்துப் பேசியபடியே
அமைதிக்கான போர் அது என்று
தந்திரமாய்ச் சொல்லினர்

ஹிட்லரையும் புத்தனையும்
பாரதியையும் ஆறுமுகநாவலரையும்
அன்னை திரேசாவையும் ராமானுஜரையும்
மார்க்ஸையும் முசோலினியையும்
உதாரணங்களுக்கு உருவாக்கினர்

மதமென்றும், இனமென்றும்,
சாதியென்றும் ஆண், என்றும் பெண் என்றும்
பிரிவுகள் பண்ணி வெறிபிடித்து அலைந்தனர்
தம்மை நியாயப்படுத்த ஆளுக்கொரு
அநியாயக் கதை சொல்லினர்

எவையும் ஒழுங்கில்லாத இந்த உலகில்


# தென்கிழக்கு திசையில் இருந்து...



அனார்கலி







## கண்டனம் கண்டனம்

நாட்டில் மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் மூன்று நட்சத்திர விடுதிகள் உள்ளிட்ட எட்டு இடங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவங்களைத் தென்கிழக்கிலுள்ள பல்வேறு தமிழ், முஸ்லிம் அமைப்புகள் வன்மையாகக் கண்டித்தன.
அத்துடன் இந்தச் சம்பவங்களில் உயிரிழந்தவர்கள், காயமடைந்து சிகிச்சை பெற்று வருவோருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் இந்த அமைப்புக்கள் தெரிவித்தன.
குறிப்பாக இந்த மிலேச்சத்தன தாக்குதல் சம்பவங்களையடுத்து முக்கிய முஸ்லிம், தமிழ்ப் பிரதேசங்களில் தமது துயரையும் கண்டனங்களையும் வெளிப்படுத்தும் வண்ணம் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு கறுப்பு, வெள்ளைக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன.
தென்கிழக்கின் முக்கிய வர்த்தக மையங்களான கல்முனை சாய்ந்தமருது, மருதமுனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, நிந்தவூர் ஆகிய பிரதேசங்களில் கடந்த திங்கட்கிழமை முதல் சில தினங்கள் வர்த்தக நிலையங்கள், வங்கிகள், அரச அலுவலகங்கள், பொதுச்சந்தைகள் மூடப்பட்டு வெறிச்சோடிய நிலைமை காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**எலி அறுக்கும் தூக்காது!**

## வெட்கம் வெட்கம்

"வழிகெடுக்கப்பட்டுள்ள ஒரு சில எமது சமூக இளைஞர்களினால் நாட்டில் இடம்பெற்றுள்ள தொடர்குண்டுவெடிப்புத் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனும் செய்தி எம்மையெல்லாம் வெட்கித் தலைகுனிய வைப்பதுடன் நீக்க முடியாத பெரும் கறையையும் எமது சமூகத்தின் மீது ஏற்படுத்தியுள்ளது.
இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் அணி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான சட்டத்தரணி ஆரிப் சம்சுடீன் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.
"எனினும் இதில் சம்பந்தப்பட்டுள்ளதாகக் கூறப்படும் அதிகமானவர்கள் ஏற்கனவே சமூகத்தினால் புறக்கணிக்கப்பட்டிருந்ததுடன் நீதிமன்றங்களினால் தேடப்படுபவர்கள் என்பதையும் சம்பவம் தொடர்பில் முன்னெச்சரிக்கைகள் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்திருந்தது என்ற விடயமும் மறக்கப்படக் கூடாது" எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

**ஒரு குடம் பாலுக்குள் ஒரு துளி விசம்**

## மேதினக் கூட்டம்

கல்முனையில் நடைபெறவிருந்த அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் ஆவது மேதினப் பொதுக்கூட்டமும் நிகழ்வும் இடை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
எதிர்வரும் மே முதலாம் திகதி இந்தச் சங்கத்தின் மேதின ஊர்வலத்துடன் கூடிய மேதினக் கூட்டம் கல்முனை மாநகரில் நடத்தப்பட ஏற்பாடாகியிருந்த போதிலும் நாட்டில் ஏற்பட்ட தாக்குதல் இடர் துன்பியல் நிலை காரணமாக அவை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்தார்.

## மழை வேண்டி தொழுகை

அம்பாறை மாவட்டத்தில் நிலவிவரும் கொடும் வறட்சி நீங்கவும் சிறுபோக நெற்செய்கைக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கவும் மழை வேண்டி சிறப்புப் வழிபாடுகளுடன் கூடிய தொழுகைகளும் இடம்பெற்று வருகின்றன.
குறிப்பாக அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், சம்மாந்துறை இறக்காமம் போன்ற பகுதிகளில் மழை வேண்டித் தொழுகைகளும் பிரார்த்தனைகளும் இடம்பெற்றது.

**நீங்குமா வறட்சி செழிக்குமா நெற்செய்கை!**



## கூட்டம் ஒத்திவைப்பு

ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்டக் குழுக் கூட்டம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகக் கூட்டமைப்பின் செயலர்நாயகம் எம்.ர்.ஹஸனலி அறிவித்தார்.
நாட்டின் ஏற்பட்டுள்ள இன்றைய நிலை காரணமாகக் கடந்த27ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்த மேற்படி மாவட்டக் குழுக்கூட்டத்தை ஒத்திவைத்துள்ளதாகச் செயலர் நாயகம் ஹஸனலி தெரிவித்துள்ளார். கூட்டம் நடைபெறும் புதிய தினம் பற்றி விரைவில் அறிவிக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**காலம் கனியட்டும்**

## கொள்கைக்காக!

"மாமனிதர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபின் கொள்கைக்காகவே நாம் செயற்பட்டு வருகின்றோம். ஒரு போதும் சந்தர்ப்பவாத அரசியலை முன்னெடுக்க மாட்டோம்" இவ்வாறு முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெவ்வை கூறு ரைத்தார். முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவின் தேசிய காங்கிரஸ் கட்சியிலிருந்து அண்மையில் வெளியேறிய முன்னாள் மாகாண அமைச்சர் உதுமா லெவ்வை, பொத்துவிலில் நடைபெற்ற சமகால அரசியல் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றும்போது இதனைக் கூறினார். என்னை 30 மில்லியன் பணத்துக்கு விலைபோகப் போகிறார் என தேசிய காங்கிரஸ் தலைவர் கூறியிருப்பது அதிர்ச்சியைத் தந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். "பணப்பெட்டி அரசியல்தானே முஸ்லிம் அரசியல்" இப்படியும் ஒரு குரல் கேட்கிறது.

## அதிஉச்சத் தண்டனை

"நாட்டின் முக்கிய தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர விடுதிகள் மீது மிலேச்சத்தனமான தாக்குதல்களை மேற்கொண்டு நூற்றுக்கணக்கான மனித உயிர்களை காவு கொண்ட சம்பவங்களின் சூத்திரதாரிகள் கண்டறியப்பட்டு அதிஉச்ச தண்டனை வழங்கப்பட வேண்டும்"
இவ்வாறு கல்முனை மாநகர மேயர் மூத்த சட்டத்தரணி ஏ.எம்.றகீப் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்தார். இந்த நாடு எதிர்கொண்டுள்ள துயரத்தில் கல்முனை மாநகர மக்களும் பங்கு கொள்வதாக தெரிவித்த மேயர் றகீப் நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு நல்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

**நல்மனதுடன் ஒத்துழைப்போம்**





# அதியுயர் காண்டத்து மேடைகள்

மேடை - 27

தையிட்டி. அ.இராசதுரை

அந்தநேரம் பார்த்து, மற்றவர்கள் அந்தந்தப் படியவே அந்த இராணுவ ஜீப்பின் ஆசனங்களில் குஷாலாய், எடுப்பாய் வீற்றிருக்க முதலாளாய்அந்தஜீப்பிலிருந்துதொப்பென்றுகீழே குதித்திறங்கிவிட்ட தென்மராட்சியாரைப் பொலோபண்ணிஅவரோடுமுட்டியபடியே அற்றென்சனிக் இறங்கிவிட்டந்த எடுப்பான தோற்றத்தையுடைய அந்த மிலிட்டரி மனிதரானவர் கூலாகச் சிரித்துக் கொண்டே அர்ச்சுணாவைப் பார்த்து தித்திப்பான தமிழில் "வணக்கம்...! வணக்கம்!" என்றே அசத்திவிடுகின்றார்!!

ஒரு சிங்கள மகன் மனப்பூர்வமாய் இனிய தமிழில் சொல்லிவிட்ட 'வணக்கத்தோடு' ஒரு தமிழ்மகனான அர்ச்சுணாவும் கடும் உற்சாக உணர்ச்சியின் உத்வேகத்தோடு சொல்லிவிட்ட மாட்சிமை பொருந்திய 'வணக்கமானதும்' முட்டித் தழுவிஆலிங்கனம்செய்துமுத்தமிட்டும் விட்டதோர்ஒருநல்லெண்ணநல்லுறவுக் காட்சிபோல்...!

ஒரு தரம் உரத்திருமிக் கொண்டும்விட்ட சந்தோசத்தார் ஏதோவோர் அதிமுக்கிய ஐற்றத்தைச்சொல்லத்தொடங்கப்போகின்றாரென்றஆவல்பெருக்கோடுஅர்ச்சுனாவும் வலும் கவனமாகவும் ஒரே என்கறேச்சோடும் வைத்த கண் வாங்காது அவரையே இலக்கு வைத்தபடியே ஸ்ரெடியாய்நின்றுகொண்டுமிருந்தான்.

இந்தத் தென்மராட்சித் தேன் நிகர் பலாப்பழத்தின் சுப்பர்ஸ்மெல்லாய் இதே தென்மராட்சியார்தான் தமிழ் வாசனை வீசத் தொடங்கினார். தொடங்கியேவிட்டார்.

"இந்தெங்கடைதமிழ்வணக்கத்தைகொஞ்சமும் சுதி பிசகாமலுக்குச் சொல்லிக்காட்டி எங்களையெல்லாம் சந்தோசப்படவைச்சுவிட்ட இந்த இவர்தான் கண்டிரோ நானப்பவே சொன்னந்த தென்மராட்சிவூமன்ரை ஹஸ்பன்ட் பேர் ரஞ்சித் சில்வா. ஒரு கேணல் தரத்திலையிருக்கிற இவருக்கு பலாலியிலைநல்லசெல்வாக்கு. இந்த இவருமொரு அரைத்தமிழர் தான். எங்கடையாள்தான்.இந்தச்சந்தோசமானபலாப்பழச் சந்தோசத்தார் ஒரு சிங்களவராகிய தம்மைப்பிடித்துதலையில்தக்கிவைத்தகணக்காய் அரைத் தமிழர் எங்கடையாள் என்றெல்லாம்உயர்த்திப்பெரும்கஹைப் பாட்டாய் கதைத்துவிட்டதை தமிழ் நன்றாய் விளங்கிக் கொண்ட இந்தத்



தென்மராட்சிக்கும் சொந்தமாகிவிட்டந்தக் கேணலா எவர் புளுகம்கூடி இப்பொழுது பன்மையில் "உங்கடை எல்லா ஆக்களுக்கும் எங்கடை ஒக்கம வணக்கங்கள்... வணக்கங்கள்" என்றெல்லாம் அர்ச்சுணாவை மீண்டும் இன்னும் கிட்டே நெருங்கி வந்து மெத்த நல்ல வணக்கங்களாக்கியே விடுகின்றார்.

இப்படியே இதே ரூட்டில் இந்தக் 'கன்றியிலுள்ள பெரும்பான்மைகளெல்லாம் மனப்பூர்வமான இதயசுத்தியோடு பங்சன் பண்ணத் தொடங்கிவிடுவார்களேயானால் நாட்டுப் பிரச்சினையெண்ட அந்தப் பொல்லாத ஐயிற்றமே மருந்துக்கும்தான் கிடைக்காதே. இந்தத் தமிழ் மகனும் தலைநிமிர்ந்து நிற்பானே. இந்தக் காட்டிலும் மேட்டிலும் கடலிலும் ஆகாயத்திலும் தானிந்தத் தமிழன் அலைந்து தடுமாறி அநியாயமாய் மாண்டுமடிந்து செத்துத் துலையவேணும்.

"தம்பி அர்ச்சுன்" இப்படித் தொடங்கிய கேணல் ரஞ்சித் இப்பாருங்க இந்தக் கொட்டியிங்களெல்லாம் இப்ப இங்கிட்டு இந்த ஹை செக்கூரிட்டி டிபன்சுக்குள்ளையா மிச்சம் செல்போடுறாங்க பெரிய கறைச்சல்நமக்கு.கே.கே.எஸ். மயிலடி மாவடிபுரம் கெற்கு வாட்ட்ஸ் ஒக்கம நம்ம ஆமி ரேஞ்சூராஅவெக்ட்.நாளைக்கு ஹெற்றதமாய் நம்ம சிவிலியன் ஏரியாட்ட கொட்டிசெல் போடுவானுங்க?

At That verey dangeres time you cant seveyourself ? Our Army Also Can't Help you from this serious case?

இப்படியெல்லாம்சிலவிநாடிகளுக்குஇங்கிலீசுலும் கதைத்தும் கொண்ட ரஞ்சித் மிகுதியை டீற்ரேயிலாய் சொல்லும்படியாக தென்மராட்சியாரைஒருபார்வைபார்த்துக் கொண்டதும் அதனைப் புரிந்து கொண்ட தென்மராட்சியார்...

"இந்த ரஞ்சித் சேரிப்ப சொன்னமாதிரியா அங்காலையிருந்துபெடியளடிக்கிறசெல்லுகள் இஞ்சாலையும் எங்கடை பக்கமாயும் விழத்தொடங்கினா எங்கடை உயிர் பாதுகாப்பின் நிமித்தமா இஞ்சையிருக்கிற சிவிலியங்களெல்லாம் திரட்டியனவாய் மிக மிகக் கிட்டுமானமாய்க் கேட்டுவிட்ட ஒர அதிர்வான பாரிய குடிமுழக்க ஓசையோடு தென்மராட்சியாரின் கதைப்பும். சடினாய் அதிர்ந்து குலுங்கி நின்றும் போய்விடுகின்றது. பேசிக்கொண்டே போனதென்மராட்சியார் இந்தத் திறில்லான ஐயிற்றத்தோடு முற்றாகவேசெயலிழந்துதான்போய்விட்டவராய் எனி எந்த அடுத்த கதைக்குமிடமில்லாதவராய்இந்தக்குறூப்பிற்குத்தலைமை தாங்கிவந்த கேணல் ரஞ்சித்தையும் வாகனத்துக்குள் வெருண்டு கெலித்துப் போயிருக்கும். அடுத்த சீனியர்களையும் பாதரமாய்ப் பார்த்துக் கொண்டவர் விக்கி னேஸ்வரா ஏற்றத்தடியிருந்து கும்புலாவத்தையேற்றம் செல்விழுந்து வெடித்த இடத்துப் புகையானது துலக்கமாயுத் தெரிவதை மிகக் கவனமாய் நோட்பண்ணியும் கொண்டார். ரஞ்சித் அக்றிவாக நிற்பது போல்காட்டிக்கொண்டாலும்உள்ளூரவாய் பயந்துசெத்தும்கொண்டிருக்க"நாங்களினி ஹெற்குவாட்டேசுக்குப் போய்த்தான் சேரப் போறமா.. இல்லை இந்தச் சிவிலியன் ரேஞ்சுக்குள்ளேதான்கொட்டிசெல்லோடை ஒக்கமமரிலாதானோ? என்று கடும் சீரியசாய் தெள்ளுக்கடி உபாதையில் போட்டுச் சொறி சொறியென்றுதான் சொறிந்து தள்ளி உபாதைப்படும்நாய்களாய்அடுத்தசீனியர்கள் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமலுக்கு தடுதாழிப்பட்டுக் கொண்டிருந்த நேரமாய் சடினாய் இன்னொரு இடிமுழக்கச் சத்தம்....!!

(தொடரும்)


---

# சுவிஸ் எனும் அழகிய நாடு! 10

ஏ.ஜே.ஞானேந்திரன்

பேர்ன் நகரில் கலைவடிவம் கொண்ட நீரூற்று







பிறந்தால்சுவிஸ்மண்ணில் பிறக்க வேண்டும் என்று சொல்வதுபோல,2015ஆம் ஆண்டில் (நான் அங்கு தங்கியிருந்த இறுதி வருடம்) எடுத்த ஒரு கணிப்பின்படி, உலகின் மகிழ்ச்சிகரமான நாடுகளில் முதலாவதாகச் சுவிட்சர்லாந்தைத் தெரிவு செய்தார்கள். இதைவிடப் பெரிய அங்கீகாரம் ஒரு நாட்டுக்குத் தேவையே இல்லை. 2016ஆம் ஆண்டில் டென்மார்க் முதலிடத்தைப் பிடிக்க, சுவிட்சர்லாந்து இரண்டாவது இடத்தைப் பிடித்தி ருந்தது. 156 நாடுகளில் முதலாவது இடம் பிடித்த இந்தக் குட்டி நாட்டின் வாழக்கைத் தரம் எபப்படி இருக்கும் என்பது உங்களுக்கு நன்றாகவே புரிந்தி ருக்கும். வாழ மிகப் பாதுகாப்பான இடம் என்ற பட்டியலில் சுவிஸ் தலைநகரானபேர்ன் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. லண்டன் மாநகரம் 72ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.அமெரிக்கநகரங்களில்எதுவுமே முதல் ஐம்பதுக்குள் அடங்கவில்லை. அதி சிறந்த நகராக ஆஸ்திரியாவின் வியன்னா தெரிவாகி இருந்தது.

**நீண்ட கால வாழ்க்கையிலும் முதலிடம்**

உலகில் நீண்ட காலம் வாழும் தன்மை கொண்டவர்கள் என்பதிலும் இந்த நாடே முன்னிற்கிறது. 2015ஆம்ஆண்டில்எடுத்த ஒரு கணிப்பின்படி, ஆண்களின் சராசரி ஆயுள் 81.3ஆண்டுகள் என்றும் பெண்களின் ஆயுள் 85.3ஆண்டுகள் என்றும் உலகசுகாதாரநிறுவனம்கணித்தது. இந்த விடயத்தில்ஜப்பானுக்குஅடுத்ததாகஇரண்டாவது இடத்தைப் பிடிக்கும் நாடு சுவிஸ் என்று இந்த அமைப்பு அறிவித்தது. இந்த நாட்டில் மூப்படைந்தவர்களின் தொகை ஏனைய நாடுகளைப் போல அதிகரித்து வருவதையும் இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்கள். இங்கு வாழ்பவர்களில் ஐந்திலொருபகுதியினர்65வயதைத்தாண்டியவர்கள்.

**மூப்படைந்த காலத்தில் சுவிஸ் வாழ்க்கை**

மூப்படைந்தவர்கள் அதிகம் இருப்பினும் (ஐந்திலொரு பகுதியினர்), வயதாளிகள் வாழ்வதற்குச் சிறந்த நாடு சுவிஸ் என்கிறார்கள்.

ஏன் அப்படிச் சொல்ல வேண்டும்? மூப்படைந்த காலத்தில், சுவிஸ் ஓய்வூதியம் பெற்றுக் கொண்டு, தாய் நாட்டில் வாழும் என்னையேநீங்கள்ஓர்உதாரணமாகஎடுத்துக் கொள்ளலாம்.

பிறரில் தங்கி இருக்க வேண்டிய நிலையில் இல்லாது, எனது மனைவியையும் என்னையும் பார்த்துக் கொள்ளும் வகையில் ஓய்வூதியம்கிடைப்பதுஎன்வாழ்க்கையை மகிழச்சிகரமாக்கிஇருக்கின்றது.ஒழுங்காக அங்கு இரண்டு தசாப்த காலத்துக்கு மேலாகப் பணியாற்றியமைக்குக் கைமாறாக, அவர்கள் வழங்கும் பணம் நிம்மதியாக எனதுபிற்காலத்தைநகர்த்துவதற்குஉதவுகின்றது.

சுவிஸ்நாட்டுஓய்வூதியத்திட்டம்மிகச்சிறப்பானதுஎன்பதால்.இதையேஇங்குள்ளவர்கள் அனுபவிக்கிறார்கள். அண்மையில் 209 உலக நாடுகளை மையப்படுத்தி ஓர் ஆய்வைமேற்கொண்டிருந்தார்கள்.

வருமான ஸ்திரத்தன்மை என்பதில் சுவிட்சர்லாந்து பெற்ற இடம் 27. இதை எந்த அடிப்படையில்மேற்கொண்டார்கள்என்று நோக்கினால், ஓய்வூதியம் எந்த அளவு தொகையை நிர்ணயம் செய்கின்றது என்பதை ஒப்பிட்டு நோக்கியவர்கள், இங்கு மூப்படையும் வயதில், வறுமையின் விகிதாசாரத்தைப்பார்த்திருக்கிறார்கள்.

சனத்தொகையைப் பொறுத்த மட்டில் ஒரு வயதாளி உறவினருக்குக் கிடைக்கும் சராசரி மாதாந்த வருமானத்தை நோக்கியவர்கள் தனிநபர் வருமானத்தையும் ஒப்பீடு செய்துள்ளார்கள்.இதன்முடிவில்மிகஅதிக புள்ளிகள்(100 வீதம்) எடுத்தது சுவிஸ் நாடு என்பது தெரிய வந்துள்ளது.


ஆனால் வயதாளிகளும் வறுமையும் என்று பார்த்தபோது அறுபதைக் கடந்த 16.7வீதமானவர்களின்வருமானம்போதுமானதாக இருக்கவில்லை. இந்த விடயத்தில் 1.6 வீதமானவர்க ளையே கொண்டுள்ள ஐஸ்லாந்து உலக நாடுகளுள் முதலிடத்தைப் பெறுகிறது. (தொடரும்)



சொல்லத்தான் நினைக்கிறார் செல்லத்தம்பி

செ.மகேஷ்

# பெரியோரை கனம் பண்ணுவோம்



இந்த இளம் சமூகத்தினர் இப்பொழுது பெரியோரை மதிப்பதில் அதிக அக்கறை கொள்வதில்லையே!' என்று ஆதங்கப்பட்டார் சிவபாதத்தார். அவரது இத்தகைய ஆதங்கம் பிறந்தமைக்கான பல சந்தர்ப்பங்கள் மறுக்க முடியாதவாறு அண்மைக் காலங்களில் நடந்தேறி இருப்பதை உணர்ந்த செல்லத்தம்பியர் அதற்கான காரணங்கள் சிலவற்றை எண்ணத்தில் பரப்பிக் கொண்டார்.

பெரியவர்கள் அனுபவம் மிகுந்தவர்கள். அவர்களின் எதிர்பார்ப்புகள், வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றுக் கொண்டதனால் விளைந்த வையே! வயதில் இளையவர்கள், பெரியோரை மதிக்க வேண்டும் என்ற கலாசாரம் எங்களின் மத்தியில் வளர்க்கப்பட்டு வந்த நிலையில் அது படிப்படியாக இன்று மறைந்து போவதாகவே செல்லத்தம்பியர் எண்ணமிட்டார்.

'மாதா, பிதா, குரு, தெய்வம்!' என்று போற்றும் பரம்பரையினர் நாம். ஆனால் அவை எல்லாம் சில வேளைகளில் எழுத்தளவிலேயே பாதுகாக்கப்படுவதாக எண்ணும்போது கவலைதான் எஞ்சுகிறது. நல்ல பழங்கங்கள் சிறுவயதிலிருந்தே பேணப்படல் வேண்டும். 'காலையில் எழும்பு. கடவுளை வணங்கு!' என்பார்கள். பாடசாலைக்குப் புறப்படும் போது பெற்றோரை வணங்குதல் வழக்கமாக்கப்படுவதைப்.பலரும் பேணுகிறார்கள். 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்!' என்பதும் சொல்லளவிலேயே நின்று போகிறது. இத்தனைக்கும் மூலகாரணராக உலவுபவர்கள் மூத்தோரே என்பதுதான் எம்மால் சீரணிக்க முடியாமல் உள்ள செய்தியாகிறது.

★★★★

நாம் பயணப்படுவதற்காகப் பேருந்தில் ஏறினால் பெற்றோர், தம்முடன் அருகிருக்கும் பிள்ளைகளை முதியோருக்கு இடமளிக்கும்படி தூண்டுவதில் தாமதிப்பதுண்டு. அவ்வாறே பள்ளியில் தமது பிள்ளையின் தவறைச் சுட்டித் திருத்த முயலும்போது ஆசிரியர் மீதில் ஆத்திரப்படும் பெற்றோரின் செயற்பாடுகள் பல வேளைகளில் பிள்ளைகளின் தவறைத் தொடரும் வகையில் தூண்டும் துணிவை வழங்குவதுண்டு. இளையோர் தமது தவறுகளை உணர்தலுக்காக உணர்த்துதலும் திருத்துதலும் பெரியோர்களின் கைகளிலேயே உள்ளது. பெற்றோர் தமது பிள்ளைகளை நல்வழிப்படுத்துதல் என்பது உத்தமமானது. அயலவரை நேசிப்பதும் அவரை உளரீதியாகவோ உடல்ரீதியாகவோ உறுத்தாத நற்செயற்பாடுகளில் பெற்றோரும் மூத்தோரும் தமதுமுன்மாதிரியைப் பேணுவதன் மூலம் பிள்ளைகளை இளையோரை நல்வழிப்படுத்தலாம்.

நீதிக்குப் புறம்பான செயற்பாடுகளைச் செய்தல் தவறெனத் தெரிந்து கொண்டும் எவனொருவன் அவற்றைத் தொடர்ந்தும் செய்துவரினும் அவனைத் திருத்துவதென்பது இயலாததாகும். எந்தத் தவறுகளும் தவறு செய்பவனால் எற்றுக் கொள்ளப்படும் போதுதான் திருந்துவதற்கான வாய்ப்புகளும் நிறையவே கிடைக்கும்.

★★★★

பெரியோரைக் கண்டால் எழுந்து மரியாதை செய்தல், வயது முதிர்ந்த நிலையில் இயலாதிருப்போர் எழுந்து நடக்கவும் இருக்கையில் உட்காரவும் உதவுதல். எதிரில் வரும் பெரியவருக்கு இடம் கொடுத்து விலகி நடத்தல் போன்ற உதவிகளைப் பெரியோரைக் கனம் பண்ணும் வகையில் செய்தல் எனப் பலவும் பொதுவாக எதிர்பார்க்கப்படும் பண்புகளாகும்.

இன்று முதியோர் பலர் தனித்திருக்கும் நிலையில் அவருக்கு உதவும் காருண்யம் விடுத்து அவரைக் கொன்று அல்லது காயப்படுத்தி அவரிடமுள்ளவற்றைக் களவாடுதல் அதிகரித்துள்ளது. பெரியவர்கள் மீதான அன்பும் பற்றும் தொலையத் தமது தவறுகளை மறைத்துக் கொண்டு உலவுதலும் பெருகியுள்ளது. இவர்களின் தவறுகளை மறைத்தலும் அவற்றைத் தூண்டும் வகையில் உதவுதலும் இவர்களின் உறவுகள் சிலரால் மேற்கொள்ளப்படுவதுண்டு. இவை யாவும் பெரியோரை மதிக்காத பண்புகளாலேயே இவர்களிடத்தில் வளரக் காரணமாகின்றன. இவற்றுடன் இளையோரின் தவறுகளைத்தடுக்கும்திராணியற்ற பெற்றோர், பெரியோர் யாவருமே மனித நேயமற்ற கொடுமைகள் பெருகத் துணைபோகின்றனர் என்பதே செல்லத்தம்பியரின் சிந்தனையை வருத்திய செய்திகளாகின.

★★★★

நாமும் எமது சமூகமும் ஊர் போற்ற, உலகம் மதிக்க வாழ்தல் வேண்டும். அதற்கென எமது இளையோர் தமது தவறுகளை உணர்ந்து, பெரியோரின் வார்த்தைகளை மதித்து, நல்வழி நடக்க முந்துதல் வேண்டும். பெற்றோர் செய்யும் தவறுகள் பிள்ளைகளையும், பிள்ளைகள் செய்யும் தவறுகள் பெற்றோரையும் துயரத்துக்கு உள்ளாக்கும் என்பதுடன் கேவலப்படுத்தும் என்பதும் உண்மையாகும் எந்தப் பெற்றோரும் தமது குழந்தைகள் கெட்டுப் போவதை விரும்புவதில்லை. அவ்வாறே எந்தப் பிள்ளைகளும் தமது பெற்றோர் குற்றவாளிகளாக அல்லது சமூகத்தின் முன்னே மதிப்பற்றவர்களாகக் கணிக்கப்படுவதை விரும்புவதில்லை. மேலே சிந்தித்த இரண்டு நிலைகளுக்கும் நாமே காரணர் என்பதை உணர்வோம். பெற்றோரையும் பெரியோரையும் மதிப்போம். அவர்தம் நல்வழி நடப்போம். இவ்வாறெல்லாம் செல்லத்தம்பியர் சிந்தித்தார் ஆனால் சொல்லவில்லை.



# இலங்கையில்

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன் காரணமாக முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் கோபம், வெறுப்பு, விரக்தி என்பன ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். அவர்களில் தீவிரமான சிந்தனைப் போக்குகள் கொண்டோர் அடுத்த கட்டம் பற்றிச் சிந்திக்க முயல்வதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. அப்படியான சக்திகளையே பன்னாட்டுப் பயங்கரவாதிகள் கையாள முடியும். முஸ்லிம் அடிப்படைவாதச் சிந்தனைகளால் புடம் போடப்பட்டு பழிவாங்கும் நோக்கில் அவர்கள் தயார்ப்படுத்தப்படுகின்றனர்.

**உள்நாட்டுப்போரும் பயங்கரவாதமும்**

நாட்டில் நடந்த பயங்கரவாதத் தாக்குதல்கள் பற்றித் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது போர்க் காலத்தில் விடு தலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல்கள் நாட்டுக்குள் இடம் பெற்ற போரின் ஒரு பகுதியே எனவும், அவை போர் முடிந்ததும் இல்லாமல் போய்விட்டன எனவும், தற்போதைய தற்கொலைத் தாக்குதல்கள் நாட்டுக்கு வெளியேயிருந்து திணிக்கப்படும் பன்னாட்டுப் பயங்கரவாதத் தாக்குதல்கள் எனவும் இவை பெரும் ஆபத்தானவையென்றும் தெரிவித்தார். அவர் கூறியதில் உண்மை இல்லாமலில்லை.

ஆனால் பன்னாட்டுப் பயங்கரவாதம் இங்கு திணிக்கப்படுவதற்கு களமமைத்துக் கொடுத்தது இலங்கையில் நிலவும் பௌத்த சிங்கள இனமதவெறி என்ற உண்மை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மத அடிப்படைவாதம் பௌத்த, முஸ்லிம், கிறிஸ்தவம், இந்து என எந்தமதத்தின் மூலம் தோற்றுவிக்கப்பட்டாலும் அது பெரும் ஆபத்தின் மூலவேர் என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

இன்று பௌத்த பேரினவாத மேலாதிக்கம் என்பது மதவாத நிறுவனங்கள் சிலவற்றால் முன்னெடுக்கப்பட்ட போதிலும், தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திணைக்களம் என்பனவும் முஸ்லிம், இந்து, கிறிஸ்தவ மதங்களின் இருப்பைச் சீர்குலைத்து அவற்றின் மேல் மேலாதிக்கம் செலுத்தும் வகையில் செயற்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே.


இப்படியான நடவடிக்கைகள் அந்தந்த மதங்களைச் சேர்ந்த மக்கள் மத்தியில் வெறுப்பையும் கோபத்தையும் விரக்தியையும் ஏற்படுத்துவது தவிர்க்க முடியாததாகும்.

**பயங்கரவாதத்துக்கு எதிராகக் கடும் நடவடிக்கை தேவை**

நடந்து முடிந்த பயங்கரவாதச் சம்பவத்துக்கு எதிராக எடுக்கப்படும் கடும் நடவடிக்கைகளும் தொடர்ச்சியான பாதுகாப்பு நடவடிக்கைகளும் முக்கியமானவையும் அவசியமானவையும் ஆகும். அதேவேளையில் பௌத்த பேரினவாத மேலாதிக்கத்தால் ஏற்படும் பாதிப்புக்களாலும் பன்னாட்டுப் பயங்கரவாதம் இங்கு காலூன்றுவதற்கான சூழல் இல்லாமற் செய்யப்பட வேண்டும். கடந்த காலங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகளுக்கு அரசு நடவடிக்கை எடுக்கத் தவறியமையாலேயே இலங்கைக்குள் பன்னாட்டுப் பயங்கரவாதம் உட்புகும் நிலை ஏற்பட்டது என அமெரிக்காவின் பிரபல பத்திரியான வோஷிங்கடன் போஸ்ட் குறிப்பிட்டதை அலட்சியப்படுத்த முடியாது.

போட்டி

## மனித வேட்டை ஆடுகின்ற வெறியர் கூட்டம்



கம்ப நேசன்

மனித வேட்டை ஆடுகின்ற
வெறியர் கூட்டம் யாரடா ?
புனிதன் யேசு கோயில் தன்னை
புதைத்த வீணர் எவரடா ?
இனிய வாழ்வை இறைஞ்ச வந்த
எளியர் மாண்டு போகவும்
தணிந்த தேசம் அமைதி மீறி
தளர்வு கண்டு நோகவும்

உறுத்தல் இன்றி உருக்குலைத்து
உறவைக் கொன்ற கொடியர்கள்
பொறுத்த துன்பச் சுமைகளோடு
புனிதன் கொண்ட கருணையை
நிறுத்தி நெஞ்சில் துதித்திடாமல்
நெடிய துன்பம் தந்தனர்
ஒறுத்தல் அன்றி உயிரைப் போற்றும்
உயர்ந்த நீதி கண்டிலார்

அவலம் இன்று அவனி எங்கும்
அடர்ந்து நின்று கொன்றிட
கவலை இன்றிக் கருவறுத்துக்
கண்ணை மூடி நின்றவர்
அவலை எண்ணி உரலிடித்து
அழிவு செய்த செயலினை
குவலையத்துக் குடிகள் என்றும்
குருட ராகி ஏற்கிலார்

நாடு யாவும் நடுக்க முற்று
நலிந்து போகக் கூடியே
பீடு செய்து பீதியூட்டிப்
பிறரை வாட வைத்தவர்
கூடும் அன்புக் கொள்கை நாடிக்
குறைகள் நீங்க வேண்டுவோம்
வாடும் மக்கள் மனதைத் தேற்ற
வழிகள் காண முயலுவோம்

மதங்கள் மீது மதங்கள் கொண்டு
மாண்பு நீங்க போரிடும்
இதங்கள் அற்ற செயலை ஏண்ணி
இனிமை காண்ப தன்றியே
விதங்கள் நூறு வழியில் தேடி
வீழ்த்தும் செய்கை நீக்குவோம்
பதங்கள் நாடிப் பற்று நீக்கி
பழியில் நின்று மீழுவோம்

உயிர் பிரிந்து உடல் சிதைந்து
ஊறுபட்ட உறவுகள்
தயவு கண்டு தளர்வு விட்டு
தலையுயர்த்த உதவுவோம்
நயமிகுந்த சொல்லெடுத்து
நாளும் போற்றி நல்லதை
கயமை செய்த தீயருக்கும்
காட்டி நாங்கள் உயருவோம்

நம்பி எங்கள் நல்ல பாதை
நாங்கள் காட்டி மிளிருவோம்
வெம்புமனச் சுமையகற்றி
வேற்றுமைகள் போக்குவோம்
அப்புவியின் அறமனைத்தும்
அறிந்த எங்கள் பெருமையை
கம்ப நாடன் காட்டி நின்ற
கருணை வழி உணர்த்துவோம்

## சொற்சிலம்பம் போட்டி இல: 567

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| | ■ | 9 | | 10 | | | ■ |
| 11 | 12 | | ■ | 13 | | | 14 |
| 15 | | ■ | 16 | | ■ | 17 | |
| | ■ | 18 | | ■ | 19 | | |
| ■ | 20 | | | 21 | | ■ | ■ |
| 22 | | | ■ | 22 | | | |

### இடமிருந்து வலம்

1. பழங்காலக் கதை
5. அளவு மிஞ்சிய ஆசை
7. சாரளம்
8. வெளிச்ச வேளை
9. திருமணம்
11. ஒரு பக்கம்
13. உழைத்துப் பெறு
15. அந்தரப்படு
16. ஒரு பாத்திரம்
17. திறை
18. தாண்டு
19. ஓர் ஆயுதம்
20. புலம்புதல்
22. சிறிய புள்
23. பொட்டு

### மேலிருந்து கீழ்

1. கூறுதல்
2. சாப்பிடு
3. காடு
4. பணம்
5. தற்செருக்கு
6. பல விலங்குகளுக்கு உள்ள உறுப்பு
8. காசு
10. இரப்பு
12. சூரியன்
14. மூன்று புரம்
16. படிப்பது இதனை
18. புணர்வு
19. இல்லை என்பதைக் குறிக்கும்
20. உருவமற்ற
21. புரம்

அனுப்புபவர் பெயர்:..........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..................................................................

கையொப்பம்:..................................................

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தி யில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 565
இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) சாசுவதம் (6)குண்டம் (7) தந்தி (9)படு (11)பதவிதுற (12) கூட்டல் (13) கட்டம் (14)கொய் (15)ஆருடம் (16)தழுவு (17)குடம் (18)நேரம் (19)தின் (20)கரும்புலி

### மேலிருந்து கீழ்

(1) சாகுபடி (2) சுண்டு (3) வட (4) தம்பட்டம் (5) பந்து (7) தவில் (8) திறனாய்வு (11) தடம் (12)கூட்டம் (13) கருடன் (14) கொழும்பு (15) ஆகுதி (16)தரம் (18)நேரு

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.567**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (08.05.2019 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.567 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 12.05.2019 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 565 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
நவகுலன் ஹரிஷ்ராம்,
இல.86, கலட்டி,
சீனியர் லேன், யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
ந.செல்வராணி,
சிவன்வீதி,
காரைநகர்.

**3 ஆம் பரிசு**
திருமதி சிவஜெயந்தி சிவகுமார்,
இல.14/1 விதானை வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
இரா.சந்திரசேகரன்,
மாசியப்புலம் வீதி, ஏழாலை வடக்கு,
ஏழாலை.

**5 ஆம் பரிசு**
அன்சிகா வசீகரன்,
இல.3 அன்னை திரேசா வீதி,
இறம்பைக்குளம், வவுனியா.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக்காசோலைகள் கிடைக்கப்பெறா தவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

## பாராட்டுப் பெறுவோர்

கே.இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை.

அ.சிவஞானசுந்தரம்,
சோதி வீதி, நெல்லியடி,
கரவெட்டி.

வேலு முருகமூர்த்தி,
திருக்கேதீஸ்வரம் கோயில்,
மன்னார்.

**சொற்சிலம்பம் போட்டி 565 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

நித்திய சுகம் 421

உடலே கோயில்

# தொற்றா நோயில்லாத இலங்கையை நோக்கி



வைத்திய கலாநிதி கோ.றஜீவ்

இலங்கையில் தொற்றா நோயானது பெரிய பொதுச்சுகாதார பிரச்சினையாக மாறியுள்ளது. தொற்றா நோயானது இறப்புகளுக்கான முக்கிய காரணியாக உள்ளது. பெரும்பாலானவர்கள் ஆரோக்கியமற்ற பழக்க வழக்கங்களையும் பயன்படுத்திக் கொண்டிருப்பதால் தொற்றா நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

**நோய் அதிகரிப்பும் செலவீனங்களும்**

இந்த நோய்கள் துரிதமாக அதிகரித்து வருவதனால் சுகாதார வரவு -செலவுத் திட்டத்தின் பெருமளவு நிதியினை ஒதுக்க வேண்டியுள்ளது. தொற்றா நோய்களை ஆரம்பத்தில் க்ண்டறிதல் தொற்றா நோய்களுக்கான சிகிச்சை மற்றும் தொற்றா நோய்களின் சிக்கல் நிலமைகளை பராமரித்தல் போன்ற செலவினங்கள் அதிகமாக உள்ளன. தொற்றா நோய்களும் மற்றைய நோய்களைப் போன்றே வருமுன் காத்தல் சிறந்ததாகும்.

இலங்கையைப் பொறுத்த வரை நீரிழிவு, உயர்குருதி அமுக்கம், மாரடைப்பு, பாரிசவாதம், புற்றுநோய்கள் என்பவை, முக்கியமான தொற்றா நோய்களாக உள்ளன. இவற்றுக்கான ஆபத்து காரணிகளை ஆரம்பத்திலேயே தவிர்த்தல்தான் சிறப்பான பாதுகாப்பு நடைமுறையாகும். இந்த கருத்தாக்கத்தை அறிமுகப்படுத்தி சமூகத்தில் முன்மாதிரியாக ஆபத்துக்காரணிகளை ஆரம்பத்திலேயே கண்டறியும் வழிமுறைகளை சுகாதார அமைச்சு ஏற்படுத்தியுள்ளது.

இதன்மூலம்ஆரோக்கியமானவாழ்க்கை முறையை நோக்கி பாதிக்கப்படக் கூடிய மக்களுக்கு கண்டறியும் வசதியை அளிப்பதன் மூலம் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் அளவை அதிகரிக்கலாம். ஆரோக்கியமான வாழ்க்கை முறை மையங்கள் சகல சுகாதார வைத்திய அதிகாரிப பிரிவுகளிலும் தெரிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளில் உருவாக்கப்பட்டுள்ளன.

**ஆரோக்கியமான வாழ்க்கைமுறை மையங்களின் தோற்றம்**

தொற்றா நோய்களின் வளர்ந்து வரும் அச்சுறுத்தலுக்கு பதிலளிக்கும் வகையில் இலங்கையின் சுகாதார ஊட்டச் சத்து மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு 2011ஆம் ஆண்டில் பசுமையான "ஆரோக்கியமான வாழ்க்கைமுறை மையங்கள்" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி நடாத்தி வருகின்றது. ஆரோக்கியமான வாழ்க்கைமுறை மையங்கள் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டன. இதில் தொற்றா நோய்களை கண்டறிவதற்கான வைத்திய பரிசோதனைகள் ஆய்வு கூடப் பரிசோதனைகள் மற்றும் அவசியமான மருந்துகள் என்பன கிடைக்கும் வகையில் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளன.

தொடர்பான ஆபத்து காரணிகளின் ஆரம்பக் கண்டறிதல் மூலம் தொற்றா நோய்கள் ஆரம்ப நிலையிலேயே தடுக்கப்படலாம் அல்லது நிர்வகிக்கப்படலாம். மேலும் சிக்கல் தன்மை ஏற்படுவதை தடுத்து அதிக விலையுயர்ந்த சிகிச்சையின் தேவையை குறைக்கும்.

நாடு முழுவதும் ஆரோக்கியமான வாழ்க்கை முறை மையங்கள் நிறுவப் பட்டுள்ளன. ஒவ்வொரு ஆரோக்கியமான வாழ்க்கை முறை மையமும் வாராந்த அடிப்படையில் சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவில் செயற்படுகின்றது. ஆரோக்கியமான வாழ்க்கை முறை மையங்களின் எண்ணிக்கையானது வேகமாக அதிகரித்து வருவதனால் இலக்கு வைக்கப்பட்ட மக்கள் தொகையை 2011ஆம் ஆண்டில் 2.5 சதவீதத்திலிருந்து 2018ஆம் ஆண்டில் 25 சதவீதமாக உயர்த்தியது.



**நோய்கள் தொடர்பான புரிதல்கள் அவசியம்**

ஒருமுறை ஆரோக்கியமான வாழ்க்கைமுறை மையத்துக்குச் சென்று வந்தால் தொற்றா நோய்களைத் தடுக்கக்கூடிய ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளைப்பற்றி நல்ல புரிதல் ஏற்படும். 2030ஆம் ஆண்டுக்கு முன்னர் தொற்றா நோய்களை 25 சத்வீதம் குறைப்பதன் மூலம் உலகளாவிய இலக்கை அடைவதற்கு சுகாதார அமைச்சுஉறுதியளித்துள்ளது. முதன்மை சுகாதார பாதுகாப்பு மட்டத்தில் தொற்றா நோய்களை எதிர்த்து நாட்டின் பரந்த அணுகுமுறைக்கு இது முக்கிய பங்கை வழங்கும்.

ஆரோக்கியமான வாழ்க்கைமுறை மையமானது குறைந்தது வாரம் ஒரு முறை காலை 8மணி முதல் 12 மணி வரை நாளாந்தம் குறைந்தது 20 பேர் பங்குபற்றுவது எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு மருத்துவ அதிகாரி, ஒரு சுகாதார உதவியாளர் மற்றும் மருந்து விநியோகிப்பவர் கடமையாற்றுவார்கள். இங்கு 35-65 வயதினருக்கான தொற்றா நோய்களுக்கான ஆபத்து காரணிகளுக்கான வைத்திய மற்றும் ஆய்வுகூடப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆரோக்கியமான வாழ்க்கை முறை மையத்துக்கு வருகை தரும் அனைவரினதும் தனிப்பட்ட சுகாதார விவரங்களை சேகரிக்கப்பட்டு தனிப்பதிவேடு வழங்கப்படுகின்றது.

ஆரோக்கியமான வாழ்க்கைமுறை மையங்களில் குருதியில் சீனி பரிசோதனை, குருதி அழுத்தம் மற்றும் உடலின் உயரத்திற்கேற்றதான நிறை தொடர்பான கணிப்பீடு போன்றவற்றின் மூலம் நோய்க்கான ஆபத்து நிலைகளை கண்டறிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. புகையிலைமற்றும்மதுநுகர்வு, குறைந்த உடலுழைப்பு நிலை, ஆரோக்கியமற்ற உண்வு மற்றும் குடும்ப வரலாறு போன்ற காரணிகளையும் நாங்கள் ஆராய்கின்றோம். தொற்றா நோய்களைத் தடுக்கவும், ஆரோக்கியமான வாழ்க்கை முறையைத் தக்க வைத்துக் கொள்ளவும் அவர்களின் முன்னேற்றத்தை சோதித்துப் பார்க்கவும் இந்த நிலையங்கள் உதவுகின்றன. மேலதிகமாக மார்பு புற்று நோய்க்கான வைத்திய பரிசோதனை, தைரோயிட் வைத்திய பரிசோதனை என்பனவும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆரோக்கிய வாழ்க்கை பற்றிய சுகாதாரக் கல்வியும் வழங்கப்படுகின்றது.

ஆனால் இந்த சேவையினைப் பெறும் பொது மக்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. பொதுவாக ஆண்களின் பங்களிப்பு மிகக் குறைவாக உள்ளது. பெரும்பாலும் அக்கறையீனமும் காரணமாக உள்ளது. தொற்றா நோய்கள் ஏற்படும் அதற்கான வைத்தியசாலைகளை நோக்கி அலைவதனை விட ஒருநாள் நேரம் ஒதுக்கி ஆரம்பத்திலே கண்டறிதல் சிறந்ததாகும். நடைமுறை வாழ்க்கையில் பின்வரும் வழிமுறைகளை கடைப்பிடித்தல் தொற்றா நோய்களுக்கான ஆபத்துக் காரணிகளை தவிர்க்க முடியும். காலை உணவை தவிர்க்க வேண்டாம், வழக்கமான உணவு நேரங்களில் சாப்பிடுங்கள், பழம் மற்றும் காய்கறிகள் அதிகமாக சாப்பிடுங்கள், மதுவை தவிருங்கள், உங்கள் உணவைத் திட்டமி டுங்கள். இவையே அந்த வழிமுறைகள்

கட்டுரையாளர்
தொற்றாநோய் தடுப்பு
வைத்திய அதிகாரி, யாழ்ப்பாணம்

# இலங்கை மக்களுக்காக செபித்தார் திருத்தந்தை



அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

உலகெங்கும் வாழும் கத்தோலிக்க மக்களின் ஆன்மிகத் தலைவரான திருத்தந்தை பிரான்சீஸ் ஓர் ஆண்டில் இரு தடவைகள் கத்தோலிக்க மக்களின் முக்கிய பெருவிழாக்காலமான கிறிஸ்மஸ் காலத்திலும் உயிர்ப்பு பெருவிழாக் காலத்திலும் 'ஊர்பி எத் ஓர்பி' அதாவது ஊருக்கும் உலகிற்கும் என அழைக்கப்படும் செய்தியையும் சிறப்பு ஆசீரையும் வழங்குவதுண்டு. 2019ஆம் ஆண்டு உயிர்ப்புப் பெருவிழாவையொட்டி திருத்தந்தை வழங்கிய 'ஊர்பி எத் ஓர்பி' அதாவது ஊருக்கும் உலகிற்கும் என்ற செய்தமைபற்றி இவ்வாக்கம் பேசுகிறது.

இலங்கையில் இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாவான தினத்தன்று காலையில் நடத்தப்பட்ட உடனேயே இலங்கை குண்டு வெடிப்புகள்பற்றி ஊர்பி எத் ஓர்பி என்று அழைக்கப்படுகின்ற ஆசீருடன் திருத்தந்தை மிகுந்த கவலை தெரிவித்தார் என்பது சிறப்பு முக்கியத்துவம் பெற்றதுடன் உலக கவனத்தையும் அவர்பால் ஈர்த்தது.

**இளையோரிடம் கிறிஸ்து வாழ்கிறார்**

உயிர்ப்பு நாள் காலையில் உங்கள் ஒவ்வொருவரையும் வாழ்த்த விரும்புகிறோம். இயேசு உயிருடன் எழுப்பப்பட்டார் என முதல் சீடர்கள் முழங்கியதை இன்று திருஅவை புதுப்பிக்கின்றது. அல்லேலூயா அல்லேலூயா என்ற வாழ்த்து ஒவ்வொரு சொல்லிலும் இதயத்திலும் எதிரொலிக்கின்றது. இந்த உயிர்ப்பு நாள் காலையில் என்றும் இளமையாய் இருக்கின்ற திருஅவைக்கும் மனித சமுதாயம் அனைத்திற்கும் இளையோர்க்கென அர்ப்பணிக்கப்பட்ட எமது அண்மை திருத்தூது அறிவுரை ஏட்டின் முதல் வார்த்தைகளான கிறிஸ்து வாழ்கிறார் என்ற சொற்க்ளில் உங்கள் ஒவ்வொருவரையும் வாழ்த்த விரும்புகிறோம்.

கிறிஸ்து வாழ்கிறார் அவரே நம் நம்பிக்கை. வியப்பான முறையில் அவர் இளமையை நம் உலகுக்குக் கொணர்கிறார். அவர் தொடுகின்ற ஒவ்வொன்றும் இளமையாக புதியதாக முழுமையான வாழ்வாக மாறுகின்றது. கிறிஸ்து வாழ்கிறார் மற்றும் நீங்கள் உயிர்த்துடிப்புடன் வாழ வேண்டுமென ஒவ்வோர் இளம் கிறிஸ்தவர்களுக்கும் நான் சொல்ல விரும்புகிறேன். அவர் உங்களில் இருக்கின்றார்.' அவர் உங்களோடு இருக்கின்றார். அவர் ஒருபோதும் உங்களைக் கைவிடமாட்டார். நீங்கள் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் அங்கே உயிர்த்தெழுந்த கிறிஸ்து எப்போதும் இருக்கின்றார். அவர் உங்களை அழைக்கின்றார். தம்மிடம் திரும்பி வந்து வாழ்வை மீண்டும் தொடங்க வேண்டுமென அவர் உங்களுக்காகக் காத்திருக்கிறார். துயரத்தால் சினத்தால் அல்லது அச்சத்தால் சந்தேகத்தால் அல்லது தோல்வியால் நீங்கள் வயது முதிர்ந்ததைப்போல் உணரும்போது உங்கள் வலிமையையும், உங்கள் நம்பிக்கையையும் நிலைநிறுத்த அவர் எப்போதும் அங்கே இருக்கின்றார்.

அன்புச் சகோதர சகோதரிகளே இந்தச் செய்தி உலகிலுள்ள ஒவ்வொரு மனிதருக்குமெனவும் வழங்கப்படுகின்றது. கிறிஸ்து வின் உயிர்ப்பு ஒவ்வொரு ஆண் மற்றும் பெண்ணின் புது வாழ்வின் மற்றும் இதயத்திலிருந்து மனச்சாட்சியிலிருந்து தொடங்கும் உண்மையான புதுப்பித்த லின் கோட்பாக அமைந்துள்ளது. மேலும் கிறிஸ்துவின் உயிர்ப்பு பாவம் மற்றும் சாவின் அடிமை நிலையிலிருந்து விடுவிக்கும் புதிய உலகின் தொடக்கமாகவும் அமைந்துள்ளது. அந்தப் புதிய உலகம் அன்பு அமைதி மற்றும் உடன்பிறப்பு உணர்வின் மற்றும் என்றும் நிலைத்திருக்கும் இறையாட்சிக்கும் வழி திறக்கின்றது.


கிறிஸ்து வாழ்கிறார். அவர் நம்மோடு இருக்கின்றார். அவர் தம் உயிர்ப்பால் தம் திருமுகத்தின் ஒளியை நமக்குக் காட்டுகின்றார். கடினவாழ்வு வேதனை மற்றும் துன்பங்களை அனுபவிக்கும் அனைவரையும் அவர் கைவிடுவதில்லை.

**சிரியா மற்றும் மத்திய கிழக்கு மக்களுக்காக**

உயிரோடு இருக்கும் அவர் தொடர்ந்து இடம்பெறும் போருக்குப் பலியாகியுள்ள நம் அன்புக்குரிய சிரியா மக்களின் நம்பிக்கையாக இருப்பாராக. இப்போர் தீர்க்கமுடியாததென எண்ணுவதற்கும் அதனால் அக்கறையற்று போவதற்கும் நம்மை தள்ளிவிடும் ஆபத்து உள்ளது. அதற்குப் பதிலாக புதுப்பிக்கப்பட்ட அர்ப்பணத்துடன் ஓர் அரசியல் தீர்வை நோக்கிச் செல்லும் நேரம் இது. அங்கு நிலவும் மனிதாபிமான பேரிடர்களைக் களைந்து அம்மக்கள் தங்கள் சொந்த இல்லங்களுக்குத் திரும்பவும் குறிப்பாக லெபனான் ஜோர்டான் நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த சிரியா மக்கள் நாடு திரும்பவும் இது தகுந்த நேரம்.

உயிர்ப்பு விழா தொடரும் பிளவு களாலும் மோதல்களாலும் சிதைந்துள்ள மத்தியக் கிழக்குப் பகுதியின் மீது நம் கண்களைப் பதிக்க வைக்கிறது. சாவை வென்று வாழ்வாக உயிர்த்த ஆண்டவரின் சாட்சிகளாக வாழ்வதில் அப்பகுதியில் வாழும் மக்கள் விளங்குவார்க ளாக. போரினாலும் பட்டினியாலும் களைப்படைந்துள்ள ஏமன் நாட்டு மக்களை குறிப்பாக குழந்தைகளை நான் எண்ணிப்பார்க்கிறேன். உயிர்ப்பின் ஒளி அப்பகுதியில் உள்ள அரசியல் தலைவர்கள் மீது குறிப்பாக இஸ்ரேல், பாலஸ்தீனிய தலைவர்கள் மீதும் ஒளிர்ந்து அவர்கள் அமைதியின் பாதையை தெரிவு



செய்ய உதவுவதாக. தங்கள் இல்லங்களைவிட்டு மக்கள் வெளியேறும் வண்ணம் லிபியாவில் நிகழ்ந்துவரும் மோதலும் குருதி சிந்துதலும் நின்று அங்குள்ள தலைவர்கள் உரையாடல் முயற்சிகளை மேற்கொள்வார்களாக.

**அன்புக்குகந்த ஆபிரிக்க கண்டம்**

அன்புக்குகந்த ஆபிரிக்க கண்டம் முழுவதற்கும் வாழும் கிறிஸ்து அமைதியை வழங்குவாராக. குறிப்பாக புர்கினா, பாசோ, மாலி, நைஜர் நைஜீரியா மற்றும் கமரூன் நாடுகளில் நிலவிவரும் வன்முறைகள் அகல்வதாக. அரசியல் நிலையற்ற தன்மை கொண்ட சூடான் நாட்டை எண்ணிப் பார்க்கிறோம். அந்த நாடு சுதந்திரம் மற்றும் முன்னேற்றம் அடைய அனைவரும் உழைப்பார்களாக.

தென் சூடான் நாட்டு அரசியல் மற்றும் மதத் தலைவர்கள் அண்மையில் வத்திக்கானில் மேற்கொண்ட ஆன்மீக தியானத்திற்குப் பின் அவர்கள் மேற்கொண்டு வரும் முயற்சிகளில் உயிர்த்த ஆண்டவர் துணை இருப்பாராக. அந்த நாட்டில் திறக்கப்பட்டிருக்கும் வரலாற்றின் புதிய பக்கம், பொதுவான நன்மை ஒப்புரவு நோக்கி செல்வதாக. தொடர்ந்து வரும் மோதல்களால் துன்புறும் உக்ரைன் பகுதி மக்களுக்கு இந்த உயிர்ப்பு விழா ஆறுதலைக் கொணரட்டும். அங்கு நிலையான அமைதியையும், மனிதாபிமான முயற்சிகளையும் மேற்கொள்ள இறைவன் அனைவரையும் தூண்டு வாராக.

**அமெரிக்க கண்டத்தில் துன்புறும் மக்கள்**

அமெரிக்க கண்டத்தில் அரசியல் மற்றும் பொருளாதார இன்னல்களைச் சந்தித்துவரும் மக்களின் உள்ளங்களில் உயிர்ப்பின் மகிழ்வு நிறையட்டும். அடிப்படைத் தேவைகள் மனித மாண்பு பாதுகாப்பு ஆகிய வற்றை இழந்து தவிக்கும் வெனிசுவேலா மக்களை குறிப்பாக இவ்வேளையில் நினைவுகூருகிறோம். அரசியல் பொறுப்பில் உள்ள அனைவரும் அந்நாட்டில் நிலவும் அநீதி வன்முறை ஆகியவற்றை நீக்க உதவுவார்களாக. நிக்கராகுவா நாட்டில் அமைதி நிலவ உழைத்துவரும் அனைவர் மீதும் உயிர்த்த ஆண்டவர் தன் ஒளியை வீசுவாராக.

**இலங்கை மக்களுக்கு**

இலங்கையில் இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாவான காலையில் சில ஆலயங்கள் மற்றும் ஏனைய இடங்களில் நடத்தப்பட்ட குண்டு வெடிப்புகள் பற்றி ஊர்பி எத் ஓர்பி என்று அழைக்கப்படுகின்ற ஆசீருக்குப் பின்னர் மிகுந்த கவலை மற்றும் வேதனையோடு பேசினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மிகவும் கொடூரமான இந்த வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ள கிறிஸ்தவ சமுதாயம் மற்றும் ஏனையோருக்கு எனது ஆழ்ந்த ஒருமைப்பாட்டுணர்வைத் தெரிவிக்கின்றோம். அத்தாக்குதல் சமயத்தில் கிறிஸ்தவர்கள் செபத்தில் ஈடுபட்டிருந்துள்ளனர். இதில் இறந்தவர்கள் மற்றும் காயமுற்றவர்களுக்கும் இதனால் துன்புறும் அனைவருக்காகவும் செபிக்கின்றோம் என்றுரைத்தார் திருத்தந்தை.

**பாலங்களை அமைப்பவர்களாக...**

இன்றைய காலத்தில் நிலவும் துன்பங்களுக்கு முன், நாம் அக்கறையற்று போகாமல் இருக்க வாழ்வின் இறைவன் உதவட்டும். சுவர்களை அல்ல பாலங்களை அமைப்பவர்களாக நம்மை உருவாக்கட்டும். போர்க்களங்களிலும் நமது பெருநகரங்களிலும் கொலைக் கருவிகளின் ஓசையை நிறுத்தும் அமைதியை அவர் வழங்கட்டும். கல்லறையின் கதவுகளைத் திறந்த உயிர்த்த கிறிஸ்து நமது உள்ளங்களையும் திறப்பாராக. நமது கதவுகளைத் தட்டும் வறியோர் வலுவற்றோர் வேலையற்றோர் சமுதாயத்தின் ஓரங்களில் வாழ்வோர் ஆகியோருக்கு உதவிகள் செய்ய வரமளிப்பாராக.

அன்பு சகோதர சகோதரிகளே கிறிஸ்து வாழ்கிறார். அவரே நமக்கும் இவ்வுலகமனைத்திற்கும் நம்பிக்கையாய் இளமையாய் விளங்குகிறார். அவர் நம்மைப் புதுப்பிக்க நம்மையே வழங்குவோம். உயிர்ப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்கள்.

## வீடு வாடகைக்கு

தொண்டமானாறு சந்தி, பருத்தித்துறை வீதியுடன் செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு அண்மையிலும் ஐந்து அறைகள் இணைந்த குளியலறை, வாகனத்தரிப்பிட வசதிகளுடன் பெரிய வீடு வாடகைக்குண்டு.

(IN/12162)(11.17)

**071 843 4576, 077 834 2718**

## விற்பனைக்கு

கோண்டாவில் பஸ் டிப்போவுக்கு கிழக்குப் பக்க மதிலுக்கு அண்மித்ததாக அமைதியான சுற்றாடலில் இரண்டு வீடுகள் கட்டக் கூடிய மின்சார வசதியுடன் இரண்டேகால் பரப்புக் காணி (2¼) உடன் விற்பனைக்குண்டு.

(CS 00805)(04.17)

**077 497 5620**

## விற்பனைக்கு

**Lion Shepherd**

நாய்க்குட்டிகள் விற்பனைக்கு.

**077 162 6876** (CS/25001)(11.17)

## கல்வி

**Spoken, Sinhala** புதிய வகுப்புக்கள் ஆரம்பம். குறுகிய காலத்தில் எழுத, வாசிக்க, சரளமாகப் பேச கற்பித்துக் கொடுக்கப்படும்.

**071 843 4576**

## பிரத்தியேக கணித வகுப்புக்கள்

யாழ்ப்பாணம். வலிகாமம் பிரதேசங்களில் தரம்: 6 - O/L வரையான கணித வகுப்புக்கள் அனுபவம் மிக்க ஆசிரியரினால் கற்பிக்கப்படும். **076 860 2724**

## விற்பனைக்கு

கிரைண்டிங் மில் இயந்திரங்கள், மோட்டர் விற்பனைக்கு உண்டு. கிழமை நாள்களில் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு - 076 374 1542**

## வேலைவாய்ப்பு

**நீர்கொழும்பு கடற்கரை வீதியில் அமைந்துள்ள தனியார் மருத்துவமனைக்கு**

❖ மருந்தாளர் ❖ தாதிமார்

**OPD வேலைக்குத் தேவை.**

**வயது - 25 இற்கு உட்பட்ட.**

இந்து சமயம் விரும்பத்தக்கது.
தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS/25002)(11.17)

**077 224 0640**

## வேலைவாய்ப்பு

மிருசுவிலில் இயங்கிவரும் தளபாட விற்பனை நிலையத்திற்கு அறவிடும் உத்தியோகத்தர் (Recovery Officer) சேர்த்து கொள்ளப்படுகின்றனர்.

(CS 00601)(04.17)

**Wijaya Trading**
Usan Mirusuvil.
**076 696 9938**

---

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

சீட்டிழுப்பு வாரம் ▸ 240
சீட்டிழுப்பு திகதி ▸ 27.04.2019 சிவப்பு

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விதி எண் |
|---|---|---|
| G | 04 47 66 | 06 |

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 16, 166, 852/=

01.05.2019 ம் திகதி புதன் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டீ சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

---

அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 593
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.04.27

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 56,618,270/-

வெற்றி இலக்கங்கள்: 01 25 43 55 ஆங்கில எழுத்து: Z

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB‹space›LOT‹space›AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

இளஞ்சிவப்பு நிற டிக்கெட்டுக்கள் இன்றைய சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

---

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

வெற்றி வாரம்:3176 திகதி: 2019.04.27 சனிக்கிழமை
ශනිදා වාසනාව — SATURDAY FORTUNE
பச்சை

| வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து | போனஸ் இலக்கம் | அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் |
|---|---|---|
| 05 35 42 55 O | 58 | 40,370,250/- |

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB‹space›LOT‹space›SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

நீல நிற டிக்கட்டுக்கள் 2019.04.29 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

---



QUEST INTERNATIONAL UNIVERSITY PERAK

# Dual MBA

Leading to Doctor of Business Administration (DBA)

Sri Lanka UGC Recognized

## MBA

- முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை தொழில்சார் கல்வித் தகைமையா.....?
- வர்த்தக ரீதியான தந்திரோபாயங்கள் உங்கள் வாழ்க்கையை உயர்த்திடும்.
- இரட்டைத் தகைமை MBA என்றும் உங்கள் முன்னேற்றத்துக்கு உந்து சக்தி...

## MBA in

**Finance**
**Marketing**
**HR**

**Duration Approximately 12 to 18 Months**

**Why Choose Us?**

- Industrial visit to foreign country
- Flexible lecture time and mood
- Well experienced and qualified panel of lecturers

BLC CAMPUS — BRITISH LADER COLLEGE

For more information: **0777 174 443**

23/1, 4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443
E-mail: info@blccampus.com
Web: www.blccampus.com

---

## பாராட்டி வாழ்த்துகிறோம்



**திரு. ப.ராஜ்குமார்**

(19/01/வமா/தீமு/141)



இணுவை மத்திய கல்லூரியின் மைந்தனாகி
கணினித் துறை ஆசானாகி கல்விப்புலம் ஏற்றிட்டு
சமய, சமூகப் பணிகளிலே பாங்காக
கிராம அபிவிருத்திச் சங்க தலைவனாகி, உபதலைவனாகி
ஆற்றிய பணி சிறந்தோங்க 24.04.2019 இல்
அகில இலங்கை சமாதான நீதவானாக
பெற்ற பணிகளெல்லாம் பேறாகக் கருதி
மேன்மேலும் உயர்பணிகள் ஆற்றிட
சிவகாமித் தாயின் பதம் போற்றி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்.*
**அப்பா, அம்மா, அச்சுதன், ஆத்மிகன், மனைவி.**

---

## வீடு வாடகைக்கு உண்டு

386, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (பழைய வெலிங்டன் சந்தி, புதிய லிங்கன் Cool Bar Building அருகே பெருமாள் கோயிலுக்கு செல்லும் Main வீதியில்)

- 7 அறைகள், 2 கழிப்பறை, குளியலறை, 2 Balkani 2 பெரிய Hall, மொட்டைமாடியுடன் கூடிய 2 மாடி வீடு, தனி கிணறு, வெளியில் ஒரு கழிப்பறை, குளியல் அறை உண்டு. கார், வான் போன்ற Medium size வாகன தரிப்பிட வசதியும் உண்டு.
- Advanced 10 லட்சம் (வீடு மீண்டும் ஒப்படைக்கும் போது திருப்பி முழுமையாக தரப்படும்) Or Advanced 6 லட்சம், வாடகை 25000/= (இவை பேசி தீர்மானிக்கலாம்.)

**தொடர்பு :077 063 3116**

**(காலை 9.00 - 4.00 மணி வரை பார்வையிடலாம்.)**

---

**ES Printers**

சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book) காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற. வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில். விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.

**357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

esprintersjaffna@gmail.com 021 492 7471, 021 492 7472

## மரண அறிவித்தல்கள்

# சண்முகம் கணேசதாசன்



பிறப்பு 20.12.1945 இறப்பு 25.04.2019

நெடுந்தீவு 10 ஆம் வட்டாரத்தைப்பிறப்பிடமாகவும் தற்போது இல 64. சுற்றுவட்டவீதி நெழுக்குளத்தில் வசிப்பிடமாவும் கொண்ட சண்முகம் சண்முகம் கணேசதாசன் (ஓய்வுநிலை உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர், வவுனியா தெற்கு வலயம்) கடந்த (25.04.2019) வியாழக் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் முத்தம்மா தம்பதிகளின் பாசமிகு ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான பென்னம்பலம் பென்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் செல்வமணியின் (ஓய்வுநிலை திட்டமிடல் முகாமைத்துவ உதவியாளர், வவுனியா) அன்புக்கணவரும் சாமினி, உஷாந்தினி, திரிபுரகார்த்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கிரிதரநாதன் (கண்ணன், கனடா), சதீஸ்குமார் (கனடா), கார்த்தீபன் (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சர்வதனியின் (கனடா) பாசமிகு சகோதரனும் இரா ஜெயசீலனின் (ஆசிரியர்) மைத்துனரும் துஸ்யந்தினியின் (கனடா) மாமனாரும் ஹன்சிகா, அபூர்வன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபை ஆலய வளாகத்தில் நடைபெற்றுபூதவுடல்நெடுந்தீவுகட்டடராமன்சல்லிதென்னிந்தியத்திருச்சபைசேமக்காலையில் நாளை (29.04.2019) திங்கட்கிழமை மு.11 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

077 662 4121, 077 955 4786, 024 222 2006

# இராசரத்தினம் லலிதாம்பிகை



இல.50, நாவலடி லேன், வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் 64/15, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் லலிதாம்பிகை நேற்று (27.04.2019) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், கனகாம்பிகை, புனிதவதி, நகுலேஸ்வரன், மகேஸ்வரன், மனோகரன், ஞானம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இரத்தினேஸ்வரன், காலஞ்சென்ற கணேசலிங்கம், கலைச்செல்வி, மகாலக்ஷ்மி, கலைச்செல்வி, விஜயபாலன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் , பிரகாசுதன், சைலஜா, சாந்தரூபன், காலஞ்சென்ற பிரியதர்சினி, கஜந்தன், ஞானபாலன், சசிலன், துஸ்யந்தி, பிருந்தா ஆகியோரின் சித்தியும், அபிராம், ஜசிந்தா, கௌசிகன், கௌமாறன், கௌதமன், கௌரீசன், கௌமிகா ஆகியோரின் பாசமிகு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2019) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**64/15, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.**

**தகவல்:
சகோதரர்கள்**

**076 309 8719, 075 639 1106**

# சுவாமிநாதன் பாலேந்திரா

*(முன்னாள் வட மாகாண பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை)*



பிறப்பு 29.06.1938 இறப்பு 24.04.2019

யாழ். ஆதிமயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியா சிட்னியை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதன் பாலேந்திரா 24.04 .2019 புதன்கிழமை சிவபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன் - பூதாத்தைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் சுன்னாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மண்டலநாயகம் - இரத்தினதேவி தம்பதிகளின் அன்பு மருமகனும், பத்மலோஜினியின் அருமைக் கணவரும் பூம்பொழில், உமாபங்கன், கலாநிதி உமைமைந்தன் ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும் அஜந்தன், வைத்திய கலாநிதி சௌமியா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆகாஷ், அனிதா, ஹரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி திவராசா, இராஜராஜேஸ்வரி முதலியார், ஆனந்த குமாரசுவாமி மற்றும் புவனேஸ்வரி சண்முகலிங்கம் (சிட்னி - அவுஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி சச்சிதானந்தன், ஸ்ரீ பாஸ்கரன், பேராசிரியர் சுசீந்திரராஜா, வைத்திய நிபுணர் மகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், வைத்திய கலாநிதி செல்லப்பா, திருஞானசம்பந்தன், விக்கினேஸ்வரன், கோணேஸ்வரன், கமலலோஜினி வரதராஜா, அம்பிகா குகதாசன், நளினலோஜினி சத்தியகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.04.2019) ஞாயிற்றுக்கிழமை 9.30AM - 10.30AM மணி வரை Macquarie Park Cemetery and Crematorium Cnr Delhi Rd &, Plassey Rd, Macquarie Park NSW 2113, Australia இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் 10.30 AM - 12.30 PM மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:குடும்பத்தினர்.**

**உமைமைந்தன் - +61288409799**

## மரண அறிவித்தல்கள்



# திருமதி தேவசேனா திருச்செல்வம்

கைதடி மேற்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் பேண், சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவசேனா திருச்செல்வம் கடந்த (26.04.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சங்கரப்பிள்ளை - பசுபதி தம்பதிகளின் பாசமிகு மகளும் கைதடி மேற்கு, கைதடியைச் சேர்ந்த பண்டாரி - சின்னக்குட்டி தம்பதிகளின் மருமகளும் திருச்செல்வத்தின் (டென்மார்க்) அன்பு மனைவியும் லக்சன், நிதர்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற வசாந்தி மற்றும் தேவரதி, தேவசுமதி (சுவிஸ்), வாசுகி (சுவிஸ்) ஆகியோரின் சகோதரியும் ரவிச்சந்திரன், ராமேஸ்வரன் (ராசன் - சுவிஸ்), நாகேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிந்துஜா (ஜேர்மன்), சிந்துஜன், சாஜினா (சுவிஸ்), கரிஸ் (சுவிஸ்), ஆதிரா (சுவிஸ்), சருண் (சுவிஸ்), லவிஸ் (சுவிஸ்), கவிஸ் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2019) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:
குடும்பத்தினர்.**

(CS 23943/15/17)

# சின்னத்தம்பி ஆறுமுகம் கனகசபாபதி

**(இளைப்பாறிய இலங்கை போக்குவரத்துசபை CTB)**



பிறப்பு 14.02.1934 இறப்பு 24.04.2019

காரைநகர் வலந்தலை இலகடியை பிறப்பிடமாகவும் வட்டுக்கிழக்கு வட்டுக் கோட்டையை வசிப்பிடமாகவும் தற்போது பிரான்ஸ் டொயிலபாரை (DEULIL LA BARRE) வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சின்னததங்கம் தம்பதியினரின் கனிஷ்ட புதல்வன் மதிப்புக்குரிய திருவாளர் கனகசபாபதி அவர்கள் எம்மை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு கடந்த (24.04.2019) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரத்தினம் (செல்வா இளைப்பாறிய தாதியர் கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய்) அவர்களின் காதல் கணவரும் காலஞ்சென்றவர்களான துரையப்பா, விசாலாட்சி தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், . பழனிவேல் ஆகியோரின் அன்புத்தம்பியும் கலைச்செல்வி (பிரான்ஸ்), அருட்செல்வி (பிரான்ஸ்), ஜெயச்செல்வி (பிரான்ஸ்), குமாரதாஸ் (பிரான்ஸ்), ஆகியோரின் அருமைத்தந்தையும் பத்மநாதன் (ராசா - பிரான்ஸ்), மகேஸ்வரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சற்குணராஜா (செட்டி, பிரான்ஸ்) மற்றும் தர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புமாமனாரும் பிரான்சில் வசிக்கும் லாவண்யா, ரம்மியா, துஷ்யந்தி, பிரியா, வித்தியா, சயந்தி, அறோன், அன்சோ மற்றும் அபிநாத், டினேஷ், அனோஜன் ஆகியோரின் அன்புப்பேரனும் அயான், அயாத்தி ஆகியோரின் பாசமிகு பீட்டனாரும் கனகம்மா, சிவசிரோன்மணி (மலேசியா) காலஞ்சென்ற நாகேந்திரம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின்பூதவுடல் பிரான்சில் சனி, ஞாயிறு மற்றும் திங்கட்கிழமை கீழ் குறிப்பிடப்படும் முகவரியில் மாலை 15.00 மணியிலிருந்து 16.00 மணிவரையும் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பின்னர் செவ்வாய்க்கிழமை (30.04.2019) காலை 10.00 மணியளவில் சமயச்சடங்குகள் நடைபெற்று மதியம் 12.30 மணியளவில் அன்னாரின் திருவுடல் தகனம் செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

**பார்வைக்கு.** கிரியை&தகனம் : Cimetiere intercommunal des joncherolles, 95 Rue Marcel Sembat, 93430 villetaneuse, France.

**தொடர்புகளுக்கு:** குமரன் (மகன்): 0603558108, 0033972967069, ராசா (மருமகன்): 0662196714, மகேஷ் (மருமகன்): 0627202405

**பிற்குறிப்பு** : அன்னாரது வட்டுக்கோட்டை இல்லத்திலும் கொண்டாடப்படும்.

**தொடர்புகளுக்கு:** சங்கர் (பெறாமகன்) : முத்துமாரி ரவல்ஸ் 077 668 0289, 0774398385

**தகவல்:குடும்பத்தினர்.**

# 7 ஆம் ஆண்டு ஞாபகார்த்தம்



## புண்ணியமூர்த்தி வேலும்மயிலும்

பிறப்பு 16 . 06 . 1946

இறப்பு 28 . 04 . 2012

மாறாது மாறாது - எம் மனத்துயரம் மாறாது
தீராது தீராது - எம் வேதனை தீராது
ஆதாரமில்லாத வாழ்வு
அத்திவாரம் இல்லாத வீடு போன்றது.
எமக்கு நீங்கள் ஒரு அவதாரம் பப்பா !
எங்கள் மனச்சுமைகளை பகிர
எமதருமை பப்பா எம்முடன் இல்லை.
நிழல் தந்த பெருவிருட்சம்
அடியோடு சாய்ந்ததால்
நாதியற்று தவிக்கின்றோம்.
பெற்றவர் நீங்கள் சென்று விட்டீர்கள்
பெறப்பட்டவர்கள் நாம் ?
உங்களது பிரிவு எம்மை வாட்டுகின்ற வாட்டு
முற்றிலும் வித்தியாசமானது பப்பா !
எமது உள்ளத்தில் வெற்றுத்
தந்தையாக இல்லாமல்,
ஒரு உலகமாக இருந்திருக்கிறீர்கள்.
மண்ணில் பிறந்தார்க்கு
இவ்வுலகு நிலையான சொந்தமில்லை.
கண்ணில் வரும் நீரைக் கரையேற்ற
வழியின்றியே புலம்புகின்றோம்.
7ஆண்டுகள் ஓடியும் உங்கள் நினைவலைகள்
பெருக்கெடுத்துக் கொண்டே ஓடுகின்றன.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கும்
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
**பிரான்பற்று, பண்டத்தரிப்பு.**

# பணிப்பெண் தேவை

கண்டி திகனையில் அரச அலுவலராக பணியாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பத்தவரின் 5வயது பிள்ளையை வீட்டில் இருந்து பராமரிப்பதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை.

(CS 24967)(4.17)

**071 272 6812**

# வீடு வாடகைக்குண்டு

சுண்டுக்குளி பாடசாலைக்கு அருகில் வீடு வாடகைக்குண்டு மற்றும் Room உம் வாடகைக்குண்டு.

(CS 24970)(4.17)

**077 741 2713/077 724 2427**

# விற்பனைக்கு

நீர்வேலி பூதர் மடத்தடியில் 3 - 1/2 பரப்பு காணியுடன் வீடும் விற்பனைக்குண்டு

**தொடர்பு: 0775 951 945**

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 . 03 . 1920



உதிர்வு 21 . 04 . 2017

## நமசிவாயம் செல்லமுத்து

ஐயனார் கோயிலடி, அனலைதீவு

திதி:- அபரபட்ஷ தசமி


ஆழ் கடலிலும் கிடைக்காத அரிய முத்தாக
எங்களுக்கு மாதாவாகக் கிடைத்த முத்தே!
மண்ணில் நாங்கள் விழுந்த நாள்முதல். மண்ணை விட்டு மறையும் வரை
எங்கள் உயிர் மூச்சோடு கலந்து நிற்கும் சுவாசமே எங்கள் அம்மாவே!
உன் நினைவுகளைச் சுவாசித்தே எங்கள் உயிர் மூச்சு இயங்குகின்றது
அம்மா நீங்கள் மண்ணை விட்டு பிரபஞ்சத்தோடு கலந்து ஆண்டுகள் 2 ஆகியும்
சதா சர்வ காலமும் உம் நினைவும், பேச்சுமாக எங்கள் வாழ்வு நகர்கின்றது.
போனால் கிடைக்காத பொக்கிஷமே!
ஆனாலும் தோன்றாத் துணையாக, ஜீவ ஒளிவடிவில்
எங்களை எல்லாம் காத்து வழி நடத்த வேண்டும் என வேண்டி நிற்கின்றோம்.

ஐயனாரின் பொற்பாதத்தையும்
அவன் பாதம் சரணடைந்த அன்னையையும் போற்றி நிற்கும்

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொப்பாட்டப்பிள்ளைகள்.**

(CS/24951)(1.17)

# மரண அறிவித்தல்



## தம்பியப்பா துரைச்சாமி (ஐயாத்துரை)

### (ஓய்வுபெற்ற C.T.B நடத்துநர்)

யாழ்.வேலணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பியப்பா துரைச்சாமி 25.04.2019 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பியப்பா - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பொன்னு தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கற்பகத்தின் அன்புச் சகோதரரும், தவமணிதேவி, துரைராசலிங்கம், தர்மகுலசிங்கம், சறோஜினிதேவி, காலஞ்சென்ற சுசிலாதேவி மற்றும் தனபாலசிங்கம், குணபாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான புவனேந்திரன், மகாராணி, பிரபாகரன், அமிர்தலிங்கம் மற்றும் ஶ்ரீகலா, கலைச்செல்வி, நிர்மலா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிறேமலதா - சுரேஸ்குமார், வவி - விக்கினேஸ்வரன், சந்திரகுமார் - சயந்தா, பிறேமினி - பாக்கியராஜ், ராதா - கிருஷாந்தன், ஜெசீதா - ஜெயச்சந்திரன், சகீதா - தயாளன், சுரேக்கா , கபிலன், கஜலக்ஷி - செந்தூரன், ஶ்ரீராஜ் - சுஜீத்தா, சதீஸ்வரன் - கருணா, காலஞ்சென்ற துஷியந்தினி மற்றும் அன்ரன்யூட், காலஞ்சென்ற பிரதீஸ்வரன் மற்றும் தனுஷா- சந்திரகஜன், ஹிறோசியா - நிமலன், யதுர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், அனுஷாந், யுரேன்சாந், விஷ்ணுகாந், சங்கவி, அபிஷா, சபரீஸ், துவிஷன், அஸ்வின், கார்ணியா, கரிஷாய், டயானா, டனுசியா, அக்ஷயா, வைஸ்ணவி, மகிஷா, அக்ஷரன், ரவிவர்மன், லக்ஸ்மி, ஜெர்சிகா, கிருஷ்ரிகா, கரிஸ், ஆதேஷ், தியா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புளியங்கூடல் சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புளியங்கூடல் சந்தி,**
**வேலணை.**

(CS/24995)(11.17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 221 6453**

# மரண அறிவித்தல்

## சண்முகநாதன் தங்கவடிவேல்

(முன்னாள் முகாமையாளர் தெ.ப.உ.வி.கூ.ச, தெல்லிப்பளை, லங்கா சிமெந்து லிமிடெட், யூரோவில் முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர்)



பிறப்பு 19.01.1945

இறப்பு 25.04.2019

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், குமரக்கோட்டம், கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் தங்கவடிவேல் கடந்த 25.04.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் - செல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - லட்சுமி தம்பதிகளின் மருமகனும், சிவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சர்மிளா (கனடா), நவதர்சினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசக்திராஜா (கனடா), குபேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், இரத்தினவடிவேல் (ஓய்வுபெற்ற உதவிப்பொறியியலாளர் CEB & JP), யோகமங்களம், யோகாம்பிகை, சோதிவடிவேல் (கொலன்ட்), இன்பவடிவேல் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கலாபூஷணம் மா. சீவரத்தினம், (ஓய்வூதியர், யாழ்.கச்சேரி), செல்வரத்தினம் (ஓய்வூதியர், கட்டடங்கள் திணைக்களம்), அரசரத்தினம் (ஓய்வூதியர், யாழ்.பல்கலைக்கழகம்), தவனேஸ்வரி, காலஞ்சென்ற ஞானேஸ்வரி மற்றும் அருணாசலம், முருகானந்தம், தயாபதி, பவானி, மாலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.04.2019) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/24983)(11.17)

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 910 3620**

# சந்தேகம் தோன்றினால் உடன் தெரியப்படுத்துக

## பொதுமக்களிடம் பொலிஸார் வேண்டுகோள்

சாவகச்சேரி, ஏப்.28

எமது பிரதேசத்தில் உள்ள மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அனைத்து மக்களிடமும் உள்ளன. மக்கள் எந்தநேரமும் விழிப்புடன் செயற்பட்டு சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடும் நபர்கள், சந்தேகத்துக்கு இடமாக பொதிகள் மற்றும் வாகனங்கள் காணப்படின் உடனடியாக பொலிஸ் நிலையத்துக்கு அறிவியுங்கள்.

இவ்வாறு சாவகச்சேரி ,கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் தெரிவித்தனர்.
தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சிறப்புச் சிவில் பாதுகாப்புக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்தனர்.
பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் சாவகச்சரி கொடிகாமம் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், உதவிப் பிரதேச செயலர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், சாவகச்சேரி நகரசபை சபைத் தவிசாளர், சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர், கிராம மட்ட அலுவலர்கள், கிராம மட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் போன்றோர் கலந்து கொண்டனர்.
கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தற்போதைய நிலையில் பொதுமக்கள் தமது வீடுகளில் சேரும் குப்பைகளை உரப்பைகளில் கட்டி சாலையோரத்தில் வைக்கின்றனர். இவை உடனுக்குடன் உள்ளராட்சி சபைகளால் அப்புறப்படுத்தப்படல் வேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர்.
உள்ளூராட்சி சபைகளால் தினமும் குப்பைகளை வாகனங்கள் மூலம் அப்புறப்டுத்துகின்ற போதிலும் மக்களுக்கு இன்னமும் விழிப்புணர்வு ஏற்படாத நிலையில் குப்பைகளை உரப்பைகளில் கட்டி வீதியோரங்களில் வைக்கின்றனர்.
அவற்றினை வளவுகளுக்குள் வைத்திருந்து வாகனங்கள் வரும்வேளைகளில் கையளிக்கமாறு உள்ளூராட்சி சபைக்ளின் தவிசாளர்கள் தெரிவித்தனர். (ஜ-9)

### பெற்றோர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்.28
யாழ்ப்பாணம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் பாடசாலை முதன்மை மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும்.
மாணவர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து பெற்றோர்களையும் கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் ச.வேலமுகன் அறிவித்துள்ளார். (ஜ)

⅄ ⅄ ⅄

கொடிகாமம், ஏப். 28
கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மற்றும் கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.
கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.
மாணவர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்படவுள்ளதால் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அதிபர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஜ-159)

⅄ ⅄ ⅄

கொடிகாமம், ஏப். 28
போக்கட்டி அ.த.க பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் வித்தியாலய மண்டபத்தில் எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும்.
மாணவர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து பெற்றோர்களையும் கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் அறிவித்துள்ளார். (ஜ-159)

## பிற்போடப்பட்ட மே தின நிகழ்வு

கிளிநொச்சியில் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பினரால் நடத்த திட்டமிடப்பட்டிருந்த மே தின நிகழ்வுகள் பிற்போடப்பட்டுள்ளது என அவ்வமைப்பு அறிவித்துள்ளது.
மே முதலாம் திகதி கிளிநொச்சியில் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பினரால் மே தின நிகழ்வுகள் நடாத்த திட்டமிடப்பட்டிருந்தது. அசாதாரண சூழ்நிலைகள், மற்றும் இலங்கை தேசிய பாதுகாப்பு சபையின் அறிவிப்பு என்பவற்றிற்கு அமைவாக மே தின நிகழ்வுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்றும், நடத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்என்றும்சமத்துவம்சமூகநீதிக்கான மக்கள் அமைப்பு அறிவித்துள்ளது. (க-214)





உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களில் உயிர்நீத்த உறவுகளின் ஆன்மா சாந்தியடையவும் மருத்துவமனைகளில் இருப்பவர்கள் குணம் பெற வேண்டியும் திருகோணமலை பாலையூற்று தூய லூர்து அன்னைத் திருத்தல இறைமக்களின் பிரார்த்தனையும் அஞ்சலியும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு உணர்வுபூர்வமாக இடம் பெற்றது. (க-40)

### மூக்குக்கண்ணாடி வழங்கலும் குருதிக்கொடை நிகழ்வும்

வடமராட்சி.ஏப்.28
காங்கேசந்துறை லயன்ஸ் கழகமும் வடஇலங்கை சமாதான நீதவான் சங்கமும் இணைந்து இலவச மூக்குக்கண்ணாடி வழங்கல் மற்றும் குருதிக்கொடை நிகழ்வு என்பவற்றை ஏற்பாடு செய்துள்ளன.
தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு அருகில் உள்ள அலுவலகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை நிதிவான் சங்கத் தலைவர் ஜெயவிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஜ-173)

## நாளை மாலை தீபங்களேற்றி இறந்தோரை அஞ்சலிப்போம்

### தமிழ் உணர்வாளர்கள் அமைப்பு அழைப்பு

மட்டக்களப்பு,ஏப். 28
கடந்த உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நாளை திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு மட்டக்களப்பிலுள்ள சகல இந்து ஆலயங்களிலும், சகல கிறிஸ்தவ தேவாலயங்களிலும், மணி ஒலிக்கச் செய்து மாவட்டத்திலுள்ள அனைவரினது வீடுகளிலும் தீபமேற்றி, அஞ்சலி செலுத்துமாறு தமிழ் உணர்வாளர்கள் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.
மட்டக்களப்பு கல்லடியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.
இதன்போது தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவர் க.மோகன், உறுப்பினர்களான கே.வைத்தியலிங்கம், வ.கமலாதாஸ், த.கோபாலகிருஸ்ணன், எஸ்.நகுலேஸ்வரன், யோ.றொசாந், ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (க-46)

## உயிரிழந்தவர்களது ஆத்ம சாந்தி வேண்டி சர்வ மதப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,ஏப்.28
உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டு தாக்குதலில் உயிரிழந்த அப்பாவி பொதுமக்களின் ஆத்ம சாந்திக்கான சிறப்பு பூசை வழிபாடு மற்றும் ஆத்ம சாந்தி யாகம் என்பன நேற்று நல்லூர் கந்தசுவாமி ஆலயம் மற்றும் நல்லை ஆதீனத்தில் இடம்பெற்றன.



நிகழ்வில் சர்வமத தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர்.
முற்பகல் 10 மணிக்கு சர்வமத தலைவர்கள் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் ஒன்றுகூடி படுகொலை செய்யப்பட்ட அப்பாவி மக்களுக்கான ஆத்மசாந்தி பூசை வழிபாடுகளை நடத்தினர்.
இதனை தொடர்ந்து நல்லை ஆதீனத்தில் ஒன்றுகூடிய சர்வமத தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட மக்களின் ஆத்ம சாந்திக்கான யாகத்திலும் கலந்து கொண்டனர். (ஜ-37)

## ஒரே இரவில் விடுதியை விட்டு ஓடிய வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள்

பதுளை, ஏப்.28
யால சுற்றுலாவிடுதியில் மூன்று தினங்களுக்கு தங்குவதற்கு வந்த சுற்றுலா வாசிகள் மூவர்,முதல் தினத்தின் இரவே காணாமல் போயிருப்பது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பதாக,கிரிந்த பொலிஸார் தெரிவித்தனர்.
இந்த மூவரும் மூன்று தினங்களுக்கு தங்குவதாகக் கூறி,விடுதியில் தங்கினர். அந்த வேளையில் கடல் மார்க்கமாக வள்ளமொன்றில் வந்ததாகக் கருதப்படும் ஒருவர், இந்த மூவரைசந்திக்க வந்ததும், அவரின் தகவலின் பிரகாரம் விடுதியில் தங்கவந்தவர்கள் மூவரும், ஒருவருக்கும் தெரியாமல் காணாமல் போயுள்ளனர்.
இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.மூவருக்கும்இரவுஉணவை ஆயத்தம் செய்த,விடுதி ஊழியர்கள், அவர்களை அழைக்கசென்றபோது, அவர்கள் அறைகளில் இருக்கவில்லையென்று தெரியவருகின்றது. இது குறித்து, விடுதிமுகாமையாளர் கிரிந்த பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.
பொலிஸார் இவர்கள் குறித்து புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (க)

# வானிலையை அவதானித்து கடலுக்கு செல்ல அறிவுறுத்து

முல்லைத்தீவு, ஏப்.28

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களைப் பாதுகாப்பாக இருக்குமாறு கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் வலுப்பெற்று வருவதால், இனிவரும் நாள்களில் மீனவர்கள் அவதானமாக இருக்குமாறு கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் கலிஸ்ரன் அறிவித்துள்ளார்.

காலநிலையில் ஏற்படவுள்ள மாற்றத்தினால் முல்லைத்தீவு சாளை தொடக்கம் கொக்குளாய் வரையான கடற்பகுதியில் இருந்து கடற்தொழிலுக்கு செல்லும் கடற்தொழிலாளர்கள் அவதானத்துடன் இருக்குமாறும், கடலில் கடும் காற்று மற்றும் மழைபெய்யும் வாய்ப்பு இருப்பதாக வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்புக்களை ஏற்று தங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

(க-ரி3)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 19 . 04 . 1937

இறப்பு 29 . 03 . 2019

**அமரர் திருமதி இரத்தினம் மனோன்மணி**

குடும்பத்தின் ஜீவனாகி
குலவிளக்காய் நீரிருந்தீர்
இல்லை என்பதை உணர
மறுத்தது எம் உள்ளம்
மீளாத் துயரோடு கண்ணீரில் நனைகின்றோம்
உமது ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

இராமாவில் வடக்கு,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.

(C 10049/15/18)

## பதவி வெற்றிடம்

01. முன்பள்ளி அனுபவமுள்ள ஆங்கில ஆசிரியை
02. கணினி அறிவுள்ள அலுவலக உதவியாளர்

உடன் தேவை (பெண்கள் மட்டும்)

**077 386 7458, 021 221 6933**

## தேவை

அச்சகத் துறையில் அனுபவமுள்ள வடிவமைப்பாளர்கள், வாடிக்கையாளர் தொடர்பு அலுவலர் தேவை.

தொடர்பு - 077 165 9845

(CS 25011/15/18)

## உடன் பெற்றுக்கொள்ள

நிறுவனங்கள், அலுவலகங்களுக்கான அடையாள அட்டைகளை உடன் பெற்றுக்கொள்ள,

**ஈஸ்வா டிஜிற்றல் அச்சகம்**

**461, கே.கே.எஸ். வீதி. - 077 165 9845**





## வாகன தரிப்பிட கூரை சீரமைப்பு

கொடிகாமம், ஏப். 28

கொடிகாமம் நகரப் பகுதியில் நீர்க்குழாய் பொருத்தும் போது அகற்றப்பட்டு புதிதாகவைக்கப் பட்ட வாகனத் தரிப்பிடக் கூரை சீரமைக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் தரிப்பிடக் கட்டடம் சீரமைக்கும் போது நடுப் பகுதி வெயில் பிடிக்குமளவுக்கு கூரைத் தகடு போடாமல் இருந்ததை சுட்டிக் காட்டப் பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

(க-159)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி எலிசபெத் இராணி மனுவல்பிள்ளை



திருமதி எலிசபெத் இராணி மனுவல்பிள்ளை நேற்று (27.04.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஜோ.மனுவல்பிள்ளையின் மனைவியும், காலஞ்சென்ற ரஜனிகாந்தின் தாயாரும், ஜீவரட்ணம், நவரட்ணம், துரைரட்ணம் (ஜேர்மனி), காலஞ்சென்ற மாசிலாபூபதி மற்றும் செல்வி மேரி திரேசா (ரதி) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று (28.04.2019) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**40/2, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி.**

**தகவல்: ஜோ.மனுவல்பிள்ளை
(D.மாஸ்ரர்)**



### சண்முகநாதன் ஐயர் பாஸ்கரக் குருக்கள்

இருபாலை கற்பகப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் ஐயர் பாஸ்கர குருக்கள் நேற்று (27.04.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் - திருநீலநாயகி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் கெங்காமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - பாக்கியம் தம்பதிகளின் மருமகனும் கேசவக்குருக்கள் (லிங்கவிநாயகர் தேவஸ்தான பிரதம குரு), மயூரி, மயூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஷ்ணி, ஜெகத் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான செந்தில்நாதன் வைத்தியநாதன் மற்றும் வரதாம்பிகை, கிருஷ்ணவேணி, வேதநாயகி (வல்லவை), கற்பகநாதன், சுசீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2019) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் இருபாலை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கற்பகப் பிள்ளையார் கோவிலடி,
இருபாலை, கோப்பாய்.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

கடந்த 29.03.2019 அன்று
இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத்
தெய்வம்

அமரர்

**ஆசைப்பிள்ளை ஆனந்தம்**



தோற்றம் 29.06.1934

மறைவு 29.03.2019

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள்
இன்று ஞாயிற்றுக்கிழமை (28.04.2019)
எமது இல்லத்தில் இடம்பெறும்
அந்நிகழ்விற்கு வருகைதந்தது அவரின் ஆத்ம சாந்திப்
பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும்
மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர்,
நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

**361 பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்**

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### மந்திரி (காசிப்பிள்ளை) மணிமாலை(பவளம்)



தர்மகுலசிங்கம் சனசமூக நிலையம், வல்வெட்டி, வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் அதே இடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மந்திரி(காசிப்பிள்ளை) மணிமாலை கடந்த (24.04.2019) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**தர்மகுலசிங்கம் சனசமூக நிலையம், வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.**

**077 956 8298**

## திருகோணமலை சோபை இழந்தது

மூதூர்.ஏப்.28
நாட்டின் பல இடங்களில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களை யடுத்து தொடர்ந்து சில வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள் ளன.
திருகோண மலை மத்திய பேருந்து நிலையத்திலும் போக்குவரத்து மற்றும் மக்களின் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது. சந்தேகத்துக்கிடமான முறையில் நபர்கள் மற்றும் வாகனங்கள் சோதனைக்குட்படுத்தப் பட்டன.
அரச திணைக்களங்கள், பொது நூலகம் போன்ற இடங்களில் கடமையாற்றும் ஊழியர்களின் விவரங்கள் பொலிஸாரால் சேகரிக்கப்பட்டு சந்தேகத்துக்கிடமான நபர்கள் மற்றும்மர்மப்பொதிகளைக் கண்டறிந்தால் உடன் தகவல் வழங்கும்படியும் அறிவுறுத்தல் வழங்கப் பட்டுள்ளது.
திருகோணமலையிலுள்ள தேவாலயங்களில் பொலிஸ் பாதுகாப்பு பலப் படுத்தப்படுள்ளதுடன் வீதிகளிலும் பொலிஸார்சோதனைகளில் ஈடுபட்டுள்ளனர்.
(க-40)

# கிழக்கு மாகாண ஆளுநரை பதவியிலிருந்து தூக்குங்கள்

## முன்னாள் உறுப்பினர் வேண்டுகோள்

கொக்கட்டிச்சோலை, ஏப். 28

**குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடையவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதால், கிழக்கு மாகாண ஆளுநரைப் பதவியிலிருந்து உடனடியாக இடைநிறுத்துங்கள் என்று அரசதலைவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளேன்.**

இவ்வாறு கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும், ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணியின் முக்கியஸ்தருமான இரா.துரைரெத்தினம் தெரிவித்தார்.
நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற அசாதாரண சூழ்நிலை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர்களையும், ஆதரவளித்தவர்களையும் கைது செய்து, விசாரணை நடத்தி நீதி மன்றில் முற்படுத்தி உச்சபட்ச தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சில மாதங்களுக்கு முன்னர் இந்தச் சம்பவத்துடன் தொடர்பு டையவர்கள் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டமை, இந்திய அரசால் உளவுத்தகவல் பரிமாறப்பட்டமை, அதிகாரிகளுக்குத் தகவல் தெரிந்தும் பாதுகாப்புச் சபைக்குத் தெரிவிக்கப்படாமை போன்ற விடயங்கள் அரசின் கவனக்குறைவே. இதற்குஅரசேபொறுப்பேற்கவேண்டும்.
இணையத்தளங்களில் ஆளுநரும் தற்கொலையாளியும் உள்ள படத்தைப் பார்த்து கிழக்கு மாகாண தமிழ் மக்கள் கொதிப்படைந்துள்ளனர். இந்தச் சம்பவங்களுடன் ஆளுநர் சம்மந்தப்பட்டுள்ளாரா? என்று சந்தேகிக்கும் நிலையில் நீதியான விசாரணை நடத்தி முடியும் வரையில் ஆளுநரை பதவியிலிருந்து இடைநிறுத்துங்கள்.
பாதுகாப்புச் செயலர், பொலிஸ்மா அதிபர் கடமைகளை நிறுத்தப் போவதாக அறிவித்த அரசதலைவர் கிழக்கு மாகாண ஆளுநர் தொடர்பாகவும் கவனமெடுத்து அவரைப் பதவியிலிருந்து இடைநிறுத்த வேண்டும் - என்றார்.
(கு)

## பொலிஸ் அதிகாரிகள் 13 பேருக்கு இடமாற்றல்

கொழும்பு, ஏப்.28
மூத்த பொலிஸ் அதிகாரிகள் 13 பேருக்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவால் நேற்றுமுன்தினம் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.
கொழும்புப் பகுதிக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ்.எஸ்.பத்திநாயக்க மேம்படுத்தல் துறைப் பிரதி பொலிஸ் மா அதிபராகவும், மேம்படுத்ததுறை பிரதிப் பொலிஸ் மா அதிபராக இருந்த எல்.ஏ.எஸ். ப்ரியந்த கொழும்புப் பகுதிக்குப் பொறுப்பான பொலிஸ் மா அதிபராகவும் இடமாற்றப்பட்டுள்ளனர்.
மேல் மாகாண வடபகுதிப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரீ.எம்.டபிள்யு.டீ.தேசபந்து, புத்தளம் பிரதிப் பொலிஸ் மா அதிபராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். இவர்களைவிட மேலும் 10 பேருக்கு இடமாற்றல்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

## இலங்கையை இலக்கு வைக்கின்றதா ஐ.எஸ்.?

கொழும்பு, ஏப்.28
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இலங்கை தங்கள் அமைப்புக்கான பூமி என்று அறிவித்துள்ளனர் என்றும், அது தொடர்பாகத் தகவல் கிடைத்துள்ளது என்றும் வானூர்திப் படைப் புலனாய்வுப் பிரிவு அறிக்கையிட்டுள்ளது என்றும் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
கொழும்பு வானூர்திப் படைத் தலைமையகத்தில் புலனாய்வுப் பிரிவு அலுவலகத்தில் இருந்து இதற்கான கடிதம் கடந்த 23ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தது.
இலங்கையைத் தங்கள் ஆட்சி அமைப்பதற்கான இடமாக ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு திட்டமிட்டுள்ளது என்றும், அந்த நடவடிக்கையை எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்கவுள்ளது என்று எச்சரிக்கைக் கடிதம் ஒன்று கிடைத்துள்ளது.
இந்த நோக்கத்துக்காக இலங்கையில் பயங்கரவாதச் செயற்பாடுகளை முன்னெடுக்க அந்த அமைப்பு திட்டமிட்டுள்ளது என்றும் அந்தக் கடிதத்தில் கூறப்பட்டிருந்தது.
இந்தக் கடிதம் தொடர்பாக வானூர்திப் படை ஊடகப் பிரி விடம் கேட்டபோது அவர்கள் உறுதி செய்யவோ, நிராகரிக்கவோ இல்லை என்று அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (எ)




## கொல்லப்பட்டோருக்காக கிராமமக்களால் அஞ்சலி

பயங்கரவாதிகளின் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட அப்பாவி மக்களின் ஆத்ம சாந்தி வேண்டி வவுனியா சிறிநகர் கிராமமக்களால் அஞ்சலி செலுத்தப்பட்டது.
இந்த அஞ்சலி நிகழ்வு சிறிசனசமூக நிலை யத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.
இதன்போது உயிரிழந்தவர்களுக்கு இரு நிமிட மௌனஅஞ்சலி செலுத்தபட்டு மெழுகுவர்த்தி ஏற்றி, மலர்அஞ்சலி செலுத்தபட்டது. நிகழ்வில் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் செ.மயூரன், பிரதேச சபை உறுப்பினர் த.யோகராசா உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ-110)

## தேயிலை கொழுந்து பறித்த பெண் குளவி கொட்டியதில் உயிரிழப்பு



தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்தவர்கள் மீது குளவி கொட்டியதில் பெண் ஒருவர் உயிரிழந்தார், 9 பெண் தொழிலாளர்கள் பாதிப்படைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
பொகவந்தலாவ பொலிஸ் பிரிவு பொகவந்தலவ தோட்டத்தைச் சேர்ந்த 62 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயான ராமன் வெள்ளையம்மா என்பவரே உயிரிழந்துள்ளார்.
பொகவந்தலாவ தோட்டத்தில் 8ஆம் இலக்கத்தேயிலை மலையில் கொழுந்து பறித்து கொண்டிருந்த போதே நேற்றுமுன்தினம் பகல் 12 மணியளவில் குளவிக் கூடு கலைந்து கொட்டியுள்ளது. இதில் 10 பேர் பாதிப்படைந்த நிலையில் ஒருவர் சாவடைந்துள்ளார். பாதிக்கப்பவர்கள் தொடர்ந்து பொகவந்தலாவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
உயிரிழந்த பெண்ணின் சடலம் மருத்துவமனை சடல அறையில் வைக்கப் பட்டுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.
(க)

## உயிர் நீத்த மக்களுக்காக சிறப்புப் பூஜை வழிபாடு




பொகவந்தலாவ,ஏப்.28
குண்டு வெடிப்பில் உயிர் நீத்த மக்களுக்கு ஹற்றன் மாணிக் கபிள்ளையார் ஆலயத்தில் சிறப்புப் பூஜை வழிபாடுகள் நேற்று இடம்பெற்றன.
உயிர்த்த ஞாயிறு தினமான கடந்த 21 ஆம் திகதி தேவாலயங்கள்,நட்சத்திர விடுதிகளில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் உயிர் நீத்த உறவுகளுக்கு ஆத்மா சாந்தி வேண்டி இந்த வழிபாடுகள் இடம்பெற்றன. (ஐ)

# வண்ணான்குளம் சீரமைப்புக்கு 5 கோடியே 50 லட்சம் ஒதுக்கீடு

## 260 மேற்பட்ட விவசாயிகள் இதனால் நன்மையடைவர்

வலி.தென்மேற்கு ஏப்.28

மாந்தை கிழக்கு அம்பாள் புர கிராம அலுவலகர் பிரிவிலுள்ள வண்ணான்குளம் சுமார் ரூபா 5 கோடியே 50 லட்சம் செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.

இதற்கான நிதியை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ நிர்மலநாதன், சாந்தி சிறீஸ்கந்தராஜா ஆகிய இருவரும் வழங்கியுள்ளனர்.

குளம் பல வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படாமல் தூர்ந்து போய் இருந்தமையால் கிராமத்தில் வசித்து வரும் 260 க்கு மேற்பட்ட குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர். விவசாயத்தையே வாழ்வாதாரமாகக் கொண்ட இவர்கள் தூர இடங்களுக்குச் சென்று விவசாயத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இவர்களுக்கு குளத்தைச் சுற்றி சொந்தக் காணிகள் இருந்த போதும் விவசாயத்தில் ஈடுபடுவதற்கு தண்ணீர் வசதி இல்லாமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், சாந்தி சிறீஸ்கந்த ராஜா ஆகியோரின் கவனத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இதையடுத்து குளத்தை அபிவிருத்தி செய்ய முன்வந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் 5 கோடியே 50 லட்சம் ரூபாவை பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்ட நிதியிலிருந்து வழங்கியுள்ளனர். (ஐ-115)

## அநாதரவாக நின்ற உந்துருளியிலிருந்து கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம்,ஏப்.28

சந்தேகத்துக்கு இடமான முறையில் அநாதரவாக நின்ற உந்துருளியில் இருந்து 80 கிராம் கஞ்சாவை சிறப்பு அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர்.

புலோலி தம்பசிட்டி தெருமூடி மடத்தடி வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணியளவில் குறித்த உந்துருளி மீட்கப்பட்டுள்ளதாக அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட அதிரடிப்படையினர் வீதி ஓரத்தில் அநாதரவாக நின்ற அப்பாச்சி உந்துருளியை சோதனை செய்தபோது கஞ்சா இருப்பது கண்டுபிடிப்பட்டது.

இதனையடுத்து கைப்பற்றிய உந்துருளியையும், கஞ்சாவையும் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-173)

## மழையால் பாதிக்கப்பட்ட 14 குடும்பங்களுக்கு நிதி

சாவகச்சேரி, ஏப்.28

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த வருடம் பெய்த பெரும்மழையால் பாதிக்கப்பட்ட கெற்பேலிப் பகுதியைச் சேர்ந்த மேலும் 14 குடும்பங்களுக்கு நிதி உதவி கிடைத்துள்ளது.

கொழும்பு இடர் முகாமைத்துவ அமைச்சால் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 574 குடும்பங்களுக்கு ஏற்கனவே உதவித்தொகை வழங்கப்பட்டது. இந்த நிலையில் உதவித் தொகை வழங்கப்படாத 14 குடும்பங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த உதவிக் கொடுப்பனவு பிரதேச இடர் முகாமைத்துவ அலகினரால் பயனாளிகளது வங்கிக் கணக்குகளில் கடந்த திங்கட்கிழமை வைப்பிலிடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## சட்டவிரோத மீன்பிடி 22 மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம்,ஏப்.28

சட்ட விரோதமாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இரு நாள்களில் 22 உள்ளூர் மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படை ஊடகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

சட்ட விரோதமான முறையில் மீன் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் மன்னார் கடற் பரப்பில் வைத்து 4 பேர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர் . மன்னார் வங்காலை கடற் பரப்பில் கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை இவர்கள் கைது செய்யப்பட்டனர். உள்நாட்டு மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து 250 கிலோ கிராம் மீன்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டன. சந்தேக நபர்கள் மாவட்ட நீரியல் வளதுறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கு கடற்பரப்பில் அனுமதி பத்திரமின்றி கடலட்டை பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் 12 பேர் கடந்த செவ்வாய்க்கிழமை கடற் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பூநகரி பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இதேவேளை மண்டை தீவு கடற்பரப்பில் சட்ட விரோத மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த 22 ஆம் திகதி 6 பேர் கைதுசெய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து இரு படகுகளும் மீட்கப்பட்டன.

சந்தேகநபர்கள் சுழிபுரம் மற்றும் பாசையூர் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களை மண்டை தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## தேன் போத்தல் பறிமுதல்

சாவகச்சேரி ஏப். 28

சாவகச்சேரி நகரப் பகுதி வர்த்தகர்களுக்கு வழங்கவென கொண்டு வரப்பட்ட தேன் போத்தல்களை நகர பொது சுகாதாரப் பரிசோதகர் வரணிப் பகுதியைச் சேர்ந்தவரிடமிருந்து அண்மையில் கைப்பற்றியுள்ளார். அவை போலியான தரமற்ற தேனாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பறிமுதல் செய்யப்பட்டதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

இவை அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு போலியென உறுதிப்படுத்தும் பட்சத்தில் குறித்த நபருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரி நகரப் பகுதி வர்த்தக நிலையங்களில் தேன் விற்பனைக்காக ஒருவர் கொண்டு வந்துள்ளார் எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு பொதுமக்களால் முறையிடப்பட்டது.

இதனையடுத்து அங்கு சென்ற அலுவலர் விற்பனைக்கு கொண்டு வரப்பட்ட தேனை பறிமுதல் செய்ததுடன் போலியானதா எனப் பரிசோதிக்க அரசபகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தெரிவித்தார். திணைக்களத்திடமிருந்து அறிக்கைகிடைத்தவுடன் அவை போலித் தேன் என இனங்காணப்பட்டால் விற்பனைக்கு கொண்டு வந்த நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதெனவும் தெரிவித்தார்.

நகரப் பகுதியில் போலித் தயாரிப்புக்களான தேன், நெய் மற்றும் தேங்காய் எண்ணெய் போன்றவை உற்பத்தியாளர்களால் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. இவை தொடர்பாக பொதுமக்களும் வர்த்தகர்களும் விழிப்புடன் செயற்படுமாறும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார். (ஐ-9)

## தென்மராட்சியில் இரு பாடசாலைகளில் 13 வருட உத்தரவாத கல்வி நெறி ஆரம்பம்

சாவகச்சேரி, ஏப்.28

தென்மராட்சி கல்வி வலயத்தில் 13 வருட உத்தரவாதக் கல்விக்கான புதிய வகுப்புகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மற்றும் மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவ்ரோதய மகா வித்தியாலயம் ஆகியவற்றில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கடந்த 2018ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி உயர்தரத்தை கற்க முடியாத மாணவர்கள் 13 வருட உத்தரவாதக் கல்வி நெறியில் இணைந்துகொள்ள முடியும்.

இந்தக் கல்வி நெறியில் கற்கவுள்ள மாணவர்கள் இந்தப் பாடசாலைகளின் அதிபர்களிடம் எதிர்வரும் ஆறாம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ச.சுந்தரசிவம் அறிவித்துள்ளார். (ஐ-9)

## முச்சக்கரவண்டியில் இருந்த அலைபேசிகள் திருட்டு

சாவகச்சேரி, ஏப். 28

முச்சக்கரவண்டியின் பாதுகாப்புப் பெட்டியில் (டஸ்காப்) வைக்கப்பட்டிருந்த பெறுமதியான 3 அலைபேசிகள் திருடப்பட்டுள்ளன என்று முறையிடப்பட்டுள்ளது. சாவகச்சேரி நீதிமன்றின் முன்பாக நிறுத் தப்பட்டிருந்த முச்சக்கர வண்டியிலிருந்தே கடந்த புதன்கிழமை அவை திருடப்பட்டுள்ளன.

நீதிமன்றில் வழக்கு நடைபெறும்போது அலைபேசிகள் கொண்டுசெல்லக்கூடாது என்று கட்டுப்பாடு உள்ளது. அதனால் 3 அலைபேசிகளையும் தாம் பயணித்த முச்சக்கரவண்டியின் பாதுகாப்புப் பெட்டியில் வைத்துவிட்டு நீதிமன்றினுள் சென்றுள்ளனர். வழக்கு முடிந்து வந்து பார்த்தபோது பாதுகாப்பு பெட்டி உடைக்கப்பட்டு அலைபேசிகள் திருடப்பட்டிருந்தமை தெரியவந்தது.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அங்குள்ள வர்த்தக நிலையங்கள், வங்கிகளில் பொருத்தப்பட்டிருந்த மறைகாணிகளின் உதவியுடன் திருடனைப் பிடிப்ப தற்கான முயற்சிகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (சு-9)

## கட்டடம் அமைப்பதற்கு ரூ.2 லட்சம் நிதி ஒதுக்கீடு

கொடிகாமம், ஏப்.28

வரணி மாசேரி சனசமூக நிலையக் கட்டடம் அமைப்பதற்கு யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் 2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளார்.

சனசமூக நிலையத் தலைவர் விடுத்த வேண்டுகோளை அடுத்து பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-159)

## ஹெரோயினுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.28

ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்தனர் என்ற குற்றச் சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் குருநகர் கடற்கரைப் பகுதியில் வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை இவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். குறித்த பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட கடற் படையினர் 20,21 வயதுடைய சந்தேக நபர்களை கைது செய்தனர்.

அவர்களிடம் இருந்து 5 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர். (ஐ-7)

## படையினரால் தண்ணீர்த் தாங்கிகளும் குழாய்க்கிணறும் அமைப்பு

சாவகச்சேரி, ஏப். 28

சாவகச்சேரி கோயிற்குடியிருப்புப் பகுதியில் படையினர் இரு இடங்களில் நீர்த் தாங்கிகளும், குழாய்க்கிணறும்அமைத்து வழங்கியுள்ளனர்.

கடந்த மாதம் படையினரால் குறித்த பகுதியில் அமைக்கப்பட்ட மலசலகூடங்களைக் கையளிக்கும் நிகழ்வில் வருகை தந்திருந்த யாழ்.மாவட்ட பாதுகாப்பு கட்டளைத் தளபதி தர்சன ஹெட்டியாராச்சியிடம் சாவகச்சேரி நகரசபை தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் விடுத்த வேண்டுகோளையடுத்தே இவை அமைத்து வழங்கப்பட்டன.

அப் பகுதியில் ஏற்கனவே பிரதேச செயலகத்தால் அமைத்து வழங்கப்பட்ட குழாய்க் கிணற்றுக்கு தண்ணீர்த் தாங்கியும், மற்றொரு இடத்தில் குழாய்க் கிணறு அமைத்து தண்ணீர்த் தாங்கியும் பொருத்தியுள்ளனர். இவை விரைவில் பொதுமக்களின் பாவனைக்கு வழங்கப்படவுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# ஊடுபயிர் உழவு இயந்திரங்களை திருப்பிக்கொடுக்கும் விவசாயிகள்

## சந்தை விலையை விட அதிகம் என விசனம்

சாவகச்சேரி,ஏப்.28

மானிய அடிப்படையில் பெற்றுக்கொண்ட ஊடுபயிர் உழவு இயந்திரங்கள் (சிறு கலப்பையுடைய இயந்திரம்) சந்தைப் பெறுமதியில் மிகக் குறைவாகக் காணப்படுவதால் உழவு இயந்திரங்களை மீள ஒப்படைத்துள்ளனர் தென்மராட்சி பிரதேச விவசாயிகள்.


பிரதேச விவசாயிகளுக்கு 50 வீத மானிய அடிப்படையில் 78 ஆயிரம் ரூபா பெறுமதியான ஊடுபயிர் உழவு இயந்திரம் வழங்குவதாக தெரிவித்து 50 வீத பணத்தைச் செலுத்துமாறு விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட விவசாயிகள் 50 வீத கொடுப்பனவினைச் ( 37 ஆயிரம் ரூபா )செலுத்தியுள்ளனர்.

உழவு இயந்திரங்கள் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டன. அவை சந்தையில் 34 ஆயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யக்கூடியதாக காணப்பட்டுள்ளது.

இதனால் ஊடுபயிர் உழவு இயந்திரங்களைக் பெற்ற விவசாயிகள் அவற்றினை பிரதேச செயலகத்தில் ஒப்படைத்து தம்மால் செலுத்தப்பட்ட தொகையினை மீள வழங்குமாறு கோரியுள்ளனர். இது தொடர்பாக பிரதேச செயலகத்தினர் உரிய நிறுவனத்துடன் தொடர்பு கொண்டபோது தவறுதலாக இயந்திரங்கள் மாறிவந்துள்ளன என மன்னிப்புக் கோரி உரிய தொகைக்குரிய இயந்திரங்கள் அனுப்பி வைப்பதாக அறிவித்திருந்தனர்.

அனுப்பப்பட்ட ஊடுபயிர் இயந்திரங்கள் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டவை போன்ற நிலையில் காணப்படுவதால் அவற்றினை ஏற்க முடியாதென விவசாயிகள் மறுத்து வருகின்றனர். எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)





## அம்பன் சமுர்த்தி வங்கியின் விளையாட்டு நிகழ்வுகள்

மருதங்கேணி,ஏப்.28

வடமராட்சி கிழக்கு அம்பன் சமுர்த்தி வங்கி சங்கத்தின் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் அம்பன் பிங்பொங் விளையாட்டு கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி கு.பாலசெல்வதி தலைமையில் குண்டு வெடிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இரண்டு நிமிடம் பிராத்தனையுடன் விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக கணக்காளர் க.சுதர்சன் கலந்துகொண்டார்.

மகளிருக்கான தேங்காய் துருவுதல், கிடுகு பின்னுதல், முட்டி உடைத்தல் ,யானைக்கு கண்வைத்தல், சிறுவர்களுக்கான பலூன் உடைத்தல் ,போர்த் தேங்காய் உடைத்தல் போன்ற போட்டிகள் இடம்பெற்றன. (ஐ-160)

## பொதுக் கூட்டம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப்.28

யாழ்ப்பாணம் சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் மறுஅறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது.

இந்தப் பொதுக் கூட்டம் பாடசாலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக பிற்போடப்படுவதாக கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (ஐ)

# தமிழ் இந்து கலை பண்பாட்டு பல்கலைக்கழகம் அமைக்கவும்

## உயர் கல்வி அமைச்சருக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் கடிதம்

யாழ்ப்பாணம், ஏப். 28

தமிழர்களின் நீண்ட காலக் கோரிக்கையான தமிழ் இந்து கலை பண்பாட்டுப் பல்கலைக்கழகம் அமைத்தல் முற்றுப்பெறாத நிலையில் இருக்கின்றது.

ஏனைய மொழிகளுக்கு தனித்தனியே இவை உள்ளது.

அதனால் தமிழ் மொழிக்கு இதை விரைவில் அமைக்க வேண்டும்.

இவ்வாறு உயர்கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் இ. ஜெயசேகரன் கடிதம் மூலமாகக் கோரியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இதை தமிழர்கள் மிகப்பெரிய குறையாகவே நினைக்கின்றனர். செம்மொழியாம் தமிழ் மொழியையும் கலை பண்பாடுகளைப் பாதுகாப்பதற்கும் சட்ட ரீதியாகவோ அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களை அமைப்பது தொடர்பாக நாம் நீண்ட காலம் எடுத்துக் கூறிவந்த போதும் நிறை வேற்றப்படவில்லை.

பாளி- பௌத்த பல்கலைக் கழகம் ஹோமாகமவிலும், பௌத்தபிக்குகளுக்குரிய பல்கலைக்கழகம் அநுராதபுரத்திலும், பௌத்த கற்கைக்கான உயர்பீடம் களனிப்பல்கலைக்கழகத்திலும், அராபிக் இஸ்லாமிய பீடம் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலும், றோமன் கத்தோலிக்கத்துக்குப் பட்டங்கள் வழங்கும் அக்குனஸ் உயர்கல்வி கொழும்பிலும் இயங்குகின்றன.

ஆனால் தமிழ் இந்துக் கலை பண்பாட்டு கற்கை நெறிக்குரிய பல்கலைக்கழகமோ அல்லது இந்தத் துறைகளுக்கான தனியான பீடங்களோ இதுவரையில் இல்லை என்பது கவலைக்குரியது.

தமிழ்மொழி மேம்பாட்டுக்கும் சமயங்களின் மேம்பாட்டுக்கும் இந்த மக்களுக்கேயுரிய கர்நாடகஇசை, பரதநாட்டியம், நாட்டாரியல் நாடகம், தவில், நாதஸ்வரம், வீணை, மிருதங்கம், வயலின், சிற்பம், ஓவியம் போன்ற துறைகளின் மேம்பாட்டுக்கும் பாதுகாப்புக்கும், பண்பாட்டு அடையாளங்களை வலுப்படுத்துவதற்கும், பண்பாட்டுப் பல்கலைக்கழகம் பெரும்பங்களிப்பைச் செய்ய முடியும்.

தமிழ், இந்து கலை பண்பாட்டுப் பல்கலைக்கழகம் அமைத்தல் தொடர்பான தீர்மானம் வடக்கு மாகாண சபையின் 122 ஆவது அமர்வில் நிறைவேற்றப்பட்டு அரச தலைவருக்கும் உயர் கல்வி அமைச்சுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

இலங்கையில் அரச பல்கலைக்கழகக் கட்டமைப்பில் மொழி, சமயம், கட்புலஆற்றுகை, நாட்டாரியல்போன்ற துறைகளைக் கற்பதற்கும், ஆய்வுக்கும் வாய்ப்புக்கள் இருப்பினும் தமிழ், இந்துப் பண்பாடு தொடர்பான கற்கைகளுக்கு வாய்ப்பு வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கின்றன.

மேற்கூறப்பட்ட விடயங்களைக் கவனத்தில் எடுத்து காலம்தாழ்த்தாது தமிழ் கலை பண்பாட்டு பல்கலைக்கழகத்தை விரைவில் அமைக்க தாங்கள் முயற்சி எடுக்க வேண்டும் என்றுள்ளது. (த)

## ஒரு லட்சம் பெறுமதியான நான்கு மாடுகள் திருட்டு

### பொலிஸில் முறைப்பாடு

கொடிகாமம்,ஏப்.28

தோட்டத்தில் கட்டப்பட்ட ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 4 மாடுகள் திருடப்பட்டுள்ளதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவம் கொடிகாமம் இராமாவில் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இதன்போது 3 நாம்பன் கன்றுகளும், ஒரு பசு மாடுமே காணமல் போயுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

தினமும் தோட்டப் பகுதியில் மேய்ச்சலுக்காக இந்த மாடுகள் கட்டப்படுவது வழமை.

அவ்வாரே அன்றைய தினமும் கட்டப்பட்டு காலையில் அவற்றை அவிழ்க்கச் சென்ற வேளையில் காணாமல் போயிருந்ததாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-159)

## திண்மக் கழிவு சேகரிக்க சேகரிப்பு வாளி

யாழ்ப்பாணம், ஏப்.28

நல்லூர் பிரதேச சபை வளாக வீதியில் குடியிருக்கும் குடியிருப்பாளர்களுக்கு திண்மக் கழிவுகளை சேகரிப்பதற்கென கழிவு சேகரிப்பு வாளிகள் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்குப் பின்புறமாக செல்லும் இந்த வளாக வீதியில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடியிருப்பாளர்கள் உள்ளனர்.

குடியிருப்பாளர்கள் தமது சுற்றாடல்களில் சேகரிக்கும் கழிவுகளை இந்த வாளிகளில் போட்டுவிட்டு முன்வாசலில் வைக்க வேண்டும் என்று சபை தெரிவித்துள்ளது,

வாளிகளில் சேகரிக்கப்படும் இந்தத் திண்மக் கழிவுகள் பின்னர் சபையின் திண்மக் கழிவகற்றும் பிரிவால் அகற்றப்படும்.


இந்த வாளிகள் எதிர்வரும் மே மாதம் 7ஆம் திகதி குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

# பயணிகள் பேருந்துத் தரிப்பிடம் திறப்பு

கொடிகாமம்,ஏப். 28

கைதடி மானிப்பாய் வீதியில் சமுர்த்தி வங்கிக்கு முன்பாக அமைக்கப்பட்ட பயணிகள் பேருந்து தரிப்பிடம் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது. கைதடி குமரநகரைச் சேர்ந்த மறைந்த செல்லர் சிவசரவணமுத்து நினைவாக அவர்களது குடும்பத்தால் அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பிடத்தை தென்மராட்சிபிரதேசசெயலர் திருமதி தேவந்தினி பாபு திறந்து வைத்தார்.

நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சு.கேதீஸ்வரன், கைதடி சமுர்த்தி வங்கி முகாமையாளர் சுஜீவன், கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ. கந்தசாமி, குமரநகர் சனசமூக நிலையத்தின் உறவுகள் குடும்பத்தினர் உட்பட பலர் கலந்து கொண்டனர். நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதத்தில் உயிரிழந்த உறவுகளுக்கும் இதன் போது மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஐ-159)



## வடமராட்சி...

மூலம் துப்புரவு செய்யும்போது மணலில் புதைந்த சிறிய கொள்கலன் காணப்பட்டுள்ளது. ஜேசிபி சாரதி குடத்தனை சிறப்பு அதிரடி படையினருக்கு அறிவித்தார்.
அவர்கள் கொள்கலனை பாதுகாப்பாக எடுத்து திறந்து பார்த்தனர். அதில், மோட்டார்குண்டு 9, ரிஎன்ரி மருந்து 200 கிராம், மல்ரி மீட்டர் 1, வயர் றோல் 1, விடுதலைப்புலிகளின் தகடு 1, வெளிநாட்டு குண்டு என்பன மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட வெடிபொருள்களில் த.வி.பு. என்று எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. (ஓ.5,26,160)

## யாழ். ..

நிலவும் அசாதாரண நிலையில் முப்படையினரும் வீதிக்கு இறக்கப்பட்டுள்ளனர். சோதனை நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறானதொரு நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
இரு உந்துருளிகளில் பயணித்த 4பேர், வர்த்தக நிலையங்களுக்குள் நேற்று மாலை புகுந்து வாள்முனையில் அச்சுறுத்தி பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.
யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தின்போது வர்த்தக நிலையத்திலிருந்து 8 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. பிறவுண் வீதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் 10 ஆயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.
முகத்தை மூடிக் கட்டியவாறு வந்த கொள்ளையர்கள் இரு வர்த்தக நிலையங்களிலும் கொள்ளையடித்து மூன்றாவது வர்த்தக நிலையத்துக்குள் நுழைந்து அங்கு 22 ஆயிரம் ரூபா கொள்ளையடித்துள்ளனர். இதன் பின்னர் நான்காவது வர்த்தக நிலையத்தில் கொள்ளையடிக்க முயற்சித்தபோதும், வாடிக்கையாளர்கள் அதிகம் நின்றதால் வாள்வெட்டுக் குழுவினர் தப்பிச் சென்றுள்ளனர். (ஓ.5,105)

## பொலிஸாரால்...

தேவாலயத்துக்கு வந்திருந்தார். அவரது ஒளிப்படம் தற்போது தேடப்படுவோர் பட்டியலில் உள்ளதாக கத்தோலிக்க மதகுரு பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளார்.
கிளிநொச்சி சென்திரேசா தேவாலயப் பங்குத் தந்தையான ஜேசுதாசிடம் இது தொடர்பில் தொடர்பு கொண்டு கேட்டபோது, உயிர்த்த ஞாயிறுக்கு முதல் தினம் இரவு பூசை இடம்பெற்றது. அதனையடுத்து ஞாயிற்றுக் கிழமையன்று காலை பூசை 7.30 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதேநேரம் அன்றைய தினம் காலை சுமார் 6 மணிக்கு ஓர் பெண் ஆலயத்துக்கு வந்திருந்தார். அந்த நேரம் ஆலயத்தில் யாரும் இருக்கவில்லை. அங்கே நடமாடிய பெண் ஆலயத்துக்கு புதிதாகவே காணப்பட்டார்.
அப்போது சந்தேகம் எழவில்லை. ஆலயத்தின் உட்பகுதிக்கும் வந்தவர் சமய முறைப்படி வழிபடும் முறைகளைக்கூட சரியான முறையில் பின்பற்றவில்லை. இருப்பினும் அது தொடர்பில் அப்போது கண்டுகொள்ளவில்லை. ஆலயத்தில் மக்கள் இல்லாதமையால் தப்பியிருக்க கூடும். இதன் பின்பு பூசை நேரம் நான் அவதானிக்கவில்லை.
இதன் பின்பு தாக்குதல் செய்தி வெளியானபோதும் ஐயம் கொண்டிருக்கவில்லை. ஆனால் தற்போது தேடப்படுவோர் பட்டியல் வெளிவந்த நிலையில் அதில் அவதானித்த ஒளிப்படமும் அன்றைய தினம் ஆலயத்தில் நடமாடிய பெண்ணும் ஒரே நபர்தான் என்பதை உணர்கின்றேன். உரிய இடங்களுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது - என்றார். (ஓ.5,105)

## சஹ்ரான்...

திகதி இலங்கையில் முதலாவது தாக்குதலை நடத்தியுள்ளது எனப் பாதுகாப்புத் தரப்பினர் விசாரணைகளின்போது கண்டறிந்துள்ளனர்.
இந்தத் தகவலைச் சுட்டிக்காட்டி கொழும்பு சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.
ஈஸ்ரர் ஞாயிறு தினத்தில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியான தேசிய தௌஹீத் ஜமா அந்த அமைப்பின் தலைவர் சஹ்ரான் ஹாசீமினின் வாகனச்சாரதி எனக் கூறப்படும் நபர் விசாரணைகளின்போது இந்தத் தகவலை வழங்கியுள்ளார்.
சஹ்ரான் ஹாசீமின் சாரதியான மட்டக்களப்பு, காத்தான்குடி 3, மீன் சந்தை வீதியைச் சேர்ந்த 54 வயதுடைய முகமது சரீப் ஆதம்லெப்பை கபூர், கைத்துப்பாக்கி மற்றும் மடிக்கணினியுடன் நேற்றுமுன்தினம் பாதுகாப்புத் தரப்பால் கைதுசெய்யப்பட்டார்.
காத்தான்குடியில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட இவரிடம் நடத்திய விசாரணைகளின்போது கடந்த வருடம் நவம்பர் மாதம் 30ஆம் திகதி மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் காவலரணில் இருந்த தமிழ் மற்றும் சிங்களப் பொலிஸார் இருவரை சஹ்ரான் ஹாசீமின் குழுவினரே வெட்டியும் சுட்டும் கொலைசெய்தனர் எனவும், இந்தக் கொலையுடன் தானும் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.
இலங்கையில் நடத்திய முதலாவது தாக்குதல் இது எனவும் இவர் தெரிவித்துள்ளார். கைதுசெய்யப்பட்ட சஹ்ரான் ஹாசீமின் சாரதியிடம் தொடர்ந்து விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.
இதேவேளை, வவுணதீவில் பொலிஸார் இருவரினதும் கொலைகளுக்கு ரி 56 ரகத் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டிருந்தனர். சம்பவத்தில் உயிரிழந்த பொலிஸாரின் இரண்டு துப்பாக்கிகளும் காணாமற்போயிருந்தன. அவை இரண்டும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. (ஓ.5,22)

## யாழ்ப்பாணத்தின்...

டுள்ளனர். பொதுமக்கள் பாதுகாப்புத் தொடர்பில் எந்த அச்சமும் கொள்ளத் தேவையில்லை என்று வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொசான் பெர்னாண்டோ தெரிவித்தார்.
யாழ்ப்பாணத் தலைமைப் பொலிஸ் நிலையத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்து கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்தில் பொலிஸார் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர். மக்கள் எந்த அச்சமும் கொள்ளத் தேவையில்லை. தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் வடக்கிலும் இருக்கக் கூடும் என்ற அடிப்படையிலேயே வடக்கிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.
கடந்த 25ஆம் திகதி வவுனியாவில் சுற்றிவளைப்பு தேடுதல் மற்றும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் சுற்றிவளைப்பு இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் நேற்று சுற்றிவளைப்பு இடம்பெற்றது. தொடர்ந்தும் சுற்றிவளைப்புக்கள், தேடுதல்கள் இடம்பெறும்.
தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக வெளி மாகாணங்களில் கைதுகள் இடம்பெறுகின்றன. தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்று வடக்கு மாகாணத்தில் எவரும் கைது செய்யப்படவில்லை. சுற்றிவளைப்புகளின் போதும், சோதனைகளின் போதும் சந்தேகத்தில் சிலர் கைது செய்யப்படுகின்றனர். அவர்கள் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து இடம்பெறும் சோதனைகளின் போதும் கைதுகள் இடம்பெறும். கைது செய்யப்படுபவர் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்பற்றவர் என்றால் விசாரணைகளின் பின்னர் அவர் விடுவிக்கப்படுவார் - என்றார். (ஓ.5,21,26)

## காட்டிக்கொடுத்த...

தான்டா உயிரைக் கொடுக்கப் போறோம் மூதேசிகளா. இப்படிக் கத்தியபடி சாய்ந்தமருது, வெலிவேரியன் கிராமத்தில் வாடகைக்கு இருந்த வீட்டின் பக்கத்துக்கு வீடுகளுக்கு 5 ஆயிரம் ரூபா பணக் கட்டுக்களை அள்ளி வீசியிருக்கின்றனர் சாய்ந்தமருதில் உயிரிழந்தவர்கள். இந்தத் தகவலைப் பொலிஸார் வெளியிட்டனர்.
கடந்த 18 ஆம் திகதி இந்த வீட்டை வாடகைக்கு பெற்ற இருவர் அந்த வீட்டில் தங்காமல் போய்விட்டு இரண்டு நாள்கள் சென்ற பின்னர் 8 பேருடன் வந்துள்ளனர். சிறு பிள்ளைகள் நால்வர், 2 பெண்கள் மற்றும் ஆறு ஆண்கள் வந்து தங்கியிருந்த போது அவர்களில் சந்தேகம் கொண்ட வீட்டின் உரிமையாளர் அவர்களிடம் விபவரம் கேட்கச் சென்றதாகத் தகவல். அப்போது ஒருவர் ஆயுதத்தைக் காட்டி ஒருவரும் வாய்திறக்கக் கூடாதென எச்சரித்துள்ளார். இந்தத் தகவல் சற்று வெளியில் கசிந்ததையடுத்து அங்குள்ள ஒருவர் போக்குவரத்து பொலிஸ் அலுவலரிடம் முறையிட்டுள்ளார். மக்களுடன் மிக நட்புடன் பழகும் இந்த அலுவலர் இன்னும் இரு அலுவலர்களுடன் சம்பவ இடத்துக்குச் சென்றபோது துப்பாக்கிதாரிகள் சுட ஆரம்பித்தனர்.
நிலைமையின் பாரதூரத்தை உணர்ந்த அந்த அலுவலர்கள் திரும்பிச் சென்றுவிட்டனர். மக்கள் பதற்றத்தில் அங்குமிங்கும் செல்ல ஆரம்பித்த நிலையில் நிலமை விபரீதமாகப் போகிறது என்பதை உணர்ந்த துப்பாக்கிதாரிகள் பெரிய உரப்பையை வெளியில் எடுத்துவந்து அதில் இருந்த பணத்தை கட்டுக் கட்டாக வீசி கேவலமான வார்த்தைகளை கூறி திட்டியுள்ளனர்.
பின்னர் படையினர் வந்ததையடுத்து நிலமை மோசமானது. சரணடையுமாறு அவர்களை பணித்தபோதும் அதனை செவிமடுக்காத தற்கொலைதாரிகள் குண்டை வெடிக்க வைத்துள்ளனர். புத்தம் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட வாகனமும் அங்கு இருந்துள்ளது. முக்கிய தாக்குதலை நடத்த இவர்கள் திட்டமிட்டு வந்திருக்கலாமென சொல்லப்படுகிறது. காத்தான்குடியை சேர்ந்தவர்கள் இவர்களென பொலிஸார் கூறுகின்றனர்.

**ஐ.எஸ். காணொலிப்பதிவு**

தாக்குதலுக்கு முன்னர் தக்பீர் கூறிய காணொலியை சம்மாந்துறை, சம்புமடு, சென்னல் கிராமத்தில் உள்ள வீட்டில் வைத்து ஒளிப்பதிவு செய்துள்ளதாக தெரியவந்துள்ளது. இந்த காணொலியை எடுத்தவர்கள் செம்மைப்படுத்தி வெளிநாட்டுக்கு அனுப்பியவர்கள் குறித்து விசாரணைகள் நடத்தப்படுகின்றன. மூன்று கிழமைகளுக்கு முன்னரே இந்த வீடு வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளது. பாதணி செய்யும் கைத்தொழில் ஒன்றை ஆரம்பிக்கப்போவதாக கூறியே இந்த வீடு வாடகைக்கு எடுக்கப்பட்டாலும் அதன் உரிமையாளர் சந்தேகம் கொண்டு இதனைப் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார். (ஓ.5)

## சாய்ந்தமருதில்...

கிறிஸ்தவ மக்களுக்கு எதிராக கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.
'முஸ்லிம்களை கண்டஇடத்தில் கைது செய்வதும் கொல்வதும் தொடர்ந்தாலும் எங்கள் பாதை நின்றுபோகாது. நாங்கள் அழிந்துபோனாலும் இதனை எல்லாவழிகளிலும் தொடருவோம்' என்று காணொலியில் கூறப்பட்டுள்ளது. (ஓ.5)

## இந்தியா...

விடுத்துள்ளது.
தௌஹீத் ஜமாத் அமைப்பின் மற்றுமொரு குழு இந்தத் தாக்குதலை மேற்கொள்ளலாம் என்றும் கட்டார் நாட்டிலிருந்து இலங்கைக்கு திரும்பியுள்ள ஜால் அல் குவாலிட் என்றழைக்கப்படும் ரில்வான் மார்சாக் என்ற நபரின் தலைமையில் இரண்டாவது தாக்குதல் வழிநடத்தப்படலாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்ற தீவிர தேடுதல் நடவடிக்கைகளின் போது மீட்கப்படுபவைகளை கருத்தில் கொண்டால் வெறுமனே குண்டுத் தாக்குதல்கள் மாத்திரமல்லாது பொது இடங்களில் துப்பாக்கிப் பிரயோகங்கள் மற்றும் வாள் வெட்டுக்கள் போன்ற தாக்குதல் நடவடிக்கைகளுக்கும் அடிப்படைவாத குழுக்கள் தயாராகியிருந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
அனைத்து வகையிலுமான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு பாதுகாப்பு படைகள் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. சந்தேகத்துக்கிடமான நபர்கள் மற்றும் பொருள்கள் குறித்துப் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்குமாறு பாதுகாப்பு துறை கேட்டுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ.5)

## ஐ.எஸ்.ஐ.எஸ்....

பன்னாட்டுச் செய்தி நிறுவனத்துக்கு நேற்று வழங்கிய செவ்வியின்போதே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள், இலங்கையில் கிழக்கிலும் தெற்கிலும் மறைந்திருக்கின்றார்கள். கடந்த ஞாயிறன்று இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மேற்கொண்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களின் பின்னர் அவர்களுடன் தொடர்புபட்ட பலர் தினந்தோறும் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர். அவர்களில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளும் அடங்குகின்றனர்.
கைது செய்யப்பட்ட அனைவரிடமும் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவர்கள் வழங்கும் தகவல்களின் பிரகாரம் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் வெடிகுண்டுகளையும், வெடிபொருள்களையும், தற்கொலை அங்கிகளையும் கிழக்கிலும் தெற்கிலும் மீட்டு வருகின்றோம்.
சில பன்னாட்டுச் சமூகத்தின் பின்னணியில்தான் இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் உருவாகியுள்ளார்கள். எனவேதான் அவர்களை இல்லாதொழிக்க பன்னாட்டுப் புலனாய்வுப் பிரிவுகளின் உதவியையும் நாம் நாடினோம். ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளை இல்லாதொழிப்பதற்காக எமது முப்படையினரும் பொலிஸாரும் புலனாய்வுத்துறையினரும் இரவு பகலாகக் கடமையாற்றி வருகின்றார்கள் என்றார். (ஓ.5,22)

## இரண்டு...

அமைய, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.
அந்த அமைப்புகளுக்கு சொந்தமான அசையும் மற்றும் அசையா சொத்துக்களையும், அதன் செயற்பாடுகளையும் இல்லாமல் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. (ஓ.5)

## அமெரிக்கர்களை...

ஜாங்க திணைக்களம் கோரியுள்ளது. இலங்கையிலுள்ள அமெரிக்க அரச ஊழியர்களின் பாடசாலை செல்லும் மாணவர்கள் உள்பட குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் இலங்கையிலிருந்து வெளியேறுமாறு அமெரிக்க இராஜாங்க திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.
இலங்கையிலிருந்து தாமாக முன்வந்து வெளியேறும் அமெரிக்க அரச ஊழியர்களுக்கு அமெரிக்க இராஜாங்க திணைக்களம் ஊக்கமளித்துள்ளது. இலங்கையில் மேலும் பயங்கரவாதத் தாக்குதல் இடம்பெறலாம் என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அச்சம் வெளியிட்டுள்ளது.
இலங்கையிலுள்ள அமெரிக்க மக்களுக்குப் பாதுகாப்பு காரணங்களையிட்டு மட்டுப்படுத்தப்பட்ட அவசரகால சேவையை மட்டுமே வழங்க முடியும் என்று அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது. (ஓ.5,31)

## நிந்தவூர்...

கொழும்பு, ஏப். 28
அம்பாறை மாவட்டம், நிந்தவூர் பகுதியில் நேற்றுப் பிற்பகல் வீடொன்றில் இருந்து தற்கொலை அங்கிகள், வெடிபொருள்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன. பொலிஸ் ஊடகப் பிரிவு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.
பொலிஸார், சிறப்பு அதிரடிப் படையினர் இணைந்து நடத்திய தேடுதல் வேட்டையின்போதே, இவை மீட்கப்பட்டுள்ளன.
அத்தோடு, பதிவு செய்யப்படாத வாகனமொன்றும் மீட்கப்பட்டுள்ளது.
சம்மாந்துறைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை கைதுசெய்யப்பட்ட நபர்கள் வழங்கிய தகவலுக்கமைய இவை மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஓ.5)

# கந்தரோடை இளைஞர் கழகம் சம்பியன்

உடுவில் பிரதேச செயலக இளைஞர் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் ஒட்டுமொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் கந்தரோடை இளைஞர் கழக அணி 52 புள்ளிகளைப் பெற்று கிண்ணம் வென்றது.
சிறிமுருகன் இளைஞர் கழக அணி 49 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், ஞானமுருகன் இளைஞர் கழக அணி 43 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றன. (ம-23)

## கடற்கரை கரப்பந்தாட்டம் மன்னார் அசத்தலாட்டம்!

யாழ்ப்பாணம், ஏப்.28
மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கடற்கரை கரப்பந்தாட்டத் தொடரில் இரு பிரிவிலும் மன்னார் பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது.
சிலவத்துறை முத்தரிப்புத்துறை கடற்கரையில் அண்மையில் இறுதியாட்டங்கள் இடம்பெற்றன. ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார்; பிரதேச செயலக அணியை எதிர்த்து மடு பிரதேச செயலக அணி மோதியது. 2:0 என்ற செற் கணக்கில் மன்னார் பிரதேச செயலக அணி வெற்றிபெற்றது. பெண்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து மடு பிரதேச செயலக அணி மோதியது. 2:0 என்ற செற் கணக்கில் மன்னார் பிரதேச செயலக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## உடுவில் இளைஞர் கழகம் கயிறு இழுத்தலில் மகுடம்

யாழ்ப்பாணம், ஏப்.28
இளைஞர் கழகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட இருபாலாருக்குமான கயிறு இழுத்தல் போட்டியில் ஆண்கள் பிரிவில் உடுவில் இளைஞர் கழகம் கிண்ணம் வென்றது.
அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் உடுவில் பிரதேச இளைஞர் கழக அணி முதலாம் இடத்தையும், பருத்தித்துறை பிரதேச இளைஞர் கழக அணி இரண்டாம் இடத்தையும் பெற்றன.
பெண்களுக்கான இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக அணி முதலாம் இடத்தையும், உடுவில் பிரதேச இளைஞர் கழக அணி இரண்டாம் இடத்தையும் பெற்றன. (ம-23)

உலக துப்பாக்கி சுடுதல் போட்டி:

## அபிஷேக் வர்மா தங்கம் வென்றார்



சீன தலைநகர் பீஜிங்கில் பன்னாட்டு துப்பாக்கி சுடுதல் சம்மேளனம் சார்பில் உலகக் கிண்ண துப்பாக்கி சுடுதல் போட்டி நடைபெற்று வருகிறது. இதில், ஆண்களுக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டர் பிரிவில், இந்தியாவின் அபிஷேக் வர்மா 242.7 புள்ளிகள் பெற்று தங்கப் பதக்கம் வென்றார். ரஷ்ய வீரர் ஆர்டம் செர்னோசோவ் 240.4 புள்ளிகளைப் பெற்று வெள்ளிப் பதக்கமும். கொரிய வீரர் சியுங்வூ ஹான் 220 புள்ளிகளைப் பெற்று வெண்கலப் பதக்கமும் பெற்றனர்.
இந்த வெற்றியின்மூலம், ஒலிம்பிக் போட்டிக்கான இந்திய அணியில் அபிஷேக் வர்மா தனது இடத்தை உறுதி செய்தார்.

## விளையாட்டு பயிற்சியாளர்களுக்கு நியமனம் வழங்குதல் பிற்போனது!

யாழ்ப்பாணம், ஏப். 28
விளையாட்டுப் பயிற்சியாளர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.
விளையாட்டுப் பயிற்சியாளர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 29ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருந்தது. இந்த நிகழ்வே நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-422)

## லோட்ஸின் இருக்கைகள் அதிகரிக்கப்படுகின்றன

இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தின் இருக்கைகள் அதிகமாக்கப்படவுள்ளன.
இங்கிலாந்தில் அடுத்த மாதம் 30ஆம் திகதி உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பமாகின்றது. இந்தத் தொடரைக் காண்பதற்காக உலகின் பல பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இங்கிலாந்து நோக்கிப் படையெடுக்கவுள்ளனர். இதனால் அதிகளவான ரசிகர்களை உள்ளடக்கும் வகையில் லோட்ஸ் மைதானத்தில் இருக்கைகள் அதிகரிக்கப்படவுள்ளன. (ம)

## இன்றைய மோதல்கள்



யாழ்ப்பாணம், ஏப்:. 28
இளைஞர் கழகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்ட, கரப்பந்தாட்ட போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளன. கூடைப்பந்தாட்ட போட்டிகள் பழைய பூங்காவில் அமைந்துள்ள யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டத் திடலிலும், கரப்பந்தாட்ட போட்டிகள் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. (ம-23)

## ஆண்களுக்கான போட்டியில் பெண் களநடுவராக கிளைர் போலோசக்

ஆண்களுக்கான பன்னாட்டு ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் முதல் முறையாக களநடுவராக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கிளைர் போலோசக் என்ற பெண் நடுவர் பணியாற்றி வரலாறு படைத்துள்ளார்.
31 வயது ஆஸ்திரேலியரான கிளைர் போலோசக் இதற்கு முன்பு மகளிர் பன்னாட்டு ஒருநாள் கிரிக்கெட்டிட் போட்டியில் 15 போட்டிகளில் நடுவராகப் பணியாற்றியுள்ளார்.
இவர் முதன் முதலில் 2016ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான மகளிர் ஒருநாள் பன்னாட்டுப் போட்டியில் கள நடுவராகப் பணியாற்றினார்.
கடந்த வருடம் டிசெம்பர் மாதம் இவரும் தெற்கு ஆஸ்திரேலிய பெண் களநடுவரான எலாய்சே ஷெரிடன் இருவரும் சேர்ந்து அடிலெய்ட் ஸ்ட்ரைக்கர்ஸ்மெல்போர்ன் ஸ்டார்ஸ் ஆண்களுக்கான உள்நாட்டு ரி-20 தொடரில் களநடுவர் பணியாற்றினர்.




### குழந்தை...

ஒருவரும் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர். சாய்ந்தமருதில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் கட்டப்பட்ட வீட்டுத் திட்டத்திலேயே இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது. அந்தப் பகுதியிலுள்ள வீடொன்றை வாடகைக்குப் பெற்று, வெளியிடத்தைச் சேர்ந்த சிலர் தங்கியுள்ளனர்.
அவர்களின் நடவடிக்கைகளில் சந்தேகம் கொண்ட அந்தப் பகுதி மக்கள், இவர்கள் குறித்து அங்குள்ள பள்ளிவாசல் நிர்வாகத்திடம் முறையிட்டுள்ளனர். பள்ளிவாசல் நிர்வாகத்தினரும், பொதுமக்கள் சிலரும் இணைந்து, வீட்டில் இருந்தவர்களிடம் பேசியுள்ளனர். ஆனாலும், அவர்கள் முரண்பாடான வகையில் நடந்து கொண்டதன் காரணமாக, அந்தப் பகுதி கிராம அலுவலருக்கு, வீட்டில் தங்கியிருந்தோர் பற்றி அறிவித்ததாக அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கூறினார்.
இதன் பின்னர், அங்கு வந்த கிராம அலுவலரை வீட்டில் இருந்தோர் மிரட்டியதாகவும், இதனையடுத்து, அவர்கள் பற்றி பொலிஸாருக்கு அறிவித்ததாகவும் கூறப்படுகின்றது.
பொலிஸார் மற்றும் படையினர் வந்தபோது, வீட்டில் இருந்தவர்கள் குண்டை வெடிக்கச் செய்துள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர். கடந்த 21ஆம் திகதி சந்தேகநபர்களை கொழும்பு ஏ்தமட்டகொடவில் கைது செய்யச் சென்றபோது வெடிக்க வைத்ததுபோன்று தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.
படையினர் மீது அவர்களில் சிலர் துப்பாக்கித் சூடு நடத்தியதாகவும், பதிலுக்கு படையினரும் துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டதாகவும் தெரியவருகிறது.
'இரவு 7.00 மணியளவில் முதல் குண்டுச் சத்தம் கேட்டது. அதன் பின்னர் சற்று நேர இடைவெளியில் இரண்டாவது குண்டும், சிறிது நேரத்தில் மூன்றாவது குண்டும் வெடிக்கும் சத்தம் கேட்டது' என்று சாய்ந்தமருதைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.
சம்பவத்தில் வாடகை வீட்டில் தங்கிருந்த 15 பேர் உயிரிழந்துள்ளனர். அந்தப் பகுதியில் வசிக்கும் பாத்திமா அஸ்ரிபா எனும் 21 வயதுடைய பெண் ஒருவரும் துப்பாக்கிச் சூட்டில் தற்செயலாகச் சிக்கி உயிரிழந்துள்ளார்.
உறவினர் வீட்டுக்குச் சென்று விட்டு, தமக்குச் சொந்தமான முச்சக்கர வண்டியில் தனது கணவருடன் வீட்டுக் திரும்பிக் கொண்டிருந்த போதே, துப்பாக்கிச் சூட்டுக்கு மேற்படி பெண் இலக்காகி உயிரிழந்துள்ளதாக, அவரின் உறவினர்கள் தெரிவித்தனர்.
சாய்ந்தமருது பொலிவேரியன் பகுதியிலுள்ள வீட்டில் வாடகைக்குத் தங்கியிருந்தவர்கள் என நம்பப்படும் 15 பேரில், இருவரின் உடல்கள் வீட்டுக்கு வெளியிலும் ஏனைய உடல்கள் வீட்டுக்கு உள்ளேயும் காணப்பட்டன. வீட்டின் உள்ளே காணப்பட்ட சில உடல்கள் முற்றாக எரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வீட்டினுள் இறந்து கிடந்தவர்களில் பெண் ஒருவரினதும், இரண்டு சிறுவர்களினதும் உடல்களை அடையாளம் காணக் கூடியதாக இருந்தது.
இந்த சம்பவத்தில் சந்தேக நபர்கள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் வாகனமும் அவர்கள் தங்கியிருந்த வீட்டின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் சேதமடைந்து காணப்பட்டது. வீட்டின் வெளியில் சில சந்தேகத்துக்குரிய ஆடைகளின் பாகங்களையும் காணக்கூடியதாக இருந்தது.
இலங்கையில் தற்கொலைத் தாக்குதலை நடத்தியவர்கள் எனத் தெரிவித்து ஐ.எஸ். அமைப்பினர் வெளியிட்டதாகக் கூறப்படும் காணொலியில் காணப்படுவோர் அணிந்திருக்கும், ஆடைகளுக்கு ஒப்பானவையாக, சம்பவ இடத்தில் காணப்படும் ஆடைகளின் பாகங்கள் உள்ளன.
பொலிவேரியன் வீட்டுத்திட்டத்தில் பொலிஸார் மற்றும் படையினர் குவிக்கப்பட்டுள்ளதோடு, அங்கு தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், அந்தப் பகுதியில் வசிக்கும் அனைத்து பொதுமக்களையும் அருகிலுள்ள பாடசாலை வளாகத்துக்குள் அழைத்து, அவர்கள் பற்றிய பதிவுகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ.5)

**தனியார் நிறுவனம் ஒன்றுக்கு திட்டமிடல் அதிகாரி தேவை**

அரச நிறுவனங்கள், திணைக்களங்கள் என்பவற்றுடன் தொடர்பைப் பேண தகைமை உடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* மும்மொழியிலும் எழுத, பேச தேர்ச்சி உடையோருக்கு முன்னுரிமை
* தகுதி உடையோர் மின்னஞ்சலில் சுயவிபரக் கோவையை (கைத்தொலைபேசி இலக்கத்துடன்) அனுப்பவும்.

தொடர்பு
developjaffna2019@gmail.com

## என் மீது நம்பிக்கை வைத்துள்ளேன்
### வருண் ஆரோன் தெரிவிப்பு

நடப்பு ஐ.பி.எல்.தொடரில் கொல்கத்தா -ராஜஸ்தான் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் ராஜஸ்தான் அணி வீரர் வருண் ஆரோன் அந்த அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தார்.
அவர் நான்கு பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 20 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தார். இந்தப் போட்டியில் இதற்கான ஆட்டநாயகன் விருதும் இவருக்கு வழங்கப்பட்டது.
இதுகுறித்து வருண் ஆரோன் தெரிவிக்கையில்;
எல்லாமே சிறப்பாக உள்ளது. நான் எப்போதுமே என் மீது நம்பிக்கை வைத்துள்ளேன். இந்தப் போட்டிக்கு முந்தைய போட்டியில் ஒரு பந்துப்பரிமாற்றம்தான் வீசினேன். அதில் நான் தவறு ஏதும் செய்ததாக உணரவில்லை. எப்போதுமே சிறந்ததாகவே உணர்கிறேன். நான் இந்திய அணிக்காக விளையாட விரும்புகிறேன். இந்திய அணிக்கு வெற்றியை தேடிக்கொடுப்பதே எனது விருப்பம்- என்றார்.





# வில்லாரியல் அசத்தலாட்டம்

ஸ்பானியக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லா லிகா தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியொன்றில் வில்லாரியல் அணி 1: 0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.
ரியல்சொசைட்-வில்லாரியல்அணிகள்மோதிய முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளாலும் எந்தவொரு கோல்களும் பெறப்படவில்லை.
இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்தது முதல் இரண்டு அணி வீரர்களும் முட்டி மோதிக் கொண்டு ஆட ஆரம்பித்தனர். ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் 85ஆவது நிமிடத்தில் வில்லாரியல் அணி வீரர் மொரேனோ ஒரு கோலைப் போட 1: 0 என்ற கணக்கில் ரியல் சொசைட் அணியை வீழ்த்தி வில்லாரியல் அணி வெற்றி பெற்றது.

### வெளியேறும் வெளிநாட்டு வீரர்கள்
# களையிழக்குமா? ஐ.பி.எல். தொடர்

ஐ.பி.எல். போட்டி என்றாலே அதிரடிகள் சுவாரஸ்யம் நிறைந்ததாகவே காணப்படும்.
வெளிநாட்டு வீரர்களால் ஐ.பி.எல். போட்டித் தொடர்களைகட்டி வந்த நிலையில், அடுத்துவரும் நாட்களில் முக்கிய நட்சத்திர வீரர்கள் உலகக் கிண்ணப் போட்டிக்கு தயாராவதற்காக தங்களுடைய நாட்டுக்குத் திரும்புகின்றனர். இதனால்,ஐ.பி.எல். போட்டி களைய்யிழந்துவிடுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.
'பிளேஓவ்' சுற்று தொடங்கியபின் நட்சத்திர வீரர்கள் இல்லாமல் போட்டி சுவாரஸ்யம் குறைந்துவிடக்கூடாது என்பதற்காக மாற்று வீரர்களை கொண்டுவரவும் அணிகளின் நிர்வாகிகள் தயாராகி வருகின்றனர்.
ஐ.பி.எல். போட்டியில் விளையாடும் 8 அணிகளில் நியூசிலாந்து, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், மேற்கிந்தியத் தீவுகள், ஆப்கானிஸ்தான், இலங்கை ஆகிய அணிகளின் வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். மே மாதம் ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ணப் போட்டிக்கு தெரிவாகியுள்ள வீரர்கள் தங்களை தயார் படுத்திக்கொள்ள பயிற்சி முகாமுக்கு தங்கள் தாய்நாட்டு அணிக்கு விரைவில் திரும்ப உள்ளனர்.
அந்த வகையில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் வீரர்கள் பட்லர் ஏற்கனவே தாய்நாடு சென்றுள்ளார். பென்ஸ்டோக், ஆர்சர், சிமித் அடுத்து வரும் போட்டிகளில் ஆடமாட்டார்கள்.
சன்ரைஸ் அணியின் பலம் டேவிட் வோர்னர், பெயர்ஸ்டோ அவர்கள் இருவரும் பெங்களூருக்கு எதிரான போட்டியோடு தாய்நாடு செல்லவுள்ளனர்.
பெங்களூர் அணியில் மொயின் அலி, ஸ்டாய்னிஸ் வெளியேறுகின்றனர். ஏற்கனவே டேல் ஸ்டெயின் காயம் காரணமாக வெளியேறியுள்ளார்.
மும்பை அணியின் துருப்புச் சீட்டாக விளங்குபவர் மலிங்க, அத்துடன் பொலார்ட், பெஹரன்டாய் ஆகியோர் தாய்நாடு திரும்புகின்றனர்.
சென்னை அணியில் இம்ரான்தாஹீர், டூ பிளஸிஸ், கொல்கத்தா அணியில் ரசல், பிரித்வைட், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியில் கிறிஸ் கெய்ல், டேவிட் மில்லர், டெல்லி அணியில் ராபாடாவும் உலகக் கிண்ண போட்டிக்கான தயார்படுத்தல்களுக்காக தங்களுடைய சொந்த நாட்டுக்குத் திரும்பவுள்ளனர்.

### பிறீமியர் லீக் அணியில்
# மான்செஸ்டர் வீரர் பால் போக்போவு

2018-2019ஆம் ஆண்டு தொடரில் சிறப்பாக விளையாடிய வீரர்களை கொண்டு அறிவிக்கப்படும் பிறீமியர் லீக் கால்பந்து அணியில் மான்செஸ்டர் யுனைடெட் அணி வீரர் பால் போக்போவுக்கு இடம் பிடித்துள்ளார்.
இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் நாட்டில் உள்ள கால்பந்து கழக அணிகளுக்கு இடையில் இடம்பெறும் உலகின் மிகப்பெரிய தொடர்களில் ஒன்று இங்கிலீஷ் பிறீமியர் லீக். இதில் மான்செஸ்டர் யுனைடெட், மான்செஸ்டர் சிட்டி, லிவர்பூல் உள்பட பல முன்னணி அணிகள் பலப் பரீட்சை நடத்துகின்றன.
இதில் சிறப்பாக விளையாடும் வீரர்களை கொண்டு பிறீமியர் லீக் அணி அறிவிக்கப்படும். இந்த அணியில் மான்செஸ்டர் யுனைடெட் அணியின் முன்னணி வீரரான பால் போக்பா இடம் பிடித்துள்ளார். மான்செஸ்டர் சிட்டி, லிவர்பூல் அணிகளைத் தவிர்த்து இடம் பிடித்த ஒரே வீரர் இவர்தான்.
பிறீமியர் லீக் அணியில் இடம் பிடித்துள்ள வீரர்கள் விவரம்: எடர்சன் (மான்செஸ்டர் சிட்டி), டிரெண்ட் அலெக்சாண்டர்அர்னால்டு (லிவர்பூல்), விர்ஜில் வான் திஜ்க் (லிவர்பூல்), அய்மெரிக் லபோர்ட் (மான்செஸ்டர் சிட்டி), ஆண்டி ராபர்ட்சன் (லிவர்பூல்), பால் போக்பா (மான்செஸ்டர் யுனைடெட்), பெர்னார்டோ சில்வா (மான்செஸ்டர் சிட்டி), பெர்னாண்டினோ (மான்செஸ்டர் சிட்டி), செர்ஜியோ அக்யூரோ (மான்செஸ்டர் சிட்டி). ரஹீம் ஸ்டெர்லிங் (மான்செஸ்டர் சிட்டி), சாடியோ மானே (லிவர்பூல்).

# டோனி இல்லாதது மிகப் பெரிய ஊக்கமளித்தது
### ரோகித் சர்மா வெளிப்படை

சென்னை - மும்பை அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் சென்னை அணி படுதோல்வியடைந்தது. சென்னை அணியை டோனி இல்லாததால் சுரேஷ் ரெய்னா வழி நடத்தியிருந்தார்.
இந்த வெற்றி குறித்து மும்பை அணித், தலைவர் ரோகித் சர்மா தெரிவிக்கையில்;
நாணயச் சுழற்சியில் தோற்றும் நாங்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இருக்கிறோம். நாங்கள் முதல் துடுப்பாட்டம் செய்வதா? அல்லது பந்து வீசுவதா? என்பதை அறிந்து இருந்தோம். நாங்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினோம். வீரர்கள் அனைவரும் சிறப்பாகச் செயற்பட்டனர்.
டோனி ஆடாதது எங்களுக்கு மிகப் பெரிய ஊக்கத்தை அளித்தது. எந்த ஒரு அணிக்கு எதிராகவும் அவர் இல்லாமல் இருந்தால் அந்த அணிக்கு சாதகமானதே. அவரை கட்டுப்படுத்துவது சவாலானதே - என்றார்.






# பார்சிலோனா- கடாவ்பி ஆட்டம் கோல்கள் இல்லை



ஸ்பானியக்கழகங்களுக்கிடையில் இடம்பெற்ற வரும் லா லிகா தொடரில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற போட்டியொன்றில் கடாவ்பி - ரியல் மட்ரிட் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் இரு அணிகளாலும் எந்த வொரு கோல்களும் பெறப்படவில்லை.

முதல் பாதி ஆட்டத்தில் பார்சிலோனா வீரர்கள் கோல்கள் போடுவதற்கான வாய்ப்புக்கள் காணப்பட்ட போதிலும் அந்த அணியின் வீரர்கள் அதனை தவற விட்டிருந்தார்கள். இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் போட்டி போட்டுக் கொண்டு ஆடிய போதிலும் கோல்கள் எதனையும் பெறுவதற்கான வாய்ப்புக்கள் அமையவில்லை. இதனால் இரு அணிகளாலும் எந்தவொரு கோல்க ளும் பெறப்படாத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

**வேலையாள்கள் தேவை**

காவலாளிகள்,
தோட்டபராமரிப்பாளர்கள் உடன்
தேவை. தங்குமிடவசதி
செய்துதரப்படும்.

**தொடர்பு**
**071 617 3173**

**சிங்கள வகுப்புகள்**

❖பாடசாலை மாணவர்கள்
❖பல்கலைக்கழக மாணவர்கள்
❖தொழில் புரிவோர்

**077 640 8622** (CS/24996) (11,17)

**பெண் உதவியாளர் தேவை**

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள **Mini Super Market** இற்கு பெண் உதவியாளர் தேவை. (வெளிமாவட்டத்தில் உள்ளவர்களுக்கு தங்குமிட வசதியுண்டு)
வயதெல்லை 30 இற்குள். (CS/24956) (11,17)

**077 335 0910**

**பாற்பண்ணை விற்பனைக்கு/ குத்தகைக்கு**

யாழ் மாதகலில் 15பரப்புக் காணியில்
இயங்கும் பாற்பண்ணை
விற்பனைக்கு/ குத்தகைக்கு. (CS 24976) (4,17)

**077 416 5473**

# அர்ஜுன விருதுக்கு இந்திய கிரிக்கெட் வீரர்கள் பெயர்கள் பரிந்துரைப்பு




விளையாட்டுத் துறைகளில் சிறந்த சாதனை படைக்கும் வீரர்களுக்கு அங்கீகாரம் வழங்கி கௌரவிக்கும் வகையில்,இந்திய அரசினால் அர்ஜுனா விருது வழங்கப்படுகிறது. இவ்வி ருதுக்கு தேர்வு செய்யப்படுபவர்களுக்கு, வில்வித்தையில் சிறந்த வீரரான அர்ஜுன னின் வெங்கலச் சிலையோடு, ரூ.5 லட்சம் பணப்பரிசும் வழங்கப்படுகின்றது.

இந்த விருதுக்கு அந்தந்த விளையாட்டு அமைப்புகள் சார்பில் தகுதிவாய்ந்த வீரர், வீராங்கனைகள் தேர்வு செய்யப்பட்டு இந்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்படுவர்.

அந்த வகையில் இந்த ஆண்டுக்கான அர் ஜுனா விருதுக்கு, கிரிக்கெட் வீரர்கள் ரவீந்திர ஜடேஜா, பும்ரா, முகமது ஷமி மற்றும் கிரிக் கெட் வீராங்கனை பூனம் யாதவ் ஆகியோ ரின் பெயர்களை இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டு சபை பரிந்துரைத்துள்ளது.

**மரண அறிவித்தல்**



உலகத்தோடு இணைந்தது
15 . 06 . 1936

இறையோடு இணைந்தது
26 . 04 . 2019

**திருமதி சரஸ்வதி நவரத்தினம்**

யாழ். குப்பிளானைப் பிறப்பிடமாகவும், யாழ். கலைமணி வீதி, கட்டப்பிராயை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி நவரத்தினம் 26.04.2019 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நவரத்தினத்தின் பாசமிகு மனைவியும், கிருஸ்ணாம்பாள் (பட்டு), இந்திரன், காலஞ்சென்ற குமரகுருபரன் மற்றும் கிருஸ்ணவேணி (கனடா), முருகமூர்த்தி, முருகவேள், முருகதாஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், பாலகுலேந்திரன், சியாமளா, செந்தில்குமரன் (கனடா), சந்திரவதனா, வரலட்சுமி, தயாநிதி (கனடா), ஆகியோரின் அன்பு மாமியும், ரமேஸ், காலஞ்சென்றவர்களான குகதாஸ், குருதாஸ் மற்றும் கருணதாஸ், நரேந்திரன், ஜெயதாஸ் (பிரான்ஸ்), விதுஷா, பிரியதர்சினி, அஜிதா, உஷாந்தினி, கீர்த்தனா, சதீஸ்கண்ணன், அஜித்கண்ணன், அஜந்தன், லக்ஷிகா, நிர்த்திகா, நிதுஷா, நிருத்திகன், கஜனிதரன், கவிராஜ், கனிமருதன், ஜெயவிஸ்ணு, சனுஷிகா (கனடா), கீர்த்திகன், மதுஷிகா, யசிகா, நிலக்ஷிகா, அஜித்தன் (கனடா), தனுயா, தருண், திஷாண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சுமிர்தன் , காவியா, றக் ஷனா, ரித்திகா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**கலைமணி வீதி,**
**கட்டப்பிராய், யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**077 444 0161**

# பாகிஸ்தான் - இலங்கை கிரிக்கெட் தொடர் இடைநிறுத்தம்

வெடிகுண்டு தாக்குதல்களால் நாட்டில் தொடர்ந்து பதற்றம் நிலவி வருவதால், பாகிஸ்தானுக்கு எதிராக இலங்கையில் நடைபெறும் கிரிக்கெட் தொடரை இலங்கை கிரிக்கெட் சபை அதிரடியாக நீக்கியுள்ளது. வீரர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று அறி விக்கப்பட்டுள்ளது.

19 வயதுக்குட்பட்டோருக்கான பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இலங்கைக்கு சுற்றுப்பய ணம் மேற்கொண்டு, 4 நாள்கள் கொண்ட 2 டெஸ்ட் போட்டிகள் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் இரு அணிகளும் விளையாட விருந் தன.

ஆனால், தற்போதைய சூழ்நிலையில், போட் டியை நடத்துவது சரியாக இருக்காது என்ப தால், இந்த் போட்டித் தொடர்கள் காலவரை யின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

19 வயதுக்குட்பட்டோருக்கான பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அடுத்து ஜூன் , ஜூலை மாதங்களில் தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுவிளையாடவுள்ளது.

# இங்கிலாந்து அணியில் பென் போக்ஸ் இணைப்பு



இங்கிலாந்து அணியில் இடம் பிடித்திருந்த சாம் பில்லிங்ஸ் காயம் அடைந்ததால், அவ ருக்குப் பதிலாக பென் போக்ஸ் இணைக்கப் பட்டுள்ளார்.

உலகக் கிண்ணப் போட்டிக்கு முன் இங்கி லாந்து அணி பாகிஸ்தானுக்கு எதிராக ரி-20 மற்றும் ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளை யாட உள்ளது. இங்கிலாந்து அணியில் இலக்குக் காப்பாளர், துடுப்பாட்ட வீரரான சாம் பில்லிங்ஸ் இடம் பிடித்திருந்தார். இவ ருக்கு உள்ளூர் போட்டியின் போது காயம் ஏற்பட்டது. இதனால் பென் போக்ஸ் அவருக் குப் பதிலாக அணியில் இணைக்கப்பட்டுள் ளார்.

பென் போக்ஸ் இலங் கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அறிமுகம் ஆனார். அந்தத் தொட ரில் சதம் அடித்து அசத்தி யிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.